மகாவித்துவான்

# ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் சரித்திரச் சுருக்கம்

(இரண்டாம் பாகம்)

★

மகாமகோபாத்தியாய

டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

திருவான்மியூர் : : சென்னை-41

T03207

R001H03

மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலைய வெளியீடு-37

உ

ஸ்ரீ தாயுமானவர் துணை

திருவாவடுதுறையாதீனத்து மகாவித்துவான்

திரிசிரபுரம்

# ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரச் சுருக்கம்

(இரண்டாம் பாகம்)

மகாவித்துவான் அவர்களின்
151-ஆம் பிறந்தநாட் பெருமங்கல விழா நினைவு வெளியீடு

இது
ஷை பிள்ளையவர்கள் மாணாக்கர்
மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி
டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள்
எழுதியதன் சுருக்கம்

மகாமகோபாத்யாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
திருவான்மியூர்] [சென்னை - 41

உரிமை பதிவு
முதற் பதிப்பு : 1965

விலை ரூ. 2-25

# பதிப்புரை

மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்களால் விரிவாக எழுதி 1934-ல் வெளியிடப் பெற்ற மகாவித்துவான் ஸ்ரீ மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் இரண்டாம் பாகத்தின் சுருக்க மான பதிப்பு இது. முதற் பாகம் போலவே இதுவும் முக்கிய மான செய்திகளும் தொடர்பும் விடுபடாமலும், படிப்பவர்க்கு ஊக்கமளிக்கும் வகையிலும் ஸ்ரீ ஐயரவர்கள் சொற்களிலேயே அமைக்கப் பெற்றுள்ளது.

ஸ்ரீ ஐயரவர்கள் மகாவித்துவானவர்களிடம் மாணுக்கராகி அவர்களோடு தொடர்பு கொண்டது முதல் இறுதிக் காலம் வரை (1871-76) உள்ள நிகழ்ச்சிகள் இப்பாகத்தில் அடங்கி யுள்ளன. இவை படிப்போர்க்கு மிக்க சுவை பயப்பனவாகும். இவ்விரண்டு பாகங்களும், ஸ்ரீபிள்ளையவர்களுடைய 151-ஆவது பிறந்தநாட் பெருமங்கல விழா வன்று (31–3-1965) நினைவு வெளியீடாக ஸ்ரீ ஐயரவர்கள் நூல் நிலையத்தாரால் வெளியிடப் பெறுகின்றன.

மூலப் பதிப்பில் பிற்சேர்க்கையாகவுள்ள சில - சுருக்கங் கருதி - இப்பதிப்பில் விடப்பட்டன. மாணவருலகுக்கு இப் பதிப்பு மிகவும் பயனுடையதாகும்.

இதனை வெளியிடுவதற்கு அன்பு கூர்ந்து இசைவு அளித்த உரிமையாளர் உயர்திரு. க. சுப்பிரமணிய ஐயர் B.A., அவர் களுக்கு இந் நூல் நிலையம் மிக்க நன்றியுடையது.

நூல் நிலையத்தார்,

# பொருளடக்கம்


பக்கம்

ஸ்ரீ ஐயரவர்களின் முகவுரை ... V-IX

ஸ்ரீ பிள்ளையவர்கள் ஏட்டுச் சுவடிகளில் எழுதிய எழுத்தும் கடிதங்களில் போடும் கையெழுத்தும் ... X

1. என்னை ஏற்றுக்கொண்டது ... 1
2. நான் பாடங் கேட்கத் தொடங்கியது ... 9
3. திருவாவடுதுறை நிகழ்ச்சிகள் ... 20
4. பட்டீச்சுரம் போய் வந்தது ... 26
5. திருவாவடுதுறைக் குருபூஜை நிகழ்ச்சிகள் ... 34
6. திருவாவடுதுறை வாசம் ... 37
7. பட்டீச்சுர நிகழ்ச்சிகள் ... 54
8. திருப்பெருந்துறைப் புராண அரங்கேற்றம் ... 60
9. பல ஊர்ப் பிரயாணம் ... 68
10. தேக அசௌக்கிய நிலை ... 75
11. இயல்புகளும் புலமைத் திறனும் ... 88

சிறப்புப் பெயர் முதலியவற்றின் அகராதி ... 111

உ

கணபதி துணை

# முகவுரை

---

தேவாரம்

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர்

திருச்சிற்றம்பலம்

நன்றுடை யானைத் தீயதி லானை நரைவெள்ளே
றென்றுடை யானை யுமையொரு பாக முடையானைச்
சென்றடை யாத திருவுடை யானைச் சிராப்பள்ளிக்
குன்றுடை யானைக் கூறவெ னுள்ளங் குளிரும்மே.

திருச்சிற்றம்பலம்

உடலை வளர்த்தற்குரிய பலவகையான பொருள்களை வழங்கும் அறங்களினும் உள்ளத்தின் உணர்வு வளர்ச்சிக்குக் காரணமான கல்வியை வழங்கும் வள்ளன்மை சிறந்ததாக ஆன்றோர்களால் எக்காலத்தும் மதிக்கப்படுகின்றது. ஒருமைக்கண் கற்ற கல்வி எழுமையும் பயன் தருதலால் அதனை வழங்கும் பெரியோர்கள் உலகில் உயர்ந்தவர்களாகவும் பேருபகாரிகளாவும் எண்ணப்படுகின்றனர். அவர்கள் செய்த பேரறத்தின் பயனாகவே கலைவளம் சிறந்து விளங்குகின்றது. மக்களுடைய மன உணர்வைப் பண்படுத்தும் அப்பெரியோர்கள் செய்த அருஞ்செயல்களும் இயற்றிய நூல்களும் எல்லோராலும் போற்றப்பட்டு வருவது யாவரும் அறிந்ததேயாகும். கால தேச வர்த்தமானங்கள் எங்ஙனம் மாறினும் அத்தகைய புலவர்களுடைய புகழ் குன்றாமல் ஒரே நிலைமையில் நிலவி வருகின்றது. சிலருடைய புகழ் வளர்ச்சியுற்றும் வருகின்றது.

இங்ஙனம் புகழ்பெற்றுத் தமிழ்நாட்டில் விளங்கியவர்களுள் திருவாவடுதுறை ஆதீனத்து மகாவித்துவானும் என்

னுடைய தமிழாசிரியரு மாகிய ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர் களும் ஒருவராவர். இவர்கள் 19-ஆம் நூற்ருண்டில் 1815-ஆம் வருஷம் முதல் 1876-ஆம் வருஷம் வரையில் இருந்து விளங் கியவர்கள். இவர்களுடைய சரித்திரத்தை எழுதிப் பதிப்பித்து வந்ததில் நான் பாடங்கேட்கப் போகுமுன் நிகழ்ந்த வரலாறுகள் (1815 முதல் 1870 வரையில் உள்ளவை) முதற் பாகத்தில் வெளியிடப் பெற்றுள்ளன. ஏனைய வரலாறுகளே இரண்டாம் பாகமாகிய இப்புத்தகத்தில் உள்ளவை.

தமிழ்ப் புலவர்கள் வரலாற்றின் நிலைமையைப் பற்றி நான் சொல்லவேண்டிய விஷயங்களை யெல்லாம் முதற்பாகத்திற் சொல்லிவிட்டமையால் அவற்றை மீட்டும் இங்கே தெரிவிக்க வில்லை.

பிரஜோற்பத்தி வருஷம் சித்திரைமாதம் (1871 ஏப்ரில்) இப் புலவர்பிரானிடம் நான் பாடங்கேட்க வந்து சேர்ந்தேன். அது முதல் இவர்கள் சிவபத மடைந்த காலம் வரையில், இடையே சில மாதங்கள் நீங்கலாக, இவர்களுடனே இருக்கும் பெரும் பேறு பெற்றேன்.

இச் சரித்திரத்தை எழுதிவரும்பொழுது என்னுடைய மனம் பழைய காட்சிகளை மீண்டும் கண்டு கனிந்துகொண்டே யிருந்தது. இக்கவிஞர்பிரான் என்பால் வைத்திருந்த பேரன்பு இவருடைய செயல் ஒவ்வொன்றையும் என் நெஞ்சிற் பதித்து விட்டது. அந்த நினைவே இப்பாகத்திற் காணப் படும் செய்திகளை எழுதுவதற்குத் துணையாக இருந்தது. முதற் பாகத்தின் முகவுரையிற் குறிப்பித்துள்ளபடி பல இடங்களிற் சென்று சென்று தேடிய முயற்சியினுற் கிடைத்த செய்தி களுள் சில இந்தப் பாகத்திற்கும் உதவியாக இருந்தன. இவர்கள் சொல்லச் சொல்ல என் கையினுலே எழுதிய தனிப் பாடல்கள் அளவிறந்தன; அக்காலத்தில் அவற்றைப் பாது காக்கவேண்டு மென்னும் நோக்ககம் இல்லாமையால் அவற்றை நான் தொகுத்து வைக்கவில்லை. என்னுடைய நினைவி லுள்ளவைகளும் வேறு வகையிற் கிடைத்தவைகளு மான செய்யுட்கள் இதன்கண் அமைந்துள்ளன. அவற்றிற்கு

இன்றியமையாத இடங்களிற் குறிப்புரைகளும் எழுதப் பட்டிருக்கின்றன.

இந்தப் புத்தகத்தால், இக்கவிஞர் கோமான் திருவாவடு துறை யாதீனத்து ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரால் நன்கு மதிக்கப்பெற்று விளங்கினமையும், தம்பால் வந்து வேண்டின வர்களுக்குச் செய்யுள் இயற்றிக் கொடுத்துப் பயன் பெறும்படி செய்தமையும், யாரிடத்தும் எளிதிற் பழகிவந்தமையும், மாணாக்கர்களிடத்தில் அளவற்ற அன்பு காட்டிவந்தமையும், எந்த வகையிலும் அவர்களை ஆதரித்துப் பாடஞ் சொல்வது இவர்களுடைய பெரு நோக்கமாக இருந்தமையும், இவர்கள் ஒப்புயர்வற்ற குணங்களுடன் சிறப்புற்று விளங்கினமையும், இவர்களுடைய காலப்போக்கும், பல செல்வர்கள் இவர்களை அன்போடு ஆதரித்துப் போற்றிய திறனும், பல வகையான உபகாரிகளுடைய தன்மைகளும், அக்காலத்தில் தமிழ் வித்துவாள்களிடத்தில் தமிழ் மக்கள் வைத்திருந்த பேரன்பும், வடமொழி தென்மொழி வித்துவான்கள் ஒருவரோடொருவர் மனங்கலந்து பழகினமையும், தமிழ்நாடு இப்புலவர் சிகாமணி யால் இன்ன இன்ன வகையிற் பயனுற்ற தென்பதும், பிறவும் விளங்கும்.

* * * *

இருபத்தெட்டுக் காப்பியங்களும் நாற்பத்தைந்து பிரபந் தங்களும் இவர்கள் இயற்றினவாக இப்பொழுது தெரிய வரு கின்றன. இவர்கள் இயற்றிய தனிப்பாடல்களோ அளவு கடந்தன. இவ்வளவு மிகுதியான நூல்களை இயற்றியவர்கள் தமிழ்ப்புலவர்களில் வேறு யாருமில்லை.

* * * *

இந்த வரலாற்றை எழுதுவதற்குக் கடிதங்கள். நூல்கள், ஏட்டுச்சுவடிகள் முதலியவற்றை அளித்தும் தமக்குத் தெரிந்த செய்திகளைச் சொல்லியும் எனக்கு உதவிபுரிந்த அன்பர்களை நான் ஒரு போதும் மறவேன்.

இச்சரித்திரத் தலைவர்களாகிய கவிஞர் கோமானைப்பற்றி நினைக்கும்பொழுதெல்லாம் இவர்களுடைய தளர்ந்த வடிவமும், மாணாக்கர் கூட்டத்திற்கு இடையில் வீற்றிருந்து தமிழ்ப்பாடம் சொல்லுங் காட்சியும், தமிழ்ச்செய்யுட்களை எளிதிற் புனையும்

தோற்றமும் என் அகத்தே தோன்றுகின்றன. இனி அத்தகைய காட்சிகளையும், இவர்களைப்போல அருங்குணமும் பெரும்புலமையும் வாய்ந்தவரையும் எங்கே பார்க்கப்போகிறோமென்ற ஆராமை மீதூருகின்றது. 'இவர்கள்பாற் கல்வி பயின்ற காலத்திலேயே இன்னும் பல விஷயங்களைத் தெரிந்து கொண்டிருக்கலாமே!' என்றும் இரங்குகின்றேன்.

பெருங் கவிஞராகிய இவர்களுடைய புலமைத் திறத்தை நாம் அறிந்து மகிழவேண்டுமென்றால் இவர்களுடைய நூல்களைப் படிக்கவேண்டும். பழம் புலவர்களுடைய வரலாற்றை அறிந்து, "அவர்கள் பெருங் கவிஞர்கள்" என்று பாராட்டும் அளவிலே நின்றுவிடாமல் அத்தகையவர்களுடைய நூல்களைப் படித்தலும், படிப்பித்தலுமே அவர்கள் திறத்திற் செய்யும் கைம்மாறாகும். இவர்களுடைய நூல்களிற் சில அச்சிடப்படவில்லை. பல அச்சிடப்பட்டும் இப்போது கிடைக்கவில்லை. ஆதலால் அவற்றையெல்லாம் ஒவ்வொன்றாக அச்சிட்டு வெளிவரச் செய்தல் தமிழ்மக்களின் கடமையாகும்.*

தமிழ்மொழியறிவின் வளர்ச்சியைக் குறித்துப் பலவேறு வகையில் தம் உடல், பொருள், ஆவி யனைத்தையும் ஈடுபடுத்திப் புகழுடம்புடன் விளங்குகின்ற இக்கவிச் சக்கரவர்த்தியின் திருநாளைத் தமிழ்நாட்டில் சில அன்பர்கள் கொண்டாடி வருவது மிக்க மகிழ்ச்சியை அளிக்கின்றது.

முதற்பாகத்தை எழுதும்பொழுதும் பதிப்பிக்கும்பொழுதும் உடனிருந்து எழுதுதல் முதலிய உதவிகளைப் புரிந்த சென்னை, கிறிஸ்டியன் காலேஜ் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் சிரஞ்சீவி வித்துவான் வி. மு. சுப்பிரமணிய ஐயரும், 'கலைமகள்' துணையாசிரியர் சிரஞ்சீவி வித்துவான் கி. வா. ஜகந்நாதையரும் இந்தப் பாகத்திற்கும் அங்ஙனமே உதவி புரிந்தார்கள். அவர்களுக்கு எல்லா நலங்களையும் அளித்தருளும் வண்ணம் தமிழ்த் தெய்வத்தைப் பிரார்த்திக்கின்றேன்.

---

* இதனைக் கண்ணுற்ற ஆற்றூர் ஸ்ரீமான் இரத்தினசபாபதி முதலியாரவர்களும், விளத்தொட்டி ஸ்ரீமான் இராமலிங்கம் பிள்ளையவர்களும் முறையே ஆற்றூர்ப் புராணத்தையும் விளத்தொட்டிப் புராணத்தையும் அச்சிடும்படி செய்தார்கள்.

இதன் முதற்பதிப்பு 1934-ஆம் ஷு வெளிவந்தது. தமிழ் நாட்டார் இச்சரித்திரத்தை விரும்பிப் படித்துப் பாராட்டி எனக்கு ஊக்கமளித்தனர். தம்முடைய மகிழ்ச்சியைக் கடிதங்களாலும், வாழ்த்துரைகளாலும் வெளியிட்ட அன்பர்கள் பலர்.

இதனைச் சில பரீக்ஷைகளுக்குப் பாடமாக வைத்த சென்னை ஸர்வ கலாசாலையாரிடத்தும் அண்ணாமலை ஸர்வ கலாசாலையாரிடத்தும் மிக்க நன்றி பாராட்டுகின்றேன்.

இச்சரித்திரத்தி லுள்ள சில வரலாறுகளைச் சில அன்பர்கள் என் அனுமதி பெற்றுத் தாங்கள் வெளியிட்ட பாட புத்தகங்களிற் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் மகளின் திருவழகைக் காவியங்களாகிய ஓவியங்களில் அமைத்து மகிழ்ந்த வித்தகரும், மாணக்கருடைய அறிவாகிய நிலத்தில் அன்பு நீர் பாய்ச்சித் தமிழாகிய வித்திட்டுத் தமிழ்ப் பெரும் பயிரை வளர்த்த சொல்லேருழவரும், காலம் இடம் நிகழ்ச்சி என்பவற்றால் வரும் துன்பங்களால் சோர்வுறாமலும் தம்முடைய மானமும் பெருமையும் குறையாமலும் நின்ற குணமலையும் ஆகிய பிள்ளையவர்களுடைய பெரும் புகழும், அரிய நூல்களும் தமிழ் மக்களால் நன்கு உணரப்பெற்று மேன்மேலும் விளக்கமுற்று வாழ்வனவாக!

சங்க காலம் முதல் தமிழ்மொழியை வளப்படுத்திய புலவர் பெருமக்களின் வரலாறுகளை முறையாக வெளியிட வேண்டுமென்னும் எண்ணம் நெடுங்காலமாக எனக்குண்டு. இச்சரித்திரத்தை நிறைவேற்றி வைத்த இறைவன் திருவருள் அவ்வெண்ணத்தையும் நிறைவுறச் செய்யுமென்று நம்புகின்றேன்.

'தியாகராஜ விலாசம்'
திருவேட்டீசுவரன்பேட்டை,
16-6-1940.


இங்ஙனம்
வே. சாமிநாதையர்.



இது, பிள்ளையவர்கள் எழுதிய தொல்காப்பியச் சொல்லதிகார இளம்பூரணர் உரை ஏட்டுச் சுவடியிலுள்ள ஓரேட்டின் ஒரு பக்கத்தின் படம். இதில் கிளவியாக்கம் 35, 36-ஆம் சூத்திரங்களும் அவற்றின் உரையும் அடங்கியுள்ளன.



பிள்ளையவர்கள் கடிதங்களில் போடும் கையெழுத்து



மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்

உ

கணபதி துணை

திரிசிரபுரம் மகாவித்துவான்

# ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்

இரண்டாம் பாகம்

---

## 1. என்னை ஏற்றுக்கொண்டது

---

### எனது இளமைக் கல்வி

என்னுடைய இளமைக் காலந்தொடங்கி எனக்குத் தமிழ் படிக்கவேண்டுமென்ற விருப்பமே மிகுதியாக இருந்து வந்தது. என் தந்தையாரே எனக்கு முதலில் தமிழாசிரியராக இருந்து நிகண்டு சதகம் முதலிய கருவி நூல்களைக் கற்பித்து வந்தனர். பின்பு அரியிலூர்ச் சடகோபையங்கார் முதலிய சில வித்துவான்களிடத்திற் கற்றுக்கொள்ளவுஞ் செய்வித்தனர். சில தமிழ்ப் பிரபந்தங்களையும் இலக்கணங்களையும் நான் அந்த வித்துவான்கள்பால் முறையே கற்றுக்கொண்டேன். பின்பு செங்கணமென்னும் ஊரி லிருந்த விருத்தாசல ரெட்டியாரென்ற கனவானிடம் பாடங் கேட்கத் தொடங்கினேன். அவர் பல நூல்களிலிருந்து அநேக விஷயங்களை அப்பொழுதப்பொழுது சொல்லி வந்தார். அதனால் நான் தமிழ் நூல்களின் பரப்பை அறிந்துகொண்டதன்றி மேலும்மேலும் பல நூல்களிற் பயிலவேண்டுமென்னும் விருப்பத்தை அதிகமாகக் கொண்டேன். அதனைக் கண்ட அவர், "என்னாற் சொல்லக்கூடிய நூலகளையெல்லாம் நான் சொல்லிவிட்டேன். இனி என்னாற் பாடஞ் சொல்ல

இயலாது. திருவாவடுதுறை யாதீன வித்துவானாக விளங்கி வரும் திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் உங்கள் குமாரரை அழைத்துச் சென்றால் பல தமிழ் நூல்களை நன்றாகக் கற்று விருத்தியடைதற்கு அனுகூலமாகும்" என்று என் தகப்பனாரிடம் அடிக்கடி சொல்லி வந்தார். முன்பே பிள்ளையவர்களைப்பற்றிப் பலர் வாயிலாகக் கேள்வியுற்று, 'அப் புலவர்பிரானிடம் படிக்குங் காலம் எப்போது கிட்டுமோ!' என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்த என்னுடைய விருப்பத்தை முற்றுவித்தற்கு அவர் சொல்லிய வார்த்தை மிகவும் உபயோகமாக இருந்தது. என் பிதாவும் அவ்வாறே செய்விக்க வேண்டுமென்று எண்ணி அதற்குரிய முயற்சியுட னிருந்தார். அப்போது எனக்குப் பிராயம் 17

## நான் பிள்ளையவர்களைக் கண்டது

இறைவன் திருவருள் கூட்டினமையால் என் தந்தையாரின் முயற்சியும் எனது விருப்பமும் பயன்பெறும் காலம் வந்து வாய்த்தது. பிரஜோத்பத்தி வருஷம் சித்திரைமாத முதலில் (1871 ஏப்ரலில்) என்னை உடனழைத்துக்கொண்டு தந்தையார் மாயூரம் சென்று நல்ல நாளொன்றன் பிற்பகலில் பிள்ளையவர்களுடைய வீட்டிற்குப் போனார்.

அப்பொழுது அங்கே பிள்ளையவர்களுடைய தவசிப்பிள்ளை ஒருவர் வரவே அவரைப் பார்த்து என் தந்தையார், "எங்களுடைய வரவைப் பிள்ளையவர்களுக்குத் தெரிவியுங்கள்" என்று கேட்டுக்கொண்டனர். அவர் சென்று தெரிவித்தவுடன் பிள்ளையவர்கள் நாங்கள் இருந்த இடத்துக்கு வந்தார்கள்.

நெடுநாளாக இப்புலவர்பெருமானைக் காணவேண்டுமென்ற ஆவல் மிகுதியாக இருந்துவந்தமையால் இவரைக் கண்டவுடன் என்னை அறியாமலே ஒருவகை மகிழ்ச்சியும் அன்புணர்ச்சியும் உண்டாயின. இவருடைய தோற்றப் பொலிவும் முகமலர்ச்சியும் என்னுள்ளத்தைக் கவர்ந்தன. 'இவரைப் பார்த்தல் கூடுமோ? கூடாதோ!' என்று ஏங்கியிருந்த எனக்கு அந்தச் சமயத்தில் உண்டான இன்பத்திற்கு எல்லையில்லை.

இவர் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தேன். தந்தையாரும் மகிழ்ச்சியுற்றனர்.

வந்த புலவர்பிரான் நின்றுகொண்டிருந்த எங்களையும் பிறரையும் இருக்கச் செய்துவிட்டுத் தாமும் இருந்து எங்களைப் பார்த்து, "நீங்கள் யார்? வந்த காரியம் என்ன?" என்று அன்புடன் விசாரித்தனர். என் பிதா, "நாங்கள் இருப்பது பாபநாசத்தைச் சார்ந்த உத்தமதானபுரம் கிராமம்; தங்களிடத்தில் தான் வந்தோம். இவன் என்னுடைய குமாரன்; என்னிடம் முதலில் சிலகாலம் சங்கீதத்தை அப்பியசித்து வந்தான. அப்பால் நிகண்டு சதகம் முதலியவற்றை முறையே கற்றான். தமிழ்ப் பாஷையிலேயே மிக்க பிரீதியுள்ளவனாக இருக்கிறான்; சில நூல்களை வித்துவான்கள் சிலரிடமிருந்து முறையே பாடங் கேட்டிருக்கிறான்; அந்த வித்துவான்களுக்கும் எனக்கும் தங்களிடத்திலேயே இவனைச் சேர்ப்பித்துப் படிப்பிக்க வேண்டுமென்ற விருப்பம் மிகுதியாக இருக்கிறது. இவனுக்கும் அப்படியே இருந்து வருகிறது. ஸம்ஸ்கிருதம் இங்கிலீஷ் முதலிய பாஷைகளில் இவனுக்குச் சிறிதும் மனம் செல்லவில்லை. ஆதலால் இவனுடைய விருப்பத்தையும் என்னுடைய ஆவலையும் தயைசெய்து தாங்களே தணிக்க வேண்டும். எப்பொழுதும் இவன் தங்கள் ஞாபகமாகவே இருந்து வருகிறான். தங்களிடம் இவனைக் கொண்டுவந்து சேர்ப்பித்தலை யன்றி நான் செய்யக்கூடியது வேறொன்றும் இல்லை. தங்கள் சமுகத்திற் சேர்ப்பித்தமையால் இவன் விஷயமாக இருந்த என்னுடைய கவலை அடியோடு நீங்கிவிட்டது. இப்படி நேர்ந்ததற்குக் காரணம் * ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசருடைய திருவருளே. இவனைத் தயை செய்து அங்கீகரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றார்.

இவர் என் தந்தையாரைப் பார்த்து, "உங்கள் பெயரென்ன?" என்று கேட்டார். அவர், "வேங்கடஸுப்பன் என்று சொல்வார்கள்" என்றார். உடனே இவர் உடனிருப்பவர்களை நோக்கி, "இப்பெயர் திருவேங்கடமலையில் முருகக்கட

---

* மீனாட்சி சுந்தரேசரென்பது என் தந்தையாருடைய பூஜையில் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கப் பெருமானது திருநாமம்.

வுள் எழுந்தருளி யிருத்தலையும் அது முருகக் கடவுளுக்குரிய ஸ்தலங்களுள் ஒன்றென்பதையும் புலப்படுத்துகின்றதன்றோ ? ஸாமிநாதனென்பது சுப்பிரமணிய னென்பதன் மரூஉ த்தானே ?'' என்று சொன்னார்; அவர்களும் ''ஆம்'' என்றார்கள். நான் 'சாதாரணமாகப் பேசும்பொழுதே இந்தகைய அருமையான விஷயம் இவர்கள் வாக்கிலிருந்து வருகிறதே. இனி இவர்களிடத்தில் நன்றாகப் பழகினால் எவ்வளவோ விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாமே' என்று நினைத்தேன். அப்பால் பிள்ளையவர்கள் என்னைப் பார்த்து. ''முன்பு யார் யாரிடத்தில் என்ன என்ன நூல்களைப் பாடங் கேட்டிருக்கிறீர் ?'' என்று கேட்டார். ''முதலில் தந்தையா ரிடத்தும் சிறிய தகப்பனாரிடத்தும் சங்கீதத்தை முறையே கற்று வந்தேன். அதனோடு சூடாமணி நிகண்டின் பன்னிரண்டு தொகுதியும், மணவாள நாராயணசதக முதலிய சில சதகங்களும், இரத்தின சபாபதி மாலை முதலிய சில மாலைகளும், நன்னூல் மூலமும் மனனம் செய்து நாள்தோறும் முறையே தந்தையாரிடம் ஒப்பித்து வந்தேன். அப்பால் பாபநாசம் பிரதம பாடசாலையில் உபாத்தியாயராக இருந்த இராகவைய ரென்பவரிடம் முதலில் மகாலிங்கையரிலக்கணமும் பின்பு நன்னூற் காண்டிகையுரையில் முதல் இரண்டு இயல்களும் கேட்டேன்; பின்பு † அரியிலூர் ஜமீன் பரம்பரை வித்துவானாகிய சடகோப ஐயங்காரென்பவரிடத்தே திருவேங்கடமாலை முதலிய சில பிரபந்தங்களுககுப் பொருள் கேட்டேன்; அவ்வூருக்கு வடபா லுள்ள † குன்றம் (குன்னம்) என்னும் ஊரிலுள்ள சிதம்பரம் பிள்ளையென்பவரிடத்துத் திருவிளையாடற் புராணத்திலும் நைடதத்திலும் சிலசில படலங்களுக்குப் பொருளும், அவ்வூருக்கு அப்பாலதாகிய † கார்குடியென்னுமூரிலுள்ள கஸ்தூரி ஐயங்காரெனபவரிடம் நன்னூற் காண்டிகையுரையில் எஞ்சிய பாகமும், அவ்வூரிலுள்ள ஸாமி ஐயங்காரிடத்துக் கம்பராமாயணத்திற் சுந்தர காண்டத்திற்குப் பொருளும் கேட்டேன்; பெரும்புலியூரைச் சார்ந்த செங்கண மென்னும் ஊரி லுள்ள சினனப் பண்ணையாராகிய விருத்தாசல ரெட்டியாரென்பவரிடம் காரிகை

† இவ்வூர்கள் திருச்சிராப்பள்ளி ஜில்லாவி லுள்ளன.

தண்டியலங்காரங்களின் உரையும் நவநீதப்பாட்டியல் முதலிய பொருத்த இலக்கணங்களும் வேறு சில நூல்களும் பாடங் கேட்டதுண்டு; ரெட்டியாராலேதான் எனக்குத் தமிழில் விருப்பம் அதிகமாயிற்று. அவரிடம் காரிகைப் பாடம் மிகச் செம்மையாக நடந்தது. இடையிடையே சந்தித்த வித்துவான்களிடத்துச் சில பிரபந்தங்களிற் சில சில பாகங்களும் பல தனிப் பாடல்களும் பொருளுடன் கேட்டுச் சிந்தித்திருக்கிறேன்'' என்றேன்.

பிறகு இவர் என் தகப்பனாரைப் பார்த்து, "இசையில் எந்தமட்டும் பயிற்சி பண்ணிவைத்திருக்கிறீர்கள்?'' என்றார். அதற்குத் தந்தையார், "முறையாகவே இவன் கற்றிருக்கிறான். அதன் அடிப்படைகள் எல்லாம் செவ்வையாக இவனுக்கு ஆகியிருக்கின்றன. ஸரளிவரிசை, அலங்காரம், கீதங்கள், வர்ணங்கள் ஆகிய இவைகளில் இவன் நல்ல பயிற்சி யடைந்திருப்பதுடன் கனம் கிருஷ்ணையர் முதலிய சங்கீத வித்துவான்களிற் சிலரியற்றிய சில கீர்த்தனங்களும் இவனுக்குப் பாடமுண்டு'' என்றார். பின்பு தந்தையாரை நோக்கி இவர், "நீங்கள் யாரிடத்தே இசையைக் கற்றுக்கொண்டீர்கள்?'' என்று விசாரித்தார். அவர், "உடையார்பாளையம் ஸம்ஸ்தானத்தில் சங்கீத வித்துவானாக இருந்த கனம் கிருஷ்ணையரென்பவர் என் தாயாருக்கு அம்மான் ஆவார்; பன்னிரண்டு வருஷம் பணிவிடை செய்துகொண்டேயிருந்து அவரிடம் சங்கீதத்தை முறையே கற்றுவந்ததன்றி அவரும் பிறரும் இயற்றிய சில கீர்த்தனங்களையும் பாடம் பண்ணிக்கொண்டேன்'' என்றார். பின்பு இவர், "இவ்வூரிலுள்ள முடிகொண்டான் கோபாலகிருஷ்ண பாரதியாரை அறிவீர்களா?'' என்று வினவவே என் தந்தையார், "அவர் எனக்கு முக்கியமான ...ண்பர்'' என்றார்.

## என்னைப் பரீட்சித்தது

அப்பால் இவர் என்னைப் பார்த்து, "நைடதத்தில் ஏதேனும் ஒருபாடலை இசையுடன் சொல்லும்'' என்றார். அவ்வாறு கேட்டவுடன் இவர்முன் எவ்வாறு சொல்வது என்று முதலில்

அஞ்சினேன். பின்பு ஒருவாறு துணிந்து அந்நூலிலுள்ள விநாயகர் காப்பைக் கல்யாணி ராகத்தில் மெல்லச் சொன்னேன். சொல்லிவிட்டு இவர் நான் சொல்வதை எவ்வாறு கேட்கிறாரென்று கவனித்தேன். இவருடைய முகத்தில் வெறுப்புக் குறிப்பில்லாமையால் எனக்குக் கொஞ்சம் தைரியம் பிறந்தது. அப்பொழுது இக்கவிஞர்பிரான், "இன்னும் ஒரு பாட்டை இசையுடன் சொல்லும்" எனவே, நான் அந் நூலின் சிறப்புப்பாயிரமாகிய "நிலவுபொழி தனிக்கவிகை" என்னும் செய்யுளை ஸாவேரி ராகத்தில் மிக்க விநயத்துடன் சொன்னேன். அந்த இரண்டு செய்யுட்களையும் மறுமுறை சொல்லச் செய்ததுடன் பொருள் சொல்லும்படியும் சொன்னார். சொல்லும் பொழுது நாக்குத் தழுதழுத்தது. அதனை அறிந்து இவர், "அதைரியம் வேண்டாம்; தைரியமாகச் சொல்லலாமே" என்று சொல்லிவிட்டு, "நிகண்டு முதலியவற்றில் உள்ள செய்யுட்களை இப்பொழுது பாராமற் சொல்லக்கூடுமா?" என்று கேட்டார். "கூடும்" என்றேன். ஒரு பொருட் பல பெயர்ச் செய்யுட்களிற் சிலவற்றையும் பலபொரு ளொருசொற பாடல் களிற் சிலவற்றையும் குறிப்பிட்டுக் கேட்டார். மெல்லச் சொன்னேன். பின்பு இவர், "நிகண்டு முதலியவை பாடமாக இருப்பது நல்லதே. இக்காலத்தில் அவற்றை எங்கே நெட்டுருப் பண்ணுகிறார்கள்? அந்த வழக்கமே போய்விட்டது; படிக்கும்படி சொன்னாலும் கேட்கின்றார்களில்லை" என்றார்.

இங்ஙனம் சிலநேரம் அளவளாவிக் கொண்டிருந்த பின்பு தந்தையார், "எப்போது இவன் இங்கே பாடங்கேட்க வரலாம்?" என்று கேட்டார். அதற்கு இவர் சிறிது நேரம் வரையில் யாதொன்றும் சொல்லாமற் சும்மா இருந்தனர்; அப்பால், "படிப்பதற்கு அடிக்கடி சிலர் வந்துகொண்டேயிருக்கிறார்கள். முறையே படித்தும் வருகிறார்கள். குறிப்பறிந்து மிக்க வணக்கத்துடன் நடக்கிறார்கள். அவர்களுக்குப் பாடஞ்சொல்லி வருவதில் எனக்கும் திருப்தியாகவே யிருக்கிறது. ஆனாலும் சில மாதங்கள் இருந்து சிலவற்றைக் கேட்டபின்பு அவர்களிற் சிலர் தாமே திருப்தியுற்று இங்கே இருப்பவர்களையும் கலைத்து விட்டுத் திடீரென்று என்னுடைய அனுமதியின்றியே போய்

விடுகிறார்கள். வேறு சிலர், 'ஊர்போய்ச் சில தினங்களில் வருகிறோம்' என்று சொல்லிவிட்டுப் போய் அப்பால் வராமலே இருந்துவிடுகிறார்கள். அங்ஙனம் போகிறவர்கள் என்னிடம் அநேக நூல்களைப் படித்ததாக வெளியே சொல்லிக்கொண்டு அங்கங்கே யிருந்து வருகிறார்கள். அதில் எனக்குச் சிறிதும் திருப்தியில்லை. சில வருஷங்களேனும் இருந்து முறையாகப் பல நூல்களைப் பாடங்கேட்டு நல்ல பயிற்சியைப் பெற்று அப்பாற் சென்றால் அவர்களுக்கும் எனக்கும் பயனுண்டு. குறைந்த நிலையிலும் நல்ல பயிற்சியடைகிற காலத்திலும் பிரிந்து விடுகிறார்களே யென்ற வருத்தம் எனக்கு இடைவிடாமல் இருந்து வருகிறது. நூதனமாக வருபவர்களுக்கு ஆரம்பப்பாடம் முதலியவற்றை அடிக்கடி சொல்லிவருவதனால் எனக்கு மிக்க துன்பமுண்டாகிற தென்பதை நான் சொல்ல வேண்டுவதில்லை; ஆதலால், இவர் சில வருஷங்களாவது இருந்து படித்தால் எனக்குத் திருப்திகரமாக இருக்கும்; இவரும் நல்ல பயனை அடையலாம் என்று சொன்னார்.

இவர் இவ்வாறு சொல்லி வருகையில் இவருடைய சொற்களிற் காணப்படும் அன்பின் தன்மை, 'நம்மை ஏற்றுக்கொள்வார்' என்ற நம்பிக்கையை எனக்கு உண்டாக்கினாலும் 'நம்மை இவர் ஏற்றுக்கொள்வாரோ, மாட்டாரோ' என்ற சந்தேகத்தை எனக்கு விளைவித்தன.

## என் தந்தையாரது வேண்டுகோள்

அப்பொழுது தந்தையார், "எவ்வளவு காலம் தாங்கள் படிப்பித்தாலும் அவ்வளவு காலமும் இவன் ஜாக்கிரதையாக இருந்து பாடங்கேட்பான். தங்களுக்குத் தோற்றுகிறபடி எவ்வளவு காலம் வேண்டுமானாலும் வைத்திருந்து இவனைப் படிப்பிக்கலாம். அழைத்துச் செல்லலாமென்று தாங்கள் சொன்ன பின்பே இவனை அழைத்துச் செல்வேன். இதிற் சிறிதும் சந்தேகம் கொள்ள வேண்டாம். இவனைத் தங்கள்பால் அடைக்கலப் பொருளாக ஒப்பித்துவிட்டேன். இவனைப் பற்றி இனி ஒன்றும் சொல்வதற்கு எனக்கு உரிமையில்லை. இதற்குமுன் இவனுக்குப் பாடம் சொல்லிய ஆசிரியர்கள் எல்லோரும்,

'பிள்ளையவர்களிடம் சேர்ப்பித்தால் தான் இவனுடைய குறையும் ஆசையும் தீரும்; சீக்கிரத்தில் அவர்களிடம் கொண்டுபோய் விடுங்கள். இனிச் சும்மா வைத்திருத்தல் தருமமன்று' என்று வற்புறுத்திச் சொன்னமையாலேதான் இங்கே அழைத்து வந்தேன். இவ்விஷயத்திற் சிறிதும் ஆலோசனை பண்ண வேண்டாம்" என்று சொல்லிப் பின்னும் என்னை அங்கீகரித்துக்கொள்ளும்படி பலவிதமாகக் கேட்டுக்கொண்டார். அவரைப் பின்பற்றி நானும் விநயத்துடன் இயன்றவரையில் வேண்டிக் கொண்டேன்.

மீ: ஆகாராதிகள் விஷயத்தில் இவருக்கு இவ்வூரில் ஏதேனும் சௌகரியமான இடமுண்டா?

தந்தையார்: இல்லை; அதையும் தாங்களே கவனித்துக் கொண்டால் நலமாயிருக்கும். அங்ஙனம் செய்வித்தற்கு எனக்கு இப்பொழுது சௌகரியம் இல்லை.

மீ: திருவாவடுதுறை, பட்டீச்சுரம் முதலிய இடங்களிலே நான் இருப்பதாயிருந்தால் இவருக்கு என்னுல் சௌகரியம் செய்வித்தல் கூடும். இவ்வூரில் மட்டும் அங்ஙனம் செய்வித்தற்கு இயலாது. நீங்களே அதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். சைவராயிருந்தாலும் வேறு வகையினராக இருந்தாலும் என்னுடைய வீட்டிலேயே உணவளிக்கலாம். இவர் விஷயத்தில் அங்ஙனம் செய்வித்தற்கு இயலவில்லையே யென்று வருத்தமடைகிறேன்.

தந்தையார்: இவ்வூரில் இருக்கும் வரையில் ஆகாராதிகளுடைய செலவுகளுக்கு நானே எப்படியாவது முயன்று பணம் அனுப்பிவிடுகிறேன். எப்பொழுது இவன் இங்கே பாடங் கேட்க வரலாம்? தெரிவிக்க வேண்டுகிறேன்.

மீ: ஒரு நல்ல தினம் பார்த்துக்கொண்டு வந்தால் ஆரம்பிக்கலாம்.

இங்ஙனம் இவர் கூறியது எனக்கு மிக்க ஆறுதலை அளித்தது. அப்போது இவரிடம் விடைபெற்றுக்கொண்டு மறுநாட் காலையில் வந்து பார்ப்பதாகச் சென்றோம். மாயூரத்தில் என் தந்தையார் தங்கின வரையில் அவரும் நானும் என் சிறிய தந்தையாரின் வேட்டகத்தில் இருந்து வந்தோம்.

# ௨. நான் பாடங் கேட்கத் தொடங்கியது

## யாப்பிலக்கணத்தில் என்னைப் பரீட்சித்தது

மறுநாட் காலையில் நாங்கள் இவரைப் பார்ப்பதற்குச் சென்றோம். அப்பொழுது இவர் திருநாகைக் காரோணப் புராணத்தை வருவித்து அதை என்பால் அளித்து அதில் நாட்டுப் படலத்தி லுள்ள 38-ஆம் செய்யுளாகிய "புன்மைசால்" என்பதையும் அடுத்த செய்யுளையும் படிக்கச் சொல்லி அவ்விரண்டிற்கும் பொருள் கூறித் திரும்பச் சொல்லச் சொல்லிக் கேட்டார். ஜாக்கிரதையாகச் சொன்னேன். அவற்றிலுள்ள சொல்முடிபு பொருள்முடிபுகளைக் கேட்டார்; யோசித்துச் சொன்னேன். பின்பு, "வெண்பாக்களைச் சீர் பிரித்து அலகூட்டிச் சொல்வீரா?" என்று, "நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க, நல்லார்சொற் கேட்பதுவு நன்றே-நல்லா", "நெல்லுக் கிறைத்த நீர்வாய்க்கால் வழியோடிப், புல்லுக்கு மாங்கே பொசியுமாம்" என்ற பாடல்களை இவ்வண்ணமே கூறி அலகூட்டச் சொன்னார். இவர் பிரித்துச் சொன்னபடி சொன்னால் தளைகெடு மென்பதை அறிந்து ஜாக்கிரதையாகப் பிரித்துக் காட்டினேன். அதனைக் கேட்டு எனக்கு யாப்பிலக்கணம் கற்பித்த ரெட்டியாரைப் பாராட்டியதுடன் அவரைப் பற்றிக் கேள்வியுற்றிருப்பதாகவும் சொன்னார்.

பின் ஒருதினம் என் தந்தையார், "இவன் இலக்கண நூற்பாடம் சிறிது சிலரிடத்துக் கேட்டிருந்தாலும் திருப்தியுண்டாகாமையால் முதலில் தாங்கள் ஏதாவது இலக்கண நூலைக் கற்பித்தால் நலமாக இருக்கும். இவனுடைய கருத்து இது" என்று தெரிவித்தனர். "பதினாயிரம் பாடலுக்குக் குறையாமற் பாடம் கேட்ட பின்பே இலக்கண பாடம் தொடங்குதல் நலம். இவருக்கு இப்போது உள்ள இலக்கண அறிவே இலக்கிய பாடங் கேட்டற்குப் போதுமானது. அதைப் பின்பு கவனித்துக் கொள்ளுகிறேன்" என்று இவர் விடையளித்தார்.

## நல்ல தினத்திற் பாடம் கேட்க ஆரம்பித்தது

அப்பால் என் தந்தையார் குறிப்பிட்டுச் சொன்னபடி ஒரு நல்ல தினத்திற் சென்றேன். இவர் நைடதத்தை வருவித்து அளித்துச் சில பாடல்களைப் படிக்கச் செய்து அவற்றிற்கு முறையே பொருள்களையும் செய்யுட்களில் அங்கங்கேயுள்ள விசேடக் கருத்துக்களையும் விளங்கச் சொன்னார். அதுவரையிலும் அவ்வண்ணம் கேளாதவனாகையால் இவருடைய போதனை எனக்கு மிக்க இன்பத்தை விளைவித்தது. பின்பு வினவியபொழுது இவர் சொல்லிய வண்ணமே நான் விடை பகர்ந்தேன். அப்பால், "சில தினங்களில் விரைவாக இதை முடித்து விடலாம். இது முடிந்தவுடன் வேறு புதிய நூலொன்றை ஆரம்பிக்கலாம்" என்று சொல்லிவிட்டு எனக்குப் பாடஞ் சொல்லும்படி அங்கே வந்திருந்த பழைய மாணவ ரொருவருக்குக் கட்டளையிட்டார். அவ்வண்ணமே அவரிடம் அந்நூலை நாள்தோறும் கேட்டு வந்தேன்.

## என் தந்தையார் விடைபெற்றுச் சென்றது

மாயூரத்தில் இருப்பதற்குச் சௌகரியப்படாமையால் தந்தையார் என்னுடைய உணவுச் செலவு முதலியவற்றிற்கு வேண்டிய பணத்தைக் கொடுத்து ஒரு போஜன விடுதியில் ஏற்பாடு செய்துவிட்டுத் தாம் ஊருக்குப் போவதாக நிச்சயித்து ஒருநாட் காலையிற் பிள்ளையவர்களிடம் வந்து, "விடைபெற்றுக் கொள்கிறேன். என்னுடைய பூஜை முதலியவற்றிற்கு இவ்வூர் சௌகரியப்படவில்லை. ஆதலால் இவனைப் பிரிந்து செல்ல வேண்டியிருக்கிறது. தனியே இருந்து வேண்டியவற்றைச் செய்துகொள்ளுவது இவனுக்கு வழக்கமில்லை. நானும் இவன் தாயும் இதுவரையில் இவனைப் பிரிந்து இருந்ததில்லை: தயைசெய்து இவனை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்" என்று சொன்னார். சொல்லும்பொழுது அவருக்குக் கண்ணீர் பெருகியது. அதைக் கண்ட இப்புலவர்கோமான் அவருடைய அன்பின் மிகுதியையும் பிரிவாற்றாமையையும் கண்டு மனமிரங்கி, "ஐயா! இவருடைய பாதுகாப்பைக் குறித்து நீங்கள் சிறிதும் கவலைப்

படவேண்டாம். தைரியமாக ஊருக்குப் போய் உங்களுடைய பூஜை முதலியவற்றை நடத்திக்கொண்டு சுகமாக இருங்கள். பார்க்க விரும்பியபொழுது இவரை உங்கள்பால் அனுப்பி வருவித்துக் கொள்ளுவேன். அவகாச முள்ள காலங்களில் நீங்களும் வந்து பார்த்துவிட்டுப் போகலாம்'' என்று அன்புடன் விடையளித்தார். இவர் அங்ஙனம் கூறிய வார்த்தைகள் எனக்கு அமுதம் போன்றிருந்தன. இவர் 'பாதுகாப்பு' என்று கூறிய சொல் இன்னும் என் காதில் ஒலித்துக்கொண்டே யிருக்கிறது. அப்பால் தந்தையார் ஊருக்குப் புறப்பட்டார். புறப்படுவதற்கு முன் ஒரு நாள் என்னை மாயூரத்தி லிருந்த கோபாலகிருஷ்ண பாரதியாரிடம் அழைத்துச் சென்று பிள்ளையவர்களிடம் தமிழ் கற்க என்னைச் சேர்ப்பித்திருத்தலைச் சொல்லி எனக்குச் சங்கீதத்திலும் பழக்க மிருப்பதால் அவகாசமுள்ள காலங்களில் சங்கீதத்தில் பயில் விக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அவரும் அதற்கு உடன்பட்டார்.

### எனக்கிருந்த குறை

எனக்குப் பாடஞ்சொல்லிவந்தவர் பின்பு நைடதத்தின் மேற் பகுதிகளைச் சொல்லிவந்தார். என்னுடைய ஆவலை நிறைவேற்றுந் தகுதி அவர்பாற் காணப்படவில்லை. ஆனாலும் நாள்தோறும் வேகமாகக் கேட்டு வந்தேன். அவரும் விரை வாகவே சொல்லிவந்தார். நான் அந்நூலை முன்னமே பாடங் கேட்டதன்றிப் பலமுறை படித்து ஆராய்ந்து வந்திருந்தமை யால் அவர் பாடஞ் சொல்வதில் விசேடமொன்றையும் காண வில்லை. அதனால், 'இவ்வளவு காலம் முயன்று வந்து சேர்ந்தும் அவர்களிடத்திலேயே பாடம் கேட்கும் பாக்கியம் நமக்குக் கிடைக்கவில்லையே!' என்ற குறை மேன்மேலும் வளர்ச்சியடைந்து வந்தது. அக்குறையை நான் தெரிவிக்க வாவது இவரே தெரிந்துகொள்ளவாவது தக்க சமயம் வாய்க்க வில்லை. என்னுடைய கருத்தை இவரிடம் வெளிப்படுத்து வதற்கு அச்சமுற்றும் இருந்தேன். என்னைக் கேட்பார்; ''நடந்துவருகிறது'' என்று மட்டும் சொல்லுவேன். இவ

ருடன் அதிகமாகப் பழகி இவரிடம் பாடங் கேட்பதற்கு நல்ல காலம் எப்பொழுது வாய்க்குமோ வென்று அதனை எதிர் பார்த்துக்கொண்டே யிருந்தேன். அந்த விஷயத்தில் தக்க வாறு முயலும்படி என் மனம் என்னைத் தூண்டிக்கொண்டே வந்தது; நல்லூழும் அதற்குத் துணை செய்தது.

### தளிரால் தளிர்த்த அன்பு

கவிஞர்களுக்குப் பூஞ்சோலைகளிலும் பிற இயற்கைக் காட்சிகளிலும் ஈடுபாடு அதிகம் என்பது பலரும் அறிந்ததே. மரங்கள் பூச்செடிகள் முதலியவற்றைக் கண்டு மகிழும் வழக்கம் இவருக்கு மிகுதியாக உண்டு. இவர் புதிதாகத் தாம் வாங்கிய வீட்டின் தோட்டத்தில் அவ்வூர் வழக்கப்படியே நாரத்தை முதலியவற்றின் பெரிய செடிகளையும் பூஜைக்குரிய வில்வம் முதலியவற்றின் பெரிய செடிகளையும் வேரோடு மண் குலையா மல் தோண்டி யெடுத்து அம்மண்ணின்மேல் வைக்கோற் புரி சுற்றிக் கூறைநாட்டிலிருந்து வருவித்து ஆழ்ந்த குழிகளில் வைப்பித்து நீர் வார்த்துப் பாதுகாத்து வரும்படி செய்வித்திருந் தார். வேலைக்காரர்கள் அவற்றைப் பாதுகாத்து வந்தார்கள். சில தினங்கள் சென்றபின் நாள்தோறும் காலைமாலைகளில் இவர் சென்று பட்டுப் போகாமலிருக்கின்றனவாவென்று அவற்றைக் கவனித்து வருவதுண்டு. இவர் தனியாகவேனும் யாரை யாவது உடனழைத்துக்கொண்டேனும் காலையிற் சென்று எந்தச் செடியில் எந்தக் கிளையில் தளிர் உண்டாகியிருக்கிற தென்று பார்த்து, தோன்றிய தளிரைக் கண்டு திருப்தி அடைவார்.

இவர் இங்ஙனம் செய்துவருவதைச் சில நாள் கவனித்த நான், 'இவர்களுடைய அன்பை அதிகமாகப் பெறுவதற்கு இத் தளிர்களையே துணையாகக் கொள்வோம்' என எண்ணினேன். அதுமுதல் விடியற்காலையில் எழுந்திருந்து இவர் செல்லும் முன்பே நேராகத் தோட்டத்திற்குச் சென்று ஒவ்வொரு செடி யிலும் ஏதாவது புதிய தளிர் உண்டாகியிருக்கிறதா என்று கவ னித்து அறிந்துவைத்து நிற்பேன். இவர் வரும்போது மெல்ல அருகிற் போய் நான் இவரை அழைத்துச் சென்று, இன்ன

செடியில் இன்ன கிளை தளிர்த்திருக்கிறது, இன்ன கிளையில் இவ்வளவு தளிர்கள் உண்டாயிருக்கின்றனவென்று காட்டுவேன். இவர் ஆவலோடு என்னுடன் வந்து அவற்றை ஊன்றிப் பார்த்து அங்கங்கே நான் தெரிவித்தபடி தளிர்கள் இருத்தலைக் கண்டு மகிழ்வார். இப்படிச் சில தினங்கள் செய்து வந்தேன். இவரும் ஒவ்வொரு நாளும் காலையில் வந்து அங்கே நின்ற என்னை முன்னிட்டுக்கொண்டு சென்று தளிர்களைப் பார்த்து மகிழ்ந்து வருவாராயினர்.

தம்முடைய மனத்திற்கு உவப்பான இச் செயலை நான் மேற்கொண்டதை இவர் அறிந்து பின்பு ஒரு நாள் என்னை நோக்கி, "இவற்றை முன்னதாக நீர் பார்த்து வைத்துக் கொண்டது எதனால்?" என்று வினவினர், * "ஐயா அவர்களுக்கு இதில் மிக்க விருப்பம் இருப்பதை அறிந்து இவ்விடத்துக்கு (தங்களுக்கு) அதிகச் சிரமம் கொடுக்கக் கூடாதென்றெண்ணி முதல் நாள் பிற்பகலிலும் மறுநாட் காலையிலும் பார்த்து வைத்துக் கொண்டேன்" என்றேன். இவர், "யாரேனும் பார்த்து வைக்கும்படி சொன்னார்களா?" என்று வினவவே நான், "ஒருவரும் சொல்லவில்லை. இவ்விடத்திற்கு உவப்பாக இருக்குமென்று இவ்வேலையை நானாகவே செய்து வருகிறேன்" என்றேன். இவர், "நாள்தோறும் இப்படியே நீர் முன்னதாகவே கவனித்து நான் வரும்போது சொன்னால் நலமாயிருக்கும்" என்று சொன்னார். அவ்வண்ணமே நாள் தோறும் செய்து வந்தேன். இவரும் பார்த்துவந்தார். இவர் பார்த்துச் சென்ற பின்பே ஒவ்வொருநாளும் மகிழ்ச்சியுடன் தந்தசுத்தி முதலியவற்றைச் செய்யச் செல்வேன். இவர் அப்பொழுது பாடத்தைப் பற்றியும் விசாரிக்கத் தொடங்கினர். இங்ஙனம் நாடோறும் இவரைச் சந்தித்துப் பேச நேர்ந்ததற்கு ஒரு காரணமாக இருந்த தளிர்களை மனத்துள் வாழ்த்தினேன்.

## இவர்பால் நான் நேரே பாடம் கேட்டது

பின்பு ஒருநாள் நான் படிக்கும் பாடங்களைப்பற்றி இவர் விசாரிக்கையில், "இவ்விடத்திலேயே பாடங் கேட்கவேண்டு

* படிப்பவர்களும் ஏனையோரும் பிள்ளையவர்களை, 'ஐயா அவர்கள்' என்று சொல்லுவது வழக்கம்.

மென்னும் விருப்பம் எனக்கு மிகுதியாக இருக்கின்றது" என்பதை அச்சததுடன் தெரிவித்தேன். கேட்ட இவர், "அவ்வாறே செய்யலாம்; இப்போது நடக்கும் நைடதப் பாடம் பூர்த்தியாகட்டும்" என்று விடையளித்தார். அது சில தினங்களில் ஒருவாறு முடிந்தது. அதை இவருக்குத் தெரிவித்தேன். மறுநாட் காலையில் என்னை வலிந்து அழைத்து, "இனிமேல் பிரபந்தங்களைப் படிக்கத் தொடங்கலாம்" என்று சொல்லித் திருக்குடந்தைத் திரிபந்தாதிச் சுவடியை வருவித்துக் கொடுத்துப் படிக்கும்படி சொன்னார். அந்தப்படியே நானும் மற்றவர்களும் வாசித்துப் பொருள்கேட்டு வந்தோம். அந்நூல் இரண்டு தினங்களில் முற்றுப் பெற்றது. யமகம் திரிபுகளாகிய நூல்களில் ஐந்து ஆறு பாடல்களுக்குமேல் கேட்க முடியாமல் அதுவரையில் வருந்திக்கொண்டிருந்த எனக்கு மிகக் கடினமாகிய அந்நூல் இரண்டு தினங்களில் முற்றுப் பெற்றதும், பாடம் சொல்லுகையில் இவர் யாதொரு வருத்தமுமின்றி முகமலர்ச்சியோடு மனமுவந்து சொல்லியதும், மாணக்கர்களுக்கு விளங்காதவை இன்னவையென்று அறிந்து அந்தப் பாகங்களுக்கு மட்டும் பொருள் சொல்லிக் கடினமான தொடர்மொழிகளைப் பிரித்துக் காட்டி விளக்கியதும், இன்றியமையாத சரித்திரங்களை விளக்கமாகக் கூறியதுடன் இலக்கணக் குறிப்புக்களைச் சுருங்கச் சொல்லித் தெரிவித்ததும் எனக்கு வியப்பையும் இன்பத்தையும் உண்டுபண்ணின. பாடம் முற்பகல் பிற்பகல் இரண்டு வேளைகளிலும் நடைபெற்றது.

அப்பாற் பழமலைத்திரிபந்தாதி, திருப்புகலூர்த்திரிபந்தாதி, மருதூர் யமகவந்தாதி, தில்லை யமகவந்தாதி, திருவேரகத்து யமகவந்தாதி, துறைசை யமகவந்தாதி, மறைசையந்தாதி முதலிய அந்தாதிகளும், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக் குமாரசாமி பிள்ளைத்தமிழ், செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ், அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் முதலிய சில பிள்ளைத் தமிழ்களும், அஷ்டப்பிரபந்தத்துள் சில பிரபந்தங்களும் கேட்டு முடித்தோம். மறைசை யந்தாதி மட்டும் ஒரே நாளில் முற்றுப் பெற்றது.

இவ்வளவு நூல்களில் உள்ள பாடல்களும் இப்புலவர் சிகாமணிக்கு ஞாபகத்திலேயே இருந்தன. அதற்குக் காரணம் இடைவிடாமற் பாடஞ் சொல்லி வந்தமையே. உரிய இடங்களில் இவர் சொல்லி வரும் பதசாரங்கள் இன்பத்தை விளைவிக்கும். ஓய்வு நேரங்களில் நாங்கள் கேட்ட பாடங்களை மீட்டும் படித்துச் சிந்தனை செய்து வைத்துக்கொள்வோம். பாடங்கேட்கும் காலமன்றிச் சிந்திக்கும் காலத்திலும் இவரை விட்டுப் பிரிவதற்கு மனமில்லாமற் பக்கத்திலிருந்தே மெல்லப் படித்துவருவோம். தம்மிடம் வருகிற தக்கவர்களோடு இவர் பேசிக்கொண்டிருக்கும்போது பல அருமையான விஷயங்களை நாங்கள் எளிதில் அறிந்துகொள்ளுவோம். நாங்கள் படித்த நூல்களிலிருந்து நல்ல பாடல்களை வந்தவர்களுக்குச் சொல்லிக்காட்டிப் பொருள் சொல்லும்படியும் செய்வார். அங்ஙனம் செய்துவந்தமையால் எங்களுக்குத் தமிழ்ப் பயிற்சியும், ஊக்கமும் கூச்சமின்றிப் பேசும் வழக்கமும் நாளடைவில் அதிகரித்து வந்தன.

அச்சுப் புத்தகங்கள் அக்காலத்தே பெரும்பாலும் அகப்படா; ஆதலாற் படிக்கும் நூல்களை ஏட்டிலேயே எழுதிப் படித்து வந்தோம். அப்படி எழுதுவதற்கு முன்பு பனையோலைகளை வருவித்து வாரித் துளையிட்டுச் சேர்த்துப் புத்தகமாக்கி எங்களிடம் கொடுத்து எழுதச் செய்வார். ஓய்வு நேரங்களில் பழைய கவிஞர்களுடைய சரித்திரங்களை விளங்கச்சொல்லி ஒவ்வொரு சமயத்தில் அவர்கள் செய்த இனிய தனிப் பாடல்களைப் பொருளுடன் கூறி எங்களை எழுதிக்கொள்ளும் படி செய்வார்.

## உள்ளன்பு

நான் போகுங்காலங்களிலெல்லாம் கண்டவுடன், "ஆகாரம் ஆயிற்று?" என்றும், "சௌகரியமாக இருக்கிறதா?" என்றும் விசாரிப்பார். ஏதேனும் வேண்டியிருந்தால் வருவித்துக் கொடுப்பார். நான் ஆகாரம் பண்ணிக்கொண்டு வருவதற்கு நேரமானால் என்ன காரணத்தால் வரவில்லையோ வென்று கவலையுற்று நான் வரும் வழியையே நோக்கிக் கொண்டு தெருத்திண்ணையில் இருந்ததை நான் சிலமுறை கண்டிருக்கிறேன்.

## திருக்குற்றால யமக அந்தாதி படித்தது

இவராற் பார்க்கப்படாத நூல்கள் எவையேனும் கிடைக்குமாயின் அவற்றைத் தாமே வைத்துக்கொண்டு நன்கு ஆராய்ந்து படித்துவருவார். விளங்காத விஷயங்களை யார் சொன்னாலும் விருப்பத்தோடு கேட்டு அறிந்துகொள்வார்; விஷயம் தெரியவேண்டுமென்னும் நோக்கத்தை யன்றி, இன்னாரிடம் கேட்கலாம், இன்னாரிடம் கேட்கக் கூடாதென்னும் வேற்றுமை இவர்பால் இல்லை. அப்பொழுது இவர் நூதனமாகக் கிடைத்த திருக்குற்றால யமகவந்தாதிச் சுவடியைத் தாமே கையில் வைத்துப் படித்துப் பொருளாராய்ந்து வந்தார்.

## என் பெயரை மாற்றியது

எனது இயற்பெயர் வேங்கடராமனென்பது; அதுவே எனது சர்ம நாமம். இவரிடம் என் தந்தையார் சொல்லியதும் வேங்கடராமனென்பதே. அப்பெயராலேயே என்னை அழைத்து வந்த இவர், சில தினங்களுக்குப்பின் ஒருநாள் என்னை நோக்கி "வீட்டார் உம்மை அழைப்பது இந்தப் பெயராலேயா? அன்றி உமக்கு வேறு பெயருண்டோ?" என்று கேட்டார். நான், "வேங்கடராமனென்பது மூதாதையின் பெயராதலின் தாய் தந்தையர்கள் அவ்வாறு அழையாமல் சாமிநாதனென்பதன் திரிபாகிய 'சாமா' என்று அழைப்பார்கள்" என்றேன். "சாமிநாதனென்ற பெயரே நன்றாயிருக்கிறது. இனி அப்பெயராலேயே உம்மை அழைக்கிறேன்" என்று கூறி அன்று முதல் அப்பெயராலேயே என்னை அழைத்து வருவாராயினர். இவருடைய விருப்பத்தின்படி பிறரும் அங்ஙனமே செய்துவந்தார்கள். அப்பெயரே நிலைத்துவிட்டது.

## என் இசைப் பயிற்சியை நிறுத்தியது

நான் இவரிடம் படிக்கத் தொடங்கிய நாள்முதல் என் தந்தையாருடைய கட்டளையின்படியே ஒவ்வொரு தினத்தும் ஓய்வு நேரத்திற் சென்று அவ்வூரி லிருந்த முடிகொண்டான் கோபால கிருஷ்ண பாரதியாரிடம் சங்கீதம் கற்றுக்கொண்டு வந்தேன். நான் முன்னரே பயிற்சிபண்ணியிருந்த கீர்த்தனங்

களை மறவாமலிருத்தற்கு இங்ஙனம் செய்தல் நலமென்று என் பிதா எண்ணினர். பாரதியாரும் அன்புடன் கற்பித்து வந்தார். அவர் இயற்றிய சில கீர்த்தனங்களும் பிற பெரியோர்கள் இயற்றிய சில பழைய உருப்படிகளும் எனக்கு அக்காலத்திற் பாடமாயின. பிள்ளையவர்களும் அவரும் அதிகப் பழக்கமுடையவர்களாகையால் எப்பொழுதேனும் சந்திக்கும்படி நேர்ந்தால் இருவரும் மனங்கலந்து சிலநேரம் பேசிக்கொண்டிருப்பது வழக்கம். ஒருநாட் காலையில் இருவரும் சந்தித்த பொழுது, தம்மிடம் நான் படிக்க வந்திருப்பதாகவும் பாடல்களை இசையுடன் படிப்பதாகவும் கூறி அப்படிப் படிப்பதை ஒருநாள் வந்து கேட்கவேண்டுமென்று இவர் அவருக்குச் சொன்னார். அவர், "அந்தப் பையனுடைய தகப்பனார் சங்கீத வித்துவானதலால் அவருக்கும் எனக்கும் பல நாளாகப் பழக்கம் உண்டு. அவனுக்குச் சங்கீதப் பயிற்சி மேன்மேலும் பெருகும்படி கற்பிக்க வேண்டுமென்று என்னிடம் அவர் சொல்லிவிட்டுப் போனார். அவன் அந்தப்படியே என்னிடம் தினந்தோறும் வந்து சிக்ஷை சொல்லிக்கொண்டு போகிறான். சில கீர்த்தனங்கள் அவனுக்குப் பாடமாயிருக்கின்றன. தங்களிடம் பாடம் கேட்டு வருவதாகவும் சொன்னான்" என்று சொன்னதன்றி, "அந்தப் பையனைக் கவனித்துப் படிப்பிக்க வேண்டுமென்று நானும் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றனர். அப்பால் இவர் அவருடன் அதிகம் பேசாமல் விடை பெற்று நேரே விரைவாக வீட்டிற்கு வந்து அங்கே படித்துக்கொண்டிருந்த என்னைப் பார்த்து. "நீர் கோபாலகிருஷ்ண பாரதியாரிடம் சென்று இசைப்பயிற்சி செய்து வருவதுண்டோ?" என்று கேட்டார். கேட்ட குறிப்பையறிந்து நான் மிகவும் அஞ்சி, "என்னுடைய தகப்பனருக்கும் அவருக்கும் அதிகப் பழக்கம் உண்டு. இவ்வூரிலிருக்கையில் பாரதியாரிடம் சென்று சங்கீதத்தையும் விருத்தி பண்ணிக்கொள்ளும்படி அவர் சொன்னமையால் இதுவரையிற் கற்றவற்றை மறவாமலிருத்தற் பொருட்டுச் சென்று பயின்று வருகிறேன்" என்று விநயத்துடன் சொன்னேன். இவர், "நீர் கோபால கிருஷ்ண பாரதியாரிடம் சென்று இசைப்பயிற்சி

அங்ஙனம் செய்து வருவதை நான் இதுவரையில் தெரிந்து கொள்ளவில்லை. இசையில் அதிகப் பழக்கம் வைத்துக்கொண்டால் இலக்கிய இலக்கண நூல்களில் நன்றாகப் புத்தி செல்லாது. நூல்களின் கருத்தை நன்றாக ஆராய்ந்து படிப்பதையும் அது தடுத்துவிடுமே'' என்று சொன்னார். இவருடைய நோக்கத்தை அறிந்து மறுநாள் முதல் அம் முயற்சியை அடியோடே நிறுத்திக்கொண்டேன். பாரதியாரிடம் வேறொன்றும் சொல்லாமல், ''இங்கே வருவதற்கு எனக்கு ஓய்வு நேரம் இல்லை'' என்று சொல்லிவிட்டு நேர்ந்த காலங்களில் அவரிடம் சாதாரணமாகப் பழகி வந்தேன்.

## மூன்று சமஸ்யைகள்

பின் ஒருநாள் மாலையில் அனுஷ்டானம் செய்துவிட்டு வந்து வீட்டின் மேல்புறத் திண்ணையில் இவர் இருந்தார். கனகசபை ஐயர், சவேரிநாத பிள்ளை, நான் ஆகிய மூவரும் கீழ்புறத் திண்ணையின் கீழே வரிசையாக இவரை நோக்கிய வண்ணமாக நின்றோம். அப்பொழுது எங்களை நோக்கி இவர், ''உங்களுக்குச் செய்யுள் செய்யும் பழக்க முண்டா?'' என்று கேட்டார். ''உண்டு'' என்றோம். ''வெண்பாவின் ஈற்றடியைக் கொடுத்தால் ஏனை மூன்றடிகளையும் பாடி முடிப்பீர்களா?'' என்று வினவினார். ''ஏதோ உழைத்துப் பார்க்கிறோம்'' என்று ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு சொன்னோம். சொன்னவுடன், ''தேவா வெனக்கருளைச் செய்'' என்பதைச் சவேரிநாத பிள்ளைக்கும், 'சிந்தா குலந்தவிரச் செய்'' என்பதைக் கனகசபை ஐயருக்கும், ''கந்தா கடம்பாகு கா'' என்பதை எனக்கும் ஈற்றடிகளாக அளித்தார். நாங்கள் மூவரும் ஏனை மூன்றடிகளையும் முடித்து முறையே தெரிவித்தோம். கேட்ட இவர், ''இப்படியே பாடிப் பழகுவது நல்லது. பாடப் பாட உங்களுக்கு நல்ல வாக்கு உண்டாகலாம்; 'செந்தமிழு நாப் பழக்கம்' என்பது ஔவையார் திருவாக்கன்றோ?'' என்று கூறிவிட்டு என்னை நோக்கி, ''உமக்குக் கொடுத்த இறுதி அடியை வைத்து நானும் ஒரு செய்யுள் செய்து முடித்திருக்கிறேன்'' என்று கூறி,

(வெண்பா)

“ பாடப் படிக்கப் பயனு நினக்கன்பு
கூடக் கருணை கொழித்தருள்வாய்—தேடவரும்
மந்தா னிலந்தவழு மாயூர மாநகர்வாழ்
கந்தா கடம்பாகு கா”

என்ற செய்யுளைச் சொன்னார். நாங்கள் செய்த மூன்று பாட்டுக்களும் எனக்கு ஞாபகம் இல்லை. அதுமுதல் நாங்கள் செய்யுள் செய்யும் முயற்சியை மேற்கொண்டு வந்தோம்.

## முத்துக் குமாரசாமி பிள்ளைத்தமிழ்

தமிழில் நல்ல அறிவுண்டாகவேண்டுமென்று கருதி நாள் தோறும் முத்துக் குமாரசாமி பிள்ளைத்தமிழை முற்றும் பாராயணம் செய்து வருவது எனக்கு வழக்கமாக இருந்தது. அதனைக் கண்ட இவர் ஒருநாள், “இப்படியே நாள்தோறும் முற்றும் பாராயணம் செய்துவந்தால் உமக்குச் சிரமமாக இருக்கும். மற்றவர்களோடு சேர்ந்து படிப்பதற்கும் இயலாது. முருகக்கடவுளை வழிபடுதல் தமிழ்ப் பயிற்சிக்கு மிகவும் நல்லதே. அப்பிள்ளைத் தமிழில் வருகைப் பருவத்தில் இரண்டு பாடல்களை மட்டும் மனனம் செய்துகொண்டு வந்தாற் போதும்” என்றார். அது தொடங்கி அவ்வண்ணமே செய்து வருவேனாயினேன்.

## பெரியபுராணப் பாடம்

சில மாதங்களுக்குப் பின் இவர்பால் விடைபெற்றுக் கொண்டு சொந்த ஊருக்குப் போனேன். அங்கே என் தகப்பனாரும் பிறரும் இவர்பால் நான் பாடம் கேட்டுவரும் முறைகளையும் இவருடைய குணவிசேடங்களையும் நான் விவரமாகச் சொல்லக் கேட்டு மிகவும் மகிழ்ந்தார்கள். அங்கே சில தினமிருந்து திரும்பி வந்தேன். அதற்குள் மாயூரங் கோயிற் கட்டளைப் பணியை அப்போது நடத்திவந்த ஸ்ரீ பாலசுப்பிரமணியத் தம்பிரானென்பவரும் வேறு சிலரும் இவரிடம் முதலிலிருந்து பெரிய புராணத்தைப் பாடங் கேட்டு வருவாராயினர். நான் திரும்பி வந்த தினத்தில் தொடங்கிய பாடம் எறிபத்தநாயனார் புராணம். என்னைக் கண்டவுடன் அவர்

களுடன் சேர்ந்து அப்புராணத்தைக் கேட்டு வரும்படி இவர் சொன்னார். அங்ஙனமே செய்து வந்தேன். என் தகுதிக்கு அந்நூல் எத்தனையோ மடங்கு மேற்பட்டதாக இருந்தாலும், இவர் பாடஞ் சொல்லும் பக்குவத்தால் எனக்கு அந்நூற் செய்யுட்கள் எளியனவாகவே இருந்தன. அவற்றி லுள்ள நயங்களும் புலப்பட்டன.

### ஆறுமுகத்தா பிள்ளை பட்டீச்சுரத்துக்கு அழைத்தது

ஒரு நாள் பட்டீச்சுரம் ஆறுமுகத்தாபிள்ளை மாயூரம் வந்தார். இவரை அழைத்துச் சென்று தம்முடைய வீட்டில் வைத்திருந்து உபசரித்து இவருடைய உதவியால் தம்முடைய குடும்பத்தி லுள்ள சில முட்டுப்பாடுகளைப் போக்கிக்கொள்ள எண்ணி அவர் வந்து அழைப்பதும் இவர் அடிக்கடி பட்டீச்சுரம் சென்று சில நாள் இருந்து வருவதும் உண்டு.

இரண்டுதினம் சென்ற பின்பு ஆறுமுகத்தா பிள்ளை பட்டீச்சுரம் வந்து சில தினம் இருக்கவேண்டுமென்று இவரைக் கேட்டுக்கொண்டார். அதற்கு இவர் இசைந்து மாணாக்கர்களில் என்னையும் தவசிப்பிள்ளையையும் உடனழைத்துக்கொண்டு அவரோடு புறப்பட்டார்; இடையில் திருவாவடுதுறையில் தங்கி ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரைத் தரிசித்து விடைபெற்றுச் செல்ல எண்ணினார்.

## 3. திருவாவடுதுறை நிகழ்ச்சிகள்

### திருவாவடுதுறை சென்றது

அங்ஙனமே இவர் திருவாவடுதுறை போகையில் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருடைய பெருமையையும் வடமொழி தென்மொழிகளிலும் சைவசித்தாந்த சாஸ்திரங்களிலும் இசையிலும் அவருக் குள்ள பயிற்சி மிகுதியையும் அவற்றிற் பாண்டித்திய முள்ளவர்களை அன்புடன் அவர் ஆதரிக்கும் அருமையையும் பாராட்டிக் கூறி, என்னை நோக்கி, "உம்மைச் சில செய்யுட்கள் சொல்லும்படி ஸந்நிதானம் கட்டளையிடக்கூடும். அப்போது இன்ன இன்ன நூல்களிலிருந்து இன்ன இன்ன வகை

யான செய்யுட்களை இசையுடன் சொல்லும். பொருள் கேட்டாற் பொருளையும் தவறின்றிச் சொல்லும். சொல்லி உவப்பித்தால் அவர்களுடைய பேராதரவைப் பெறலாம்" என்று சொன்னதன்றிப் பின்னும் நான் அங்கே உள்ளவர்களிடத்து நடந்து கொள்ள வேண்டியதைப்பற்றியும் மனத்திற் படும்படி போதித்துக்கொண்டே சென்றார். அப்பால் இவர் திருவாவடுதுறையை யடைந்து மடத்திற்குச் சென்றார். மடத்து ஓதுவார்களிற் சிலர் இவரைக் கண்டவுடனே இவர் வரவை ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரிடம் விண்ணப்பம்செய்ய, இவரை அழைத்துவரும்படி அவர் சொல்லியனுப்பினார்.

## ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகராற் பாராட்டப் பெற்றது

அதைக் கேட்டு இவர் மிக விரைந்து சென்று இரண்டு கைகளையும் உச்சிமேற் குவித்து அவரைப் பணிந்தார். வணங்கிய இவர் திருநீறு பெறுவதற்கு எழுந்து அருகிற் செல்லும் பொழுது தேசிகரைப் பார்ப்பதற்கு மிக்க ஆவலோடு இவர் பின்னே நின்ற யானும் சென்றேன். நெற்றியில் திருநீறு இட்டு இவரை இருக்கச்செய்துவிட்டுத் தேசிகர், "உங்களுக்குப் பின்னே வருகிற இவரோ முன்பு வந்தபொழுது பாடங்கேட்பதாகச் சொல்லிய சாமிநாதையரென்பவர்?" என்று விசாரித்தார். அப்பொழுது † "ஸ்வாமி" என்று இவர் சொல்லவே எனக்கு உண்டான உவப்பிற்கு எல்லையே இல்லை. ஒரு பொருளாக என்னை நினைந்து தாம் வந்தபொழுது நான் பாடங்கேட்டு வருவதாக இப்புலவர் பிரான் தேசிகரிடம் சொல்லிய அருமையையும் அதனை ஞாபகப்படுத்திக் கொண்டு விசாரித்த தேசிகருடைய பெருமையையும் எண்ணி எண்ணி இன்பம் அடைந்து கொண்டே சென்று தேசிகர் இருக்கும்படி சொல்ல இவருக்குப் பின்னே இருந்தேன். அப்பொழுது தேசிகர் இவரைப்பார்த்து, "இங்கே வந்திருந்த ஸ்ரீ மகாவைத்திய நாதையரவர்கள் நேற்று மாலையில் ஸ்ரீ சோமாசி மாறநாயனார் சரித்திரம் கதை பண்ணினார்கள். அப்போது அவர்கள் சுருதி ஸ்மிருதி இதிஹாஸங்களி

† ஸ்வாமி யென்பதற்கு இச்சமயத்தில் ஆமென்பது பொருள்.

லிருந்தும், ஸ்ரீ ஹரதத்த சிவாசாரியார், அப்பைய தீக்ஷிதர் முதலிய பரம சாம்பவர்களுடைய வாக்கிலிருந்தும், தேவார திருவாசகங்கள் முதலியவற்றி லிருந்தும் அவ்வவ்விடத்திற் கேற்ப மேற்கோள்கள் காட்டிச் சபையை மகிழ்வித்த துடன் உங்களுடைய வாக்காகிய சூதசங்கிதையி லிருந்தும் சில ஸ்தலபுராணங்களி லிருந்தும் வாட்போக்கிக் கலம்பகம் முதலியவற்றி லிருந்தும் உசிதமான செய்யுட்களை எடுத்துக் காட்டி உபந்யஸித்தார்கள். எல்லோரும் அளவற்ற மகிழ் வடைந்தார்கள். அவற்றுள் உங்களுடைய பாடல்கள் அவர் களுடைய சாரீரத்தோடு சேர்ந்து செயற்கையழகும் பெற்று எல்லாருடைய மனத்தையும் கவர்ந்தன. அவர்கள் ஒரு விஷ யத்தை எடுத்துச் சொல்லிவிட்டு, 'இந்த விஷயமாகப் பிள்ளை யவர்கள் இப்படிச் சொல்லியிருக்கிறார்கள்' என்று சொல்லிச் செல்லும்பொழுது கேட்டவர்கள் உங்களுடைய அறிவின் வன்மையையும் ஸாஹித்யத்தின் அழகையும் அறிந்து வியந் தார்கள். அது தொடங்கி உங்கள் ஞாபகமாகவே இருந்து வரு கிறோம். மற்றவர்களும் அப்படியே இருக்கிறார்கள்" என்று சொன்னார். குணக் குன்றாகிய இவர் மிக்க பணிவுடன், "அடி யேனுக்கு யாது செயலுளது? எல்லாம் ஸந்நிதானத்தின் திரு வருளே" என்று விண்ணப்பம் செய்தனர். அங்கே உடனி ருந்த மற்றப் பெரியோர்களும் பிள்ளையவர்களுடைய வரவால் தங்களுக் குண்டான மனமகிழ்ச்சியைத் தங்கள் முகங்களாற் புலப்படுத்தினார்கள். பின்பு தேசிகர் என்னைக் கேட்ட சிலவற் றிற்கு, நான் ஏற்றவாறு விநயத்துடன் விடையளித்தேன்.

அப்பால் நான் ஸ்நானம் செய்துவிட்டு நியமங்களை முடித்துக்கொண்டு ஆகாரம் செய்யவேண்டிய இடத்திற்குச் சென்றேன். சென்று பார்த்தபொழுது அங்கே ஸம்ஸ்கிருத வித்துவான்களிற் சிலரும், சங்கீத வித்துவான்களிற் சிலரும் தனித்தனியே இருவர் மூவராக இருந்து சுலோகங்களைச் சொல்லிக்கொண்டும் கீர்த்தனங்களைப் பாடிக்கொண்டும் இடை யிடையே சுப்பிரமணிய தேசிகருடைய அருமையான குண விசேடங்களைப் பாராட்டிக்கொண்டும் இருந்தார்கள். 'இங்கே வந்தமையால் இனி நமக்கு யாதொரு கவலையும் இராது' என்று நினைத்து நான் அவர்களையெல்லாம் பார்த்துக்கொண்டே

நின்றேன். அப்போது அவர்களுள் ஒருவர் என்னை அழைத்து, "காலையில் நீர் பிள்ளையவர்களோடு ஸந்நிதானத்தைக் காண்பதற்கு வந்தபோது நாங்கள் அங்கிருந்தோம். ஸந்நிதானத்தின் கேள்விகளுக்கு நீர் உத்தரம் சொன்னதையெல்லாம் கேட்டோம். மிகவும் சந்தோஷமாக இருந்தது. பிள்ளையவர்களிடம் நீர் பாடங் கேட்டுக்கொண்டு வருவதும் ஸந்நிதானத்தை இன்று பார்த்ததும் உம்முடைய பெரும் பாக்கியமென்றே எண்ணுகிறோம். அவர்கள் நேத்திரங்களுக்கு நீர் எப்பொழுது விஷயமானீரோ அப்பொழுதே பாக்கியசாலி ஆனீர். அவர்களுடைய அன்புக்கு நாங்கள் பாத்திரமான காலந் தொடங்கிப் பரம ஸௌக்கியத்திலேயே இருந்து வருகிறோம். இப்பொழுது யாதொரு கவலையும் எங்களுக்கு இல்லை. பிறருடைய யோக்கியதையை அறிந்து ஸம்மானஞ் செய்தலில் அவர்களுக்குச் சமானமாக இப்பொழுது யாரிருக்கிறார்கள்?" என்று சொன்னார். அவற்றையெல்லாம் காது குளிரக் கேட்டேன். சிலர் என்னைச் சில பாடல்கள் சொல்லிப் பொருள் சொல்லச் சொன்னார்கள். அங்ஙனமே சொல்லியபின் ஆகாரம் செய்துவிட்டு அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தேன்.

## தம்பிரான்கள் சந்தேகம் கேட்டது

அங்ஙனம் இருக்கையில் என்னை அழைப்பதற்கு மடத்திலிருந்து ஒருவர் வந்தார்; உடனே விரைந்து சென்றேன். அப்பொழுது ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் நடுவே வீற்றிருக்க, பிள்ளையவர்களோடு சில தம்பிரான்களும் வேறு சிலரும் அயலில் இருந்தார்கள். அவர்கள் எழுத்திலக்கணம் முதலிய ஐந்தினையும் சுப்பிரமணிய தேசிகரிடம் பாடங்கேட்டு முடித்தவர்கள். ஆதலால், அவற்றி லுள்ள மேற்கோள் சிலவற்றிற்கு இப்புலவர் சிகாமணிபாற் பொருள் வினவிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுதப்பொழுது இன்ன இன்ன விஷயத்தைக் கேட்க வேண்டுமென்று தேசிகர் சொல்ல அப்படியே அவை அவர்களால் கேட்கப்பட்டன. அவர்கள் வினவுதலும் அதற்குப் பிள்ளையவர்கள் யாதொரு வருத்தமுமின்றி விடையளித்தலும் எனக்கு வியப்பை விளைவித்தன. அப்பால் தண்டியலங்காரத்

துள்ள அஷ்டநாகபந்தச் செய்யுளை அடக்குவதற்கு நாகங்களைப் போட்டுக் காட்டும்படி தம்பிரான் ஒருவர் கேட்ட பொழுது பிள்ளையவர்கள் எழுதுகோலையும் கடிதத்தையும் வருவித்துப் போடத் தொடங்குமுன் நான் ஒரு கடிதத்தில் அந்த நாகங்களைப் போட்டுக் காட்டினேன். நான் வலிந்து செய்த அச் செய்கை பெருந் தவருக இருந்தும் அதனைப் பொறுத்துக் கொண்டு, "நீர் இதை எங்கே கற்றுக்கொண்டீர்?" என்று இவர் கேட்டார். "செங்கணம் விருத்தாசல ரெட்டியாரவர்களிடத்துத் தெரிந்துகொண்டதுண்டு. இன்னும் ரதபந்தம் முதலியவற்றையும் போடுவேன்" என்று சொன்னேன்.

## சுப்பிரமணிய தேசிகர் எனக்குப் புத்தகங்கள் அளித்தது

அப்பொழுது இவர் அன்பு பாராட்டியதைக் கண்டு சுப்பிரமணிய தேசிகர் என்னைப் பார்த்து, "பிள்ளையவர்களிடம் நீர் நன்ருகப் படித்துக்கொள்ளும். அவர்கள் இங்கு வரும்பொழுது உடன் வாரும். உமக்கு வேண்டிய அனுகூலங்கள் கிடைக்கும். உமக்கு வேண்டிய புஸ்தகங்களெல்லாம் கொடுப்போம்" என்று சொல்லிவிட்டு, உடனே எழுந்து சென்று அங்கேயிருந்த பீரோ ஒன்றைத் திறப்பித்துக் கம்பரந்தாதி, துறைசையந்தாதி, அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ், கலைசைச் சிலேடைவெண்பா முதலிய பிரபந்தங்களுள் ஒவ்வொன்றிலும் நந்நான்கு அச்சுப் பிரதிகளுக்குக் குறையாமல் எனக்கு அளித்து, "இவற்றில் ஒவ்வொன்றை நீர் எடுத்துக்கொண்டு மற்றவற்றை உடன்படிக்கிற பிள்ளைகளுக்குக் கொடும்" என்ருர். பின்பு என்னைச் சில பாடல்களை இசையுடன் சொல்லச் செய்து கேட்டுவிட்டு இப் புலவர் திலகரை நோக்கி, "நேர்ந்த காலங்களில் சங்கீதத்திலும் இவரைப் பழக்கவேண்டும்" என்று சொன்னர். அவர் அங்ஙனம் பிரீதியைப் புலப்படுத்தியது, என்பால் இயல்பாகவே அன்பு வைத்திருந்த என் ஆசிரியருக்கு அதனைப் பின்னும் பல மடங்கு அதிகமாக்கிவிட்டது. அக்குறிப்பை அந்த நிமிஷத்திலேயே அறிந்து நான் உள்ளம் குளிர்ந்தேன்.

பின்பு தேசிகர் இவரை நோக்கி, "இங்கே சில தம்பிரான்களுக்கும் வேறு சிலருக்கும் பாடங் கேட்க வேண்டுமென்னும்

## திருவாவடுதுறையிலிருந்து பாடஞ்சொல்லும்படி கூறியது

ஆவல் அதிகமாக இருக்கிறது. பாடஞ் சொல்வதற்கு நமக்குச் சிறிதும் நேரமில்லை. ஆதலால் வழக்கம்போலவே இங்கிருந்து அவர்களுடைய எண்ணத்தைப் பூர்த்தி பண்ணவேண்டும். அது நமக்கும் சந்தோஷத்தை விளைவிக்கும். சிரமத்தைப் பாராட்டக்கூடாது'' என்றார். உடனே இவர், ''ஸந்நிதானத்தின் திருவுள்ளப்பாங்கின்படியே செய்யக் காத்திருக்கிறேன்'' என்று சொல்லவே அங்கே உடன் வந்திருந்த ஆறுமுகத்தா பிள்ளை திடீரென்று எழுந்து அஞ்சலி செய்து நின்று, ''ஐயா அவர்களை அழைத்துக்கொண்டு சென்று பட்டீச்சுரத்திற் சில காலம் வைத்திருந்து அடியேனுடைய குடும்பத்தில் ஏற்பட்டுள்ள சில குறைகளைத் தீர்த்துக்கொள்ள எண்ணியிருக்கிறேன். அதன் பொருட்டுத்தான் மாயூரம் சென்றேன். சில காலம் பட்டீச்சுரத்தில் இருந்துவரும்படி ஐயா அவர்களுக்குக் கட்டளையிட்டருள வேண்டும்'' என்று வணக்கத்துடன் விண்ணப்பம் செய்துகொண்டார். தேசிகர், ''அப்படியே செய்யலாம்; பட்டீச்சுரம் போய்ச் சில காலம் இருந்துவிட்டு இங்கே வந்துவிடவேண்டும்'' என்று கூறவே, எழுந்து பணிந்து விடைபெற்று விபூதிப் பிரசாதம் வாங்கிக்கொண்டு இவர் புறம்போந்து வீதிக்கு வந்தார். அப்பொழுது அங்கே படித்துக்கொண்டிருந்த தம்பிரான்களுட் சிலர் இக்கவிஞர் பெருமானைச் சூழ்ந்துகொண்டு நெடுந்தூரம் உடன் வந்து வழியனுப்பினர்கள்.

---

# 4. பட்டீச்சுரம் போய் வந்தது

## திருவிடைமருதூர் சென்றது

போகும் வழியில் இவர் திருவிடைமருதூரி லுள்ள ஓரன்பர் வீட்டிற்குச் சென்று அங்கே தங்கினர். மாலை அனுஷ்டானம் செய்துவிட்டுப் பின்பு சயனித்துக்கொண்டார். மிகவும் தளர்ந்த சரீரமுடையவ ராதலால் மடத்திலிருந்து பாடஞ் சொல்லும் பொழுதல்லாத சமயங்களிலெல்லாம் இவர் பெரும்பாலும் சயனித்துக்கொண்டே பாடம் சொல்லுதல் முதலியவற்றை வழக்கமாக வைத்துக் கொண்டிருந்தார். நான் இவர் அருகில் இருந்தேன். அப்பொழுது சில நூல்களில் உள்ள அரிய பாடல்களைச் சந்தர்ப்பத்துடன் கூறிப் பொருளும் சொன்னதன்றித் திருவாவடுதுறை மடத்தில் 14-ஆம் பட்டத்தி லிருந்த வேளூர் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருடைய இயல்புகளையும் அவரைச் சார்ந்து தாம் அடைந்த பயன்களையும் சொன்னர்.

## தியாகராச செட்டியாரைப் பார்த்தது

திருவிடைமருதூரிலிருந்து மறுநாட்காலையிற் புறப்பட்டுச் செல்லுகையில் நான், "தியாகராச செட்டியா ரவர்களைப் பார்க்கவேண்டுமென்ற விருப்பம் எனக்கு அதிகமாக இருக்கிறது. இப்பொழுது கும்பகோணம் வழியாகவே பட்டீச்சுரத்திற்கு விஜயம் செய்யக்கூடுமோ?" என்று கேட்டேன்.

இவர், "தியாகராசு சிறந்த புத்திமான்; நல்ல பயிற்சியும் தெளிவும் சொல்வன்மையும் உள்ளவன். இன்று அவனைப் பார்த்துவிட்டுத்தான் நான் பட்டீச்சுரம் போகக் கூடும். ஆதலால் நீரும் அவனைப் பார்க்கலாம்" என்று சொல்லிக் கொண்டே, கும்பகோணம் சென்று ஸ்ரீ சக்கரபாணிப் பெருமாள் கோயிலின் தெற்கு வீதியிலுள்ள அவருடைய வீட்டுத் திண்ணையில் ஏனையவர்களோடும் இருந்தார். விசாரித்தபொழுது வீட்டில் செட்டியார் இல்லை யென்று தெரியவந்தது.

உடனே அவரிடம் படித்துக்கொண்டிருந்த திருக்கரு காவூர் மாதவிவனம் பிள்ளை யென்பவர் ஓடிப்போய்ச் சொல்லச் செட்டியார் வேகமாக வந்து, "ஏன் இங்கே இருக்கிறீர்கள்? உள்ளே போய் இருக்கவேண்டாமா?" என்று சொல்லி வந்தனம் செய்துவிட்டு எழுந்து தவசிப்பிள்ளையைப் பார்த்து, "சீக்கிரம் சமையலுக்கு ஏற்பாடு செய்யவேண்டும்" என்று சொன்னார். அப்போது இவர், "பட்டீச்சுரத்திற்கு இன்று அவசியம் போக வேண்டியிருக்கிறது" என்று சொல்லிவிட்டு உடனே புறப்பட, செட்டியாரும் வேறு சிலரும் உடன் வருவாராயினர்.

## பட்டீச்சுரம் முதலியவற்றின் வரலாறு

பட்டீச்சுரத்திற்குப் போகும்பொழுது இடையி லுள்ள தாராசுரமென்னும் தலத்தின் பெருமையையும் சத்தி முற்றம், பட்டீச்சுரம் முதலிய தலங்களின் பெருமைகளையும் சொல்லிக்கொண்டே போனார். ஊர் சேர்ந்தவுடன் ஆறு முகத்தா பிள்ளை தம்முடைய வீட்டிற்கு எல்லோரையும் அழைத்துச் சென்றார்.

இக்கவிஞர் கோமான் பட்டீச்சுரம் சென்ற தினத்தின் மாலையில் திருமலைராயனாற்றிற்கு என்னை அழைத்துச் சென்றார். இடையிலே காணப்படும் இடங்களையெல்லாம் சுட்டிக் காட்டி அவற்றின் சரித்திரங்களைச் சொல்லிக்கொண்டே போனார். கோயிலில் ஸ்ரீ ரிஷபதேவர் சந்நிதியினின்றும் முற்றும் விலகியிருத்தலைக் கண்டு அதற்குக் காரணம் என்னவென்று கேட்டேன். "திருச்சத்திமுற்றத்திலிருந்து முத்துப் பந்தரின் கீழே திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் கோபுர வாயில் வழியே எழுந்தருளும் கோலத்தைத் தாம் பார்த்தற்கு விரும்பி ஸ்ரீ தேனுபுரேசர் விலகியிருக்கும்படி கட்டளையிட அதைக் கேட்டு ரிஷப தேவர் விலகியிருந்தனரென்பது பழைய வரலாறு" என்று இவர் விடையளித்தார்.

## தமிழபிமானிகள் முதலியோர் வந்துபோதல்

பட்டீச்சுரத்திற்கு இவர் வந்திருத்தலை யறிந்து அவ்வூரி லுள்ள தமிழபிமானிகளும் கும்பகோணத்திலும் அயலூர்களி லும் இருந்த வித்துவான்களும் பிரபுக்களும் அடிக்கடி வந்து

இவரோடு அளவளாவி இன்புறுவதன்றிப் படித்தவற்றில் தமக்குள்ள ஐயங்களைப் போக்கிக்கொண்டும் பல அரிய நூற்பொருள்களை அறிந்துகொண்டும் செல்வார்கள். தியாகராச செட்டியாரும் தம்முடைய மாணாக்கர்களோடு விடுமுறை நாட்களில் வந்து பார்த்துவிட்டுச் செல்வார்; யார் வந்தாலும் தமிழ் நூல்களைப் பற்றிய சம்பாஷணைகளே நடைபெறும்.

## ஆறுமுகத்தா பிள்ளையின் அன்பு

திருமலைராயனாற்றிற்குத் தென்பாலுள்ளதாகிய மேலைப் பழையாறை யென்னும் ஊர் ஆறுமுகத்தா பிள்ளைக்கே உரியதாக இருந்தது. அவ்வூர் தெற்கிலும் வடக்கிலும் இரண்டு நதிகளை எல்லையாகப் பெற்று விளங்குவது. ஊரின் நான்கு பக்கங்களிலும் வாழைப்புதர்கள் அடர்ந்த படுகைகளும் நடுவில் நன்செய் வயல்களும் இடையிடையே தென்னந்தோப்புக்களும் கமுகந்தோட்டங்களும் மாந்தோப்புக்களும் உண்டு. தென்னை பலா முதலிய மரங்கள் அடர்ந்துள்ள ஒரு தோட்டத்தினிடையில் மிகவும் அழகியதான கட்டிடமொன்று இருந்தது. ஓய்வுநேரங்களிலெல்லாம் சென்று இவர் அன்பர்களுடன் அதில் தங்கியிருப்பார். அங்கே பாடமும் நடைபெறும். நல்ல கனிவர்க்கங்களையும் இளநீர்களையும் இனிய பிற பொருள்களையும் ஆறுமுகத்தா பிள்ளை அடிக்கடி வருவித்து அங்கே இவருக்கும் மற்றவர்களுக்கும் கொடுக்கச் செய்வார். நிலவளத்தால் அவை சுவை முதிர்ந்தனவாய் உண்பவர்களுக்கு இன்பத்தை உண்டுபண்ணும்.

எந்தக் காலத்தும் எனக்குப் பாடம் நடந்துகொண்டேயிருக்கும்; பாடம் சொல்லாவிட்டால் இவருக்குப் பொழுது போகாது. வருகிறவர்கள் தாம் கேட்க வேண்டியவற்றைக் கேட்டு முடித்த பின் நான் கேட்கும் பாடங்களையும் கேட்டு மகிழ்ந்து செல்வார்கள். ஒவ்வொருநாளும் பிற்பகலில் அயலூரார் வருவார்கள். அப்பொழுதப்பொழுது தாம் கேள்வியுற்ற பல செய்திகளை எங்களுக்கு இவர் சொல்வதுண்டு.

## நான் திருநாகைக் காரோணப் புராணம் பாடங் கேட்டது

நான் கொண்டுபோன பிரபந்த நூல்கள் கேட்டு முற்றுப் பெற்றன. மேலே கேட்பதற்குப் பாடபுத்தகம் ஒன்றும் என் கையில் இல்லாமையை அறிந்து ஒருநாள் ஆறுமுகத்தா பிள்ளையிட மிருந்த திருநாகைக்காரோணப் புராணத்தை வாங் கிக்கொடுத்து இவர் பாடஞ் சொல்லி வந்தார். சொல்லி வருகை யில் அந்நூலில் தினந்தோறும் முதலில் 50-பாடல்களுக்குக் குறையாமல் 100-செய்யுள் வரையிலும், இரண்டுவாரங் கழித்த பின்பு 100-செய்யுள் முதல் 200 வரையிலும் கேட்டு வந்தேன். ஒவ்வொரு செய்யுளிலு முள்ள பொருள் நயங்களையும் சொன் முடிபு பொருள் முடிபுகளையும், மேற்கோள்களையும் அப்பொழு தப்பொழுது சொல்லி என் மனத்திற் படும்படி செய்து வந்தார். விரைந்து நான் படித்துச் செல்லுவேனாயின் அவ்வாறு படித்தலைத் தடுத்து ஒவ்வொரு செய்யுளின் சுருக்கத்தையும் நல்ல நடையிற் சொல்லும்படி செய்து வருவார்; இச்செய்யுளால் அறிந்து மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டியவை இன்னவை யென்றும் சொல்லு வார். இங்ஙனம் இவர் பழக்கிவந்தமை கவனிப்பையும் ஆராய்ச்சி முறையையும் எனக்கு உண்டுபண்ணியது. அந்தப் புராணத்தால் அறிந்துகொண்ட காப்பியச் சுவைகள் பலவாதலின், தமிழ்ப் பாஷையின் பெருமையையும் அந்நூலை இயற்றிய இவருடைய கல்வி மேம்பாட்டையும் அறிந்து இன்புறுவேனானேன். அந்நூல் முற்றுப்பெற்றபின் இரண்டா வது முறையும் அதைக் கேட்க விரும்பினேன். அப்படியே படிக்கச்செய்து அரிய பகுதிகளை விளக்கிக்கொண்டே வந்தார். இரண்டாம் முறை பாடம் கேட்டதில் பின்னும் பல புதிய விஷயங்கள் தெரியவந்தன. சில தினங்களில் அந்நூல் முற்றுப்பெற்றது.

## மாயூரப் புராணம் பாடம் கேட்டது

அப்பால் ஆறுமுகத்தாபிள்ளையிட மிருந்த மாயூரப் புரா ணத்தை வாங்கிப் பாடங் கேட்டு வந்தேன். உதயகாலந் தொடங்கியே பாடம் ஆரம்பிக்கப்படும். மணி எட்டானால் காலையாகாரம் செய்துகொண்டு வரும்படி என்னை இவர்

அனுப்பிவிடுவரர். காலை ஆகார மானவுடன் பத்து அல்லது பதி ஞெரு மணிவரையிற் பாடம் நடைபெறும். மாலையில் திருமலை ராயனாறு சென்று அனுஷ்டானம் செய்துவிட்டுத் திரும்புகை யில் ஆகாரம் செய்துகொண்டு வரும்படி அக்கிரகாரத்திலுள்ள வீட்டினுள் என்னை அனுப்பி நான் உண்டு வரும் வரையில் அவ் வீட்டுத் திண்ணையில் தனியே இவர் இருப்பார். இவரிருத்தலை வீட்டுக்காரர் தெரிந்துகொண்டு தீபங் கொணர்ந்து வைத்தால் உண்டு; இல்லாவிட்டால் இருட்டிலேதான் இவர் தனியே யிருப்பார். அங்ஙனம் அமைந்த பேரன்பை என்னவென்று சொல்லுவேன்! இப்படி ஒருவர் இருந்ததாகக் கதையிலும் கேட்டதில்லை. அப்பால் ஆறுமுகத்தா பிள்ளையின் வீட்டுக்கு என்னை அழைத்துச் சென்று பாடம் சொல்லுவார்.

மாலை யனுஷ்டானத்தை முடித்த பின்பு ஆறுமுகத்தா பிள்ளை கந்தபுராணத்தைப் பாராயணஞ் செய்வது வழக்கம்; அதற்காகப் புத்தகமுங் கையுமாக அவர் வந்தவுடன் என் பாடம் நிறுத்தப்படும். முதல் நாள் விட்ட இடத்தி லிருந்து அப்புராணத்தை அவர் படிக்கத் தொடங்குவார். இவர் அதி லுள்ள கடினமான பாகத்திற்கு மட்டும் அவர் விரும்பும் பொழுது பொருள் சொல்லுவார். அது 9-மணி வரையில் நடைபெறும். அதுவும் எனக்குப் பேருதவியாக இருந்தது. அதற்கு மேலே இவருக்கும் ஆறுமுகத்தா பிள்ளை முதலியவர் களுக்கும் வேறு வேறிடங்களிற் படுக்கைகள் போடப்படும். முக்கியமானவர்கள் அங்கங்கே சென்று சயனித்துக் கொள்வார் கள். அப்படியே சயனம் பண்ணிக்கொள்ளும் பாவனையோடு இவர் வந்து படுத்துக்கொள்வார். இவருடைய பக்கத்தில் வைக்கப்பட்டிருக்கும் விளக்கின் அருகில் இருந்து இவருக்கு நித்திரை வரும்வரையில் நான் பாடம் கேட்டுக்கொண்டிருப் பேன். இவர் நித்திரைசெய்யத் தொடங்குவாராயின் நானும் அந்தச் சமயம் பார்த்து மெல்ல எழுந்து தூங்கச் செல்வேன்.

அதன்பின்பு 12-அல்லது ஒரு மணிக்குமேல் ஆறுமுகத்தா பிள்ளை விழித்து எழுவார். எழுந்தவுடன் வீட்டின் வெளிப் புறத்தே சென்று திண்ணையைப் பார்த்துவிட்டு வருவார்; திண்ணையில் யாரேனும் உண்பதற்கு வந்திருக்கிறார்களா என்று பார்த்து யாரேனும் இருந்தால் அவர்களை உள்ளே

அழைத்துச்சென்று உண்பிப்பது பகற்காலத்திலும் இரவிலும் அவரது வழக்கம். பின்பு எழுப்பி உண்ணுதற்கு இவரை அழைத்துச் செல்வார். உண்பதற்கு இவர் அமர்ந்தவுடன் யாவரும் அமர்ந்து பேச்சின்றியே ஆகாரம் செய்வார்கள். எத்தனைபேர்கள் வந்தாலும் அவரவர்க்குத் தக்கபடி உண வளிக்கப்படும். அந்தப்படியே தினந்தோறும் நடைபெற்று வந்தது. வேளாள னென்பான் விருந்திருக்க உண்ணுதான்'' என்னும் முதுமொழிப் பொருள் ஆறுமுகத்தா பிள்ளையிடம் நன்றாக அமைந்திருந்தது.

## நூலுக்கும் நீருக்கும் சிலேடை

ஒருநாள் பிள்ளையவர்களோடு ஆறுமுகத்தா பிள்ளையும் நாங்களும் ஸ்வாமிமலை சென்று முருகப்பிரானைத் தரிசனஞ் செய்துவிட்டுத் திரும்பி வருகையில் காவிரியின் கரையை அடைந்தோம். அப்பொழுது பட்டுச் சாலியர்களிற் சிலர் நெய்தற்குரிய நூல்களை அந் நதியில் கழுவிக்கொண்டிருந்தார் கள். அதைக் கண்ட ஆறுமுகத்தாபிள்ளை என்னைப் பார்த்து, "இந்த நூலுக்கும் நீருக்குமாக நீர் பத்து நிமிஷத்தில் ஒரு சிலேடை வெண்பாப் பாடும், பார்ப்போம்'' என்றார். 'அவ் வளவு சீக்கிரத்திற் செய்ய முடியாதே ; செய்யாவிட்டால் இவர் என்ன கடினமான வார்த்தைகளைச் சொல்வாரோ!' என்று நான் யோசித்துக்கொண்டு நின்றேன். இவர், "இவ்வளவு கடினமான விஷயத்தைக் கொடுத்துச் சீக்கிரத்திற் பாடி முடிக் கச் சொன்னால் இவரால் ஆகுமா?'' என்று சொல்லிவிட்டு உடனே முதலிரண்டடியைத் தாம் பாடி முடித்துப் பின் இரண் டடிகளைச் செய்யும்படி எனக்குச் சொன்னார் ; அவ்வாறே பாடி முடித்தேன். அச்செய்யுள் வருமாறு :—

(வெண்பா)

"வெள்ளை நிறத் தாற்செயற்கை மேவியே வேறுநிறம்
கொள்ளுகையாற் றோயக் குறியினால்—உள்ளவன்பிற்
றாய்நேர்ந்த வாறுமுகத் தாளாளா நீமொழிந்த
ஆய்நூலு நீருநிக ராம்''

[தோய் அக் குறி - நீரில் தோய்க்கும் அச்செயல் ; தோயம் குறி - தோயமென்னும் பெயர்]

## எனக்கு நைடதம் அளித்தது

சில நாட்களுக்குப் பின் இவரிடம் உத்தரவு பெற்று ஸரஸ்வதி பூஜையன்று பட்டீச்சுரத்துக்கு அருகிலுள்ள என் ஊராகிய உத்தமதானபுரம் சென்றேன். பூஜையை அங்கே முடித்துக்கொண்டு மறுநாளாகிய விஜயதசமியன்று புனப் பூஜையைச் செய்தபிறகு பிற்பகலில் புறப்பட்டுப் பட்டீச்சுரம் வந்து 4 மணிக்குப் பிள்ளையவர்களைக் கண்டேன். "ஏன் இவ்வளவு அவசரமாக வந்தீர்?" என்றார். "இன்று விஜய தசமியாதலால் ஐயா அவர்கள் கையால் ஏதாவது புஸ்தகம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளலாமென்று எண்ணி விரைந்து வந்தேன்" என்றேன். உடனே அந்த வீட்டிற் பூஜையி லிருந்த சுவடிகளுள் ஏதாவதொன்றைக் கொண்டுவரும்படி இவர் ஒருவரை அனுப்பினர். போனவர் ஓரேட்டுச் சுவடியை எடுத்துக் கொணர்ந்து கொடுத்தார். அதனை என்னிடம் அளித்த இவர், " என்ன நூலென்று பிரித்துப் பார்த்துச் சொல்லும்" என்றார். அங்ஙனமே பிரித்து, "இது நைட தத்தின் மூலம்" என்றேன். கேட்ட இவர், "நைடதத்தைப் படித்தாற் கலிபீடை நீங்குமென்று சொல்வார்கள். ஆதலால் இப்புத்தகத்தைப் பெற்ற உமக்குக் கலி இன்றோடு நீங்கிவிட் டது. இனி ஒருபோதும் அணுகமாட்டாது" என்றார். அப் பொழுது நான், " இங்கே படித்தற்கு எப்பொழுது வந்தேனோ அப்பொழுதே என்னைச் சார்ந்திருந்த அரிஷ்டமெல்லாம் நீங்கிவிட்டன வென்றே துணிந்திருக்கிறேன். அன்றியும் மாயூரத்தில் முதன்முறையாக இங்கே பெற்றுக்கொண்டதும் நைடதமே. அப்பொழுதே அவ்வாறு எண்ணினேன்" என்று சொன்னேன்.

## பாடம் சொல்லப் பயிற்றல்

புதிய மாணாக்கர்களுக்குப் பழைய மாணாக்கர்களைக் கொண்டு பாடம் சொல்லுவிப்பது இவருக்கு வழக்கம். அதற் குக் காரணம் அவர்களுக்குப் பாடஞ்சொல்லும் ஆற்றல் உண்டாக வேண்டுமென்பதுதான். ஏதேனும் பிழையிருந்தால் சொன்னவரைத் தனியே அழைத்து உண்மையைத் தெரிவிப் பார்.

ஒருநாள் பட்டீச்சுரத்திலிருந்து கும்பகோணத்திற்குப் போகும்பொழுது நான் மற்றொருவருக்குக் குடந்தைத் திரிபந்தாதிக்குப் பொருள் சொல்லிக்கொண்டே சென்றேன். "நாட்டஞ் சிவந்தனை" (14) என்னும் செய்யுளில் 'சிவந்தனை நேர்ந்தேயுறும்' என்பதற்குச் சிவமானது தன்னை ஒத்தே அத்தலத்தில் எழுந்தருளியிருக்கின்ற தென்று சொன்னேன். கேட்ட இவர், அவ்விடத்திலேயே நின்றுகொண்டு என்னைத் தனியே அழைத்து, 'நேர்ந்து' என்பதற்கு, 'கொடுத்து' என்பது பொருளென்றும் இனிக் கவனித்துச் சொல்லவேண்டுமென்றும் சொல்லிவிட்டு முன்னே செல்வாராயினர்.

## தன்பெருமை தானறியாத் தன்மையன்

கும்பகோணம் பட்டீச்சுரத்திற்குச் சமீப மாதலால் ஆறுமுகத்தா பிள்ளைக் குரிய சில காரியங்களை முடித்துக்கொடுத்தற்கும், வரவேண்டுமென்று விரும்பிய அன்பர்களுடைய வேண்டுகோளை நிறைவேற்றுவதற்கும் நினைந்து அடிக்கடி எங்களை அழைத்துக்கொண்டு இவர் அங்கே சென்று வருவார்.

ஒருநாள் அந்த நகருக்குச் சென்று ஓரிடத்திற் பல பிரபுக்களோடு பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது அங்கே இருந்த எதிராஜபிள்ளை யென்னும் கனவானொருவர் சந்தர்ப்பத்திற்குத் தக்கபடி ஓர் இனிய செய்யுளைக் கூறினர். அங்கிருந்த யாவரும் அதனைக் கேட்டு அதன் இனிமையைப் பாராட்டினர். இவரும் அச்செய்யுளின் நயத்தை வியந்துவிட்டு, "இச் செய்யுள் எந்த நூலில் உள்ளது?" என்று கேட்டார். "தாங்கள் இயற்றிய கும்பகோண புராணத்தி லுள்ளது" என்றார் அவர். அதனைக் கேட்ட யாவரும் ஆச்சரிய முற்றனர். அளவிறந்த செய்யுட்களைப் பாடியவ ராதலின் அது தாம் இயற்றிய செய்யுளென்பதை இவர் அறிந்திலர். இதைப்போன்ற நிகழ்ச்சிகள் சிலவற்றை யான் அறிந்திருப்பதுண்டு.

## நான் விடைபெற்றுச் சென்றது

பின்பு, "தீபாவளிக்குத் தாய்தந்தையர் இருக்குமிடத்திற்குப் போக எண்ணியிருக்கிறேன்; விடையளிக்கவேண்டும்"

என்று இவரை நான் கேட்டுக்கொண்டேன். அப்படியே செய்யலாமென்று சொல்லிப் பட்டுக்கரை அங்கவஸ்திரம் இரண்டை வருவித்துத் தீபாவளியில் உபயோகித்துக் கொள்ளும்படி இவர் கொடுத்தார். நான் புறப்படுதற்கு விடை பெறும் பொழுது "தீபாவளி ஸ்நானஞ் செய்துவிட்டு மாயூரத் திற்கே வந்துவிடலாம்; அதற்குள் நானும் அங்கே போய்விடு வேன்" என்றார். அப்பால் என் தந்தையார் இருந்த கோட் டூருக்குச் சென்றேன். சென்றது முதல் ஜ்வரநோயால் மிகவும் பீடிக்கப்பட்டேன்; அதனால் குறிப்பிட்டபடி மாயூரம் செல்லு தற்கு முடியவில்லை. பின்பு இவர் மாயூரம் போய்விட்டார். சொல்லியிருந்தபடி நான் அங்கே வாராமையாற் கவலை யுற்று என்னைப் பார்த்து வரும்படி ஒரு மனிதரை அனுப்பினர். "ஜ்வரத்தால் வரமுடியவில்லை; சௌக்கியமானவுடன் வந்து விடுவேன்" என்று அவரிடம் சொல்லி அனுப்பினேன். அடிக்கடி யாரையேனும் அனுப்பி என்னைப் பார்த்துவரச் செய்து என் தேகநிலையை அறிந்துகொண்டே யிருந்தார்; நானும் இவருடைய ஞாபகமாகவே யிருந்தேன். மார்கழி மாதத் தின் இறுதியில் எனக்கிருந்த ஜ்வரநோய் நின்றது.

---

# 5. திருவாவடுதுறைக் குருபூஜை நிகழ்ச்சிகள்

## திருவாவடுதுறையில் நான் இவரைப் பார்த்தது

தை மாதத்தில் திருவாவடுதுறையில் நடக்கும் ஸ்ரீ நமச்சி வாய மூர்த்தியினுடைய குருபூஜைக்கு இவர் வரக்கூடுமென்று தெரிந்தமையால் நான் இவரைப் பார்த்தற்கு அசுவதி நக்ஷத் திரத்தன்று அவ்வூர் சென்றேன்; அவ்வூர்க் காட்சி என் மனத் தைக் கவர்ந்தது. குருபூஜைக்காக வெளியூர்களிலிருந்து வந்த சிஷ்யர்களாகிய பல பிரபுக்களும் வித்துவான்களும் ஆங்காங்

குக் குழுமியிருந்தார்கள். கூட்டத்தின் மிகுதியால் இவரது இருப்பிடந் தெரிந்து சென்று இவரைப் பார்க்க முடியவில்லை. பின்பு தேடிய பொழுது தெற்கு வீதியில் ஒரு வீட்டுத் திண்ணையில் சிலரோடு பேசிக்கொண்டு இவரிருத்தலைக் கண்டு சென்று பக்கத்தில் நின்றேன்; அப்பொழுது இவர் "எப்பொழுது வந்தீர்? உடம்பு சௌக்கியமா? ஆகாரம் ஆயிற்றா?" என்றார். "இன்று காலையில் வந்தேன். தேக ஸ்திதி சௌக்கியமாக இருக்கிறது ஆகாரம் செய்தாயிற்று" என்று சொன்னேன்; அப்பால் இருக்கச் சொன்னபடி ஓரிடத்தில் இருந்து இவர் பேசுவனவற்றை யெல்லாம் கேட்டுக்கொண்டே யிருந்தேன்.

உடன் இருந்தவர்கள் சென்ற பின்பு இவர், "இனிப் பாடங் கேட்க வரலாமே" என்று என்னிடம் சொன்னார்; "கேட்கும் காலத்தை எதிர் பார்த்தே ஒவ்வொரு நிமிஷமும் காத்திருக்கிறேன்" என்று சொன்னேன்; மாயூரம் போன பின் அப்படியே செய்யலாம்" என்று சொல்லிவிட்டுப் பிற்பகலில் ஐந்து மணிக்குமேல் மடத்திற்குச் சென்றார், நானும் உடன் சென்றேன்.

## தம்பிரான்கள் பாடம் கேட்டது

அப்பொழுது அங்கேயிருந்த குமாரசாமித் தம்பிரான் பரமசிவத் தம்பிரான் முதலியோர் எழுந்து நின்று இவரை வரவேற்றார்கள். இவரை அங்கே ஓரிடத்தில் இருக்கச்செய்து அவர்களும் இருந்தார்கள். சிலநேரம் உரையாடிக்கொண்டே யிருந்துவிட்டு அவர்கள், "ஏதேனும் ஒரு நூலை நாங்கள் இப்போது பாடங் கேட்கலாமோ?" என்றார்கள். இவர் கேட்கலாமென்று சொல்லவே அவர்கள் காசிக் கலம்பகம் கேட்கத் தொடங்கினார்கள்; "*காசிச்சாமி (பரமசிவத் தம்பிரான்) இருக்கும்பொழுது இக்கலம்பகம் நடைபெறுவது மிகவும் பொருத்தமுடையதே" என்று சொல்லிவிட்டு இவர் பாடஞ் சொன்னார்; இரவு எட்டு மணிக்குள் ஐம்பது பாடல்கள் படிக்கப்பட்டன. அப்பால் அவரவர்கள் தத்தம் இடஞ் சென்றார்கள்.

பத்து மணிக்குமேல் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருடைய பட்டணப் பிரவேசமும் கொலு முதலியனவும் நடைபெற்றன. அவை வந்தவர்களுடைய கண்களையும் மனங்களையும் கவர்ந்தன. அவை முடிய இரவு நெடுநேர மாயிற்று. இப்புலவர்பிரான் தமக்காக அமைக்கப்பட்டிருந்த வீட்டின் இடைகழியில் வந்து சயனித்துக்கொண்டார். அப்போது சுப்பிரமணிய தேசிகரிடம் விடை பெற்றுக்கொண்ட பிரபுக்களிற் சிலரும் வித்துவான்களிற் சிலரும் இவரிடம் வந்து பேசிக்கொண்டிருந்துவிட்டு விடைபெற்றுச் சென்றார்கள். அதனால் இவர் நித்திரை செய்யவேயில்லை.

"சீக்கிரத்தில் வந்து இவ்விடத்திலேயே இருந்து கொண்டு எங்களுக்குப் பாடஞ் சொல்லவேண்டும்" என்று தம்பிரான்களிற் சிலரும் மேலகரம் சண்பகக் குற்றாலக் கவிராயர் முதலிய சிலரும் இவரைக் கேட்டுக்கொண்டார்கள். இவர் அப்படியே செய்வதாக அவர்களுக்கு வாக்களித்துவிட்டு என்னைப் பார்த்து, "நீர் ஊர் போய் வேண்டிய புத்தகங்களை எடுத்துக்கொண்டு நேரே மாயூரம் வந்து படித்துக்கொண்டிரும்; நான் இங்கே வரும் பொழுது உடன்வரலாம்" என்று விடைகொடுத்து அனுப்பினார்.

## மாயூரத்திற் பாடம் சொன்னது.

நான் ஊர் சென்று சிலதினம் அங்கே இருந்துவிட்டு அப்பால் என் புத்தகங்களை யெல்லாம் எடுத்துக்கொண்டு மாயூரம் சென்றேன். அதற்குள் இவரும் அங்கே வந்து மாணாக்கர்களுக்குப் பாடம் சொல்லிக்கொண்டிருந்தார். அங்கே நடந்த பாடம் துறைமங்கலம் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தத் திரட்டில் நால்வர் நான்மணிமாலை முதலியன; நானும் உடனிருந்து கேட்டுக்கொண்டிருந்தேன்.

## நான் திரு அம்பர்ப்புராணம் பாடம் கேட்டது

இரண்டு தினங்கள் சென்ற பின்பு அதற்கு முன்னமே பாடத் தொடங்கி முற்றுப்பெறும லிருந்த திரு அம்பர்ப் புராணச் சுவடியை எடுத்து வரும்படி எனக்குச் சொன்னார். எடுத்துச் சென்றேன். அதை முதலிலிருந்தே படிக்கச் சொல்லிப்

பொருளும் சொல்லிவந்தார். சில தினத்தில் அதில் எழுதியிருந்த பாகம் முற்றுப்பெற்றது. அந்நூலை இடையிடையே திருத்தச் சொன்னபடி திருத்திக்கொண்டே படித்தேன்; "எழுதுகிறவர்களில் நான் சொன்னபடியே எழுதுவோரு முண்டு; வேறுபடத் திருத்தித் தம் மனம்போனவாறே அங்கங்கே எழுதுபவரு முண்டு. இப்புத்தகத்தை இதுவரையில் எழுதிவந்தவர் இரண்டாம் வகையைச் சேர்ந்தவ ராதலால் ஐயமுற்றுப் படிப்பித்து இப்பொழுது திருத்தும்படி செய்தேன்" என்று திருத்துவித்ததற்கு இவர் காரணம் சொன்னார்.

---

# 6. திருவாவடுதுறை வாசம்

## அம்பர்ப்புராணம்

அப்பால் இவர் முன்பு தான் வாக்களித்திருந்தபடி திருவாவடுதுறை செல்ல நிச்சயித்துப் புறப்பட்டார். அம்பர்ப்புராணத்தை எடுத்துக்கொண்டு உடன்வரும்படி சொன்னமையால் அதனையும் என் புத்தகங்களையும் எடுத்துக்கொண்டு உடன் சென்றேன். மாயூரத்தின் மேல்பாலுள்ள கூறைநாடு செல்லும் வரையில் பொதுவாகப் பாடவகைகளைப் பற்றிப் பேசிக்கொண்டே இருந்துவிட்டுப் பின்பு அம்பர்ப்புராணச்சுவடியை எடுத்துக்கொள்ளும்படி சொல்லி ஆன பாகத்தில் இறுதிப் பாடலைப் படிக்கச் செய்து கேட்டார். பின்பு மேலே தொடர்ச்சியாகச் செய்யுட்களை இயற்றிச் சொல்லிக்கொண்டே போனார். இவர் பாடத் தொடங்கியது அப்புராணத்தில் நந்தன் வழிபடு படலத்தில் 54-ஆவது பாடல். திருவாவடுதுறைத் தெற்கு வீதி செல்லும் வரையில் மேற்பாகத்தைச் சொல்லிக்கொண்டே சென்றார்; நான் எழுதிக்கொண்டே போனேன். அந்தப் பகுதி நந்தனென்னும் அரசன் தனது நகரிலிருந்து புறப்பட்டு இடையிலேயுள்ள சிவதலங்கள்தோறும் சென்று சென்று தரிசனம் செய்துகொண்டு திருவம்பரை அடைந்தா னென்பது. அதிலுள்ள செய்யுட்களில் தலப்பெயர்களை எதுகையில் அமைத்

திருத்தலும் வழியெதுகைகளும் தலங்களின் சரித்திரங்களும் இன்பத்தை உண்டுபண்ணின. இவர் விரைவாகச் செய்யுள் செய்யும் ஆற்றலையுடையவரென்று பலரும் புகழ்ந்து சொல்லுதலைக் கேட்டு அந்த நிலைமையை எப்பொழுதாவது பார்க்கும்படி நேருமோவென்று ஆவலோடு பலநாளாக எதிர்பார்த்திருந்த எனக்கு இவர் பாடல்களைச் சொல்ல அவற்றை எழுதும் பாக்கியம் அன்று கிடைத்ததைக் குறித்து மெத்தச் சந்தோஷம் அடைந்தேன். 'இனி யாரேனும் இவர்களைப் போலப் பாடப்போகிறார்களா?' என்ற எண்ணமும் எனக்கு அப்போது உண்டாயிற்று.

கவிஞர்களுடைய பேராற்றல் இத்தகைய தென்பதைச் சரித்திரங்களின் மூலமாக அறிந்தவனேயன்றி அன்றுபோல நான் நேரிற் பார்த்ததில்லை. ஆதலின் ஒருமகாகவியின் வாக்கிலிருந்து ஆற்றொழுக்கைப் போலக் கவிதாப் பிரவாகம் பெருகிக் கொண்டிருப்ப அதனைக் காதினாற் கேட்டும் கையினா லெழுதியும் மனத்தினாலறிந்தும் இன்புற்ற எனது நிலை இங்கே எழுதற்கரியது.

வண்டியிற் செல்லும்பொழுது உண்டான அசைவால் ஏடுகளில் நான் எழுதிய பாடல்கள் வரி கோணியும் எழுத்துக்கள் நிலைகுலைந்தும் இருத்தலை அந்தச் சுவடியில் இன்றும் காணலாம்.

## திருவாவடுதுறையிற் பாடம் ஆரம்பித்தது

திருவாவடுதுறையின் தெற்கு வீதி சென்றவுடன் இவர் தம்முடைய விடுதிக்குச் சென்று அநுஷ்டானம் செய்து கொண்டார். பின்பு ஞானாசிரியரைத் தரிசித்தற்காக மடத்திற்குச் சென்றபொழுது இவருடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டே இருந்த குமாரசாமித் தம்பிரான் முதலியோர் முகமலர்ச்சியோடு வரவேற்று அழைத்துச் சென்றார்கள். இவர் தேசிகரை வழக்கம்போலவே தரிசித்து அவருடைய கட்டளையின்படி அருகி லிருந்தார். இவருடைய நல்வரவைக் குறித்துத் தேசிகர் பாராட்டியதன்றி, "படிப்பதற்குத் தம்பிரான்களும் பிறரும் மிக்க ஆவலோடிருக்கிறார்கள்; நாளைக் காலையிலேயே பாடம் தொடங்கிவிடலாம். பாடங்களை இரண்டு வகை

யாகப் பிரித்துக்கொள்ள வேணடும். குமாரசாமித் தம்பிரான் நல்ல பயிற்சியுள்ளவ ராதலால் அவருக்கு ஒரு பாடமும் மற்ற வர்களுக்கு ஒரு பாடமும் வைத்துக்கொண்டால் தங்களுக்கு அதிகத் தொல்லை இராது. ஒன்றைக் காலையிலும் மற்றென் றைப் பிற்பகலிலும் வைத்துக்கொள்ளலாம்" என்று சொன்னார்.

மறுநாட் காலையில் இவர் மடத்திற்குச் சென்றார். தம்பி ரான்களும் பிறரும் அங்கே வந்து காத்திருந்தார்கள். 'என்ன பாடம் இப்போது ஆரம்பிக்கவேண்டும்?' என்று யோசித்த பொழுது சுப்பிரமணிய தேசிகர், "குமாரசாமித் தம்பிரானுக் குத் திருவானைக்காப் புராணமும் ஏனையோர்க்குச் சீகாளத்திப் புராணமும் தொடங்கலாம்" என்று சொன்னார். இவ்வாறு அவர்கள் கூறுவதைக் கேட்ட நான், "நம்மை ஒருவரும் கவனிக்கவில்லையே!" என்றெண்ணிச் சற்று முகவாட்டத்தோடு இருந்தேன். இப்புலவர்பிரான் என்னை நோக்கினார். பார்த்த குறிப்பை அறிந்த தேசிகர், "இவரை எந்த வகையிற் சேர்க்க லாம்?" என்றபோது இவர் மீண்டும் என்னைப் பார்த்தார். ஆவல் மிகுதியால். "நான் இரண்டு பாடங்களையும் கேட்க விரும்புகிறேன்" என்று சொன்னேன். "புத்தகங்கள் உள்ளனவா?" என்று தேசிகர் என்னை விசாரித்தார். இல்லை யென்றேன். உடனே மடத்துப் புத்தகசாலையிலிருந்த திருவானைக்காப் புராணத்தையும், சீகாளத்திப் புராணத்தையும் வருவித்து எனக்கு அளித்தார். "இந்த இரண்டு பாடமும் நடக்கும்பொழுது செய்யுட்களை நீரே படித்து வாரும்" என்று தேசிகர் கூறினமையால் நான் அவ்வாறே படித்து வரலானேன்.

முதலில் திருவானைக்காப் புராணத்தில் விநாயகர் துதி படிக்கப்பட்டது. அதற்குப் பொருள் சொல்லி முடித்தவுடன் மற்ற வகையாருக்குச் சீகாளத்திப் புராணப்பாடம் ஆரம்பிக்கப் பட்டது. அதில் விநாயகர் துதி முடிந்தவுடன் இவரைப் பார்த்து, "நாள்தோறும் பிற்பகலிற் சீகாளத்திப் புராணப் பாடத்தை வைத்துக்கொள்ளுங்கள். முற்பகலில் திருவானைக் காப் புராணம் நம்முன்னே நடக்கட்டும்" என்று தேசிகர்

சொல்லவே இவர் அங்ஙனமே செய்வதாகச் சொல்லிவிட்டுச் சென்றார்.

## நான் படித்த முறை

படிக்கும்பொழுது ஒவ்வொரு பாடலையும் முதலில் ஒரு முறையும், பொருள் சொல்லும்பொழுது சிறுசிறு பாகமாக ஒரு முறையும், பின்பு ஒருமுறையும் நான் படிப்பது வழக்கம். பாடம் கேட்குங் காலங்களி லெல்லாம் இவ்விதமே நடைபெறும். திருவானைக்காப்புராணம் மிகவும் கடினமான நூலாதலால் இவர் எவ்வளவு தெளிவாகச் சொல்லியும் முதலில் நாளொன்றுக்கு ஐம்பது பாடல்களுக்குமேல் நடைபெறவில்லை.

## உடையவர் பூஜை பெற்றது

இப்படி நடைபெறுகையில் ஒரு வாரத்திற்கெல்லாம் மகா சிவராத்திரி புண்ணிய காலம் வந்தது. அன்றைத்தினம் பன்னிரண்டு மணி வரையிற் காலைப் பாடம் நடைபெற்றது. எல்லோரும் உபவாசமிருக்கும் தினமாதலால் பிற்பகலில் பாடம் நடைபெறவில்லை. அன்று உடையவர் பூஜை இவருக்குத் தேசிகரால் எழுந்தருளுவிக்கப்பட்டது.

## ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகள் வந்தது

சில தினங்களுக்குப் பின்பு ஒருநாட் காலையில், கோடக நல்லூர் ஸ்ரீ சுந்தரஸ்வாமிகள் திருவையாறு முதலிய தலங்கள் ஏழனுக்கும் திருமழபாடிக்கும் திருப்பணி செய்வித்து ஒரே தினத்தில் அந்த எட்டினுக்கும் கும்பாபிஷேகம் செய்விக்க நினைத்து அந்தச் செலவிற்காகப் பலரிடத்தும் சென்று பொருள் சேகரித்துக்கொண்டு அதன்பொருட்டே திருவாவடுதுறைக்கும் வந்து ஓரிடத்தில் தங்கினார். மகாவைத்தியநாதையர் முதலிய பல சாம்பவர்களும் திருநெல்வேலி ஐயாசாமி பிள்ளை முதலிய வேறு பல அடியார்களும் செறிந்த கூட்டம் அவருடன் வந்திருந்தது. அவருடைய வரவைக் கேட்ட இக் கவிஞர் கோமான் அவரைத் தரிசிக்க விரும்பி வந்தார்

இவரைக் கண்டவுடன் ஸ்வாமிகள் எழுந்து நிற்க இவர் வந்தனம் செய்தார் அப்பொழுது ஸ்வாமிகள் "நீங்கள் சிவபக்த சிரோமணிகள். உங்கள் வந்தனத்துக்கு நான் உரியவனல்லேன். ஆதலின் அதனை ஈசுவரனுக்கு அர்ப்பணம் செய்துவிட்டேன்" என்று சொல்லிக் கையைப் பிடித்துத் தூக்கிவிட்டு அயலில் இருக்கச் செய்தார்; அப்பால் இருவரும் இருந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

அங்ஙன மிருக்கையில், ஸ்வாமிகள் எப்பொழுது பார்க்க வரலாமென்று சமயந் தெரிந்து வரும்படி ஆதீனகர்த்தரிடம் ஓரன்பரை அனுப்பினர்; அது தெரிந்த தேசிகர் உடனே அழைத்து வரும்படி தக்கவர் சிலரை அனுப்பினர். ஸ்வாமிகள் மடத்திற்குச் சென்றார்; முன்னே சென்று மகா வைத்திய நாதையர் ஸ்வாமிகளின் 'வரவைக் கூறவே, தேசிகர் எழுந்து வந்து வரவேற்று அழைத்துச் சென்று ஸ்வாமிகளுடன் இருக்க, மற்றவர்களும் இருந்தார்கள். கும்பாபிஷேக விஷயமாகப் பேச்சு நடைபெற்றது. வந்த காரியத்தை ஒருவாறு முடிததுக்கொண்டு சுந்தரஸ்வாமிகளும் மற்றவர்களும் விடைபெற்றுத் திருவையாறு சென்றார்கள்.

### குமாரருக்கு விவாகம் நடைபெற்றது

இவர் திருவாவடுதுறையில் இவ்வாறு இருந்து வருங் காலத்தில் இவருடைய குமாரர் சிதம்பரம் பிள்ளைக்கு விவாகம் செய்விக்க வேண்டுமென்ற முயற்சி நடந்தது. சீகாழியிலிருந்தவரும் சிறந்த கல்விமானுமாகிய † குருசாமிபிள்ளை யென்பவருடைய குமாரி மீனாட்சியம்மையை அவருக்கு மணஞ் செய்விக்க இவர் நிச்சயித்தார். அதனை ஆதீனகர்த்தரிடம் விண்ணப்பம் செய்தார். சுப்பிரமணிய தேசிகர் இச்செய்தியைச் சொல்லிக் குருசாமி பிள்ளையை அழைத்து வரும்படி சில முதியோரை அனுப்பினர். அவர்கள் சென்று சொல்ல, மனமுவந்து குருசாமி பிள்ளை வந்து இவரைக் கண்டபொழுது இருவரும் சம்பந்தம் செய்துகொள்ளுதலைக் குறித்து நெடுநேரம் சம்பாஷணைசெய்து களிப்புற்றார்கள். பின்பு அவர் தரிசனஞ் செய்யப் போனபொழுது தேசிகர் பலவாற்றாலும் அவருக்கு

மகிழ்வுண்டாகும்படி செய்ததன்றி அவரை நோக்கி, "ஐயா, நீங்களும் குருசாமி; நாமும் குருசாமியே" என்று சொன்னார்; சிறந்த கல்விமானாதலால் அந்த அருமையான வார்த்தை அவருக்கு மகிழ்ச்சியை உண்டுபண்ணியது. முகூர்த்தம் வைத்துவிட்டு அவர் சீகாழி சென்றார். கலியாணம் விமரிசையாக ஆங்கீரஸ ஹூ ஆனி மீ 7-ஆம் தேதி (19-6-1872) புதன் கிழமை மாயூரத்தில் நடைபெற்றது.

## சமாசாரப் பத்திரிகையில் வந்த செய்தி

கலியாணத்திற்குப் பின்பு சில தினம் இவர் மாயூரத்தில் இருந்தார். அக்காலத்தில் ஒருநாள் இவர் வேதநாயகம் பிள்ளையைப் பார்க்கச் சென்றார்; நானும் உடன் சென்றேன். அவர் ஏதோ ஒரு சமாசாரப் பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்தார். இவரைக் கண்டவுடன் அவர், "இப்பத்திரிகையில் இப்போது படித்துக்கொண்டிருப்பது உங்கள் விஷயந்தான். இக்காலத்தில் தமிழ் நாட்டிற்கு இரண்டு கண்களாக விளங்குகிறவர் இருவர். அவருள் ஒருவர் வசனம் எழுதுவதில் ஆற்றலுடையவர்; மற்றொருவர் செய்யுளியற்றுவதில் ஆற்றலுடையவர். வசனம் எழுதுபவர் ஆறுமுக நாவலர்; செய்யுள் செய்பவர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை. நாவலர் சிதம்பரத்தில் பாடசாலை வைத்துத் தமிழைப் பரிபாலித்து வருகிறார்; மற்றொருவர் தாமே நடையாடு புத்தகசாலையாக இருந்து தம்முடைய செலவிலேயே பிள்ளைகளைப் படிப்பித்து வருகிறார்; என்பது இதிலுள்ள விஷயம்" என்றார். கேட்ட நான் ஆனந்தமடைந்தேன்.

## தமிழே நோய்க்கு மருந்து

அப்போது தஞ்சைவாணன் கோவையைப் பாடம் கேட்டு வந்தேன். ஒரு நாள் 10-மணிக்குமேலே இவர் பூஜை செய்வதற்குச் சென்றார். பூஜை செய்துகொண்டிருக்கையிற் கடுமையான காய்ச்சல் வந்துவிட்டமையால் விரைவில் அதனை முடித்துக்கொண்டு வந்து சாய்வு நாற்காலியிற் சாய்ந்துகொண்டார்; என்னைப் பார்த்து, "கையிலுள்ளது என்ன புத்தகம்?"

என்ருர் ; "தஞ்சைவாணன் கோவை" என்றேன். படிக்கும்படி சொன்ஞர் ; படித்துக்கொண்டு வந்தேன். மிகுந்த அயர்ச்சியோடு இருக்கிருரென்று நான் நினைந்து நிறுத்திஞல் இவர் கண்ணைத் திறந்து பார்த்துப் படிக்கச்சொல்வார்.

இவர் இப்படி யிருக்கும்போது பிற்பகலில் ஐந்து மணி ஆயிற்று. இவரைப் பார்க்க வந்த அன்பர்களிற் சிலர் என்னைக் கோபத்தோடு நோக்கி, இப்போது கூடவா பாடங் கேட்டு இவர்களுக்குத் துன்பத்தை உண்டுபண்ண வேண்டும் ? நிறுத்திக்கொள்ளக்கூடாதா ? பாடம் எங்கே ஓடிப்போகிறது ? இதனை நீர் தெரிந்துகொள்ளவில்லையே !" என்று கடுமையாகச் சொன்ஞர்கள். கேட்ட இவர், "நிறுத்தச் சொல்ல வேண்டாம் ; அதுதான் இப்பொழுது எனக்கு மருந்தாக இருக்கிறது ; சுரநோயின் துன்பத்தை மறந்து என் மனம் அந் நூலிலேயே ஈடுபட்டுவிட்டது" என்று சொல்லி அந்த நூலாசிரியருடைய பெருமையையும் வாக்கு விசேடத்தையும் அவர் முருகக்கடவுள் அருள் பெற்றவரென்பதையும் எடுத்துக் கூறிஞர். தமிழ்ச் செய்யுளில் இவருக்கு இருந்த ஈடுபாடும் அதனை இவர் நோய்க்கு மருந்தாக எண்ணிய இயல்பும் என் மனத்தை உருக்கின.

பின்பு ஒருநாள் இவர் "திருவாவடுதுறைக்குப் போய் மற்றவர்களுடன பழைய பாடங்களைப் படித்துக்கொண்டிரும்; சீக்கிரத்தில் நான் வந்துவிடுவேன்" என்று சொல்லி என்னை அனுப்பிவிட்டார். அப்படியே நான் திருவாவடுதுறை சென்று படித்து வந்தேன்.

### திருப்பெருந்துறைப் புராணம் இயற்றும்படி சுப்பிரமணியத் தம்பிரானவர்கள் விரும்பியது

சில தினங்கள் சென்ற பின்பு ஒருநாள் சுப்பிரமணிய தேசிகர் என்னை வருவித்து, "நாளைக் காலையில் நீர் மாயூரம் போய்வரவேண்டும். திருப்பெருந்துறைக்குப் புராணம் இயற்ற வேண்டியதைப் பற்றி அத்தலத்துக் கட்டளைச் சுப்பிரமணியத் தம்பிரான் ஒரு விண்ணப்பம் அனுப்பியிருக்கிருர். அதில் அவர், 'திருப்பெருந்துறைப் புராணத்தைச் செய்யுள் நடையாக

நாட்டு வருணனை நகரவருணனை முதலிய காப்பிய உறுப்புக் களைச் சிறப்பாக அமைத்துப் புராணம் செய்யவேண்டுமென்று பிள்ளையவாகளுக்குக் கட்டளையிடும்படி பிரார்த்திக்கிறேன். அப் புராணத்தை அங்ஙனம் பாடிப் பூர்த்திசெய்து அரங்கேற்றி முடித்தால் அவர்களுக்குத் தக்க சௌகரியம் செய்விக்கலாம். அங்ஙனம் இயற்றுவிக்கும்படி இங்கே உள்ள அன்பர்கள் பலர் தூண்டுகிறார்கள். இத்தலத்தின் வடமொழிப் புராணத்தி லிருந்து மொழி பெயர்த்த தமிழ் வசன நடைப் பிரதியையும் இத்தலத்திற்கு முன்னமே செய்யப்பட்டிருந்த பழைய தமிழ்ப் புராணங்க ளிரண்டையும் அனுப்பியிருக்கிறேன். இவற்றைத் தழுவிப் புராணம் செய்துவிட்டால் இந்த வருஷத்து மார்கழித் திருவிழாவில் அப்புராணத்தை அரங்கேற்றத் தொடங்கலாம். இங்கே அவர்கள் இருக்கும் வரையில் அவர்களுடைய செலவை அடியேனே ஒப்புக் கொள்ளுகிறேன். புராணம் அரங்கேற்றப் பட்டவுடன் ரூ. 2000 அடியேனுடைய சம்பளத்திலிருந்து அவர்களுக்குச் சேர்ப்பிக்கிறேன். புராணம் செய்வதற்குத் தொடங்கும்படி சந்நிதானம் கட்டளையிடவேண்டும்' என்று வரைந்திருந்தார். இந்த விவரங்களைப் பிள்ளையவர்களிடம் சொல்லி இப்புத்தகங்களையும் கொடுத்து உடன்படச் செய்து அவர்களுடைய உடன்பாட்டை நமக்கு விரைவில் வந்து சொல்லவேண்டும்" என்று சொல்லி அப்புத்தகங்களையும் கொடுத்து என்னை அனுப்பினர்.

### ஒரு செய்யுளின் ஈற்றடி

நான் மறுநாட் காலையில் மாயூரம் போய்ப் பிள்ளையவர் களைக் கண்டு அச்செய்திகளைத் தெரிவித்துப் புத்தகங்களையும் சேர்ப்பித்தேன். அப்பொழுது இவர் மகிழ்ச்சியடைந்து புராணத்தை இயற்ற ஒப்புக்கொண்டு திருப்பெருந்துறையின் தலவிநாயகராகிய வெயிலுவந்த பிள்ளையாரைத் தியா னித்து, "நிலவுவந்த முடியினெடு வெயிலுவந்த மழகளிற்றை நினைந்து வாழ்வாம்" என்ற அடியைச் சொன்னார். அதனை உடனிருந்த கும்பகோணம் பேட்டைத் தெருத் தமிழ் வித்துவா னாகிய ஸ்ரீ வைத்தியநாத தேசிகரென்பவர் கேட்டு வியப் புற்றார்.

## திருவாவடுதுறை சென்றது

அப்பால் இக்கவிஞர் சிகாமணி மூன்ருவது தினத்தின் காலையில் திருவாவடுதுறைக்குப் புறப்பட்டார். நானும் உடன் சென்றேன். மாயூரத்திலிருந்து வேறு ஒரு கனவானும் வந்தார். நான் முன்னமே கேட்ட திருவேங்கட மாலையைப் படித்துச் சிந்தனை செய்வதற்குக் கையில் வைத்திருந்தேன். "இப்புத்தகம் என்ன?" என்று இவர் கேட்க, "திருவேங்கடமாலை" என்றேன்; இவர் கட்டளைப்படியே நான் அதனைப் படித்துக் கொண்டே வருகையில் சிலேடையின் வேறுபாடுகளும், அதுவரையில் அறிந்துகொள்ளாத பொருள் விசேடங்களும் எனக்கு அன்றைத்தினம் இவரால் தெரியவந்தன. திருவாவடுதுறை போவதற்குள் அது முடிந்தது. அங்கே போய்ச் சேர்ந்த பிறகு, முன்போலவே பாடங்கள் இருவகையாக நடைபெற்று வந்தன.

## திருப்பெருந்துறைப் புராணம் பாடத் தொடங்கியது

இப்படி இருக்கையில் ஒரு தினத்தில் சுப்பிரமணிய தேசிகருடைய கட்டளைப்படி நல்லவேளையில் இவர் திருப்பெருந்துறைப் புராணத்தை இயற்றத் தொடங்கினர். தொடங்கியவுடன் எழுத்தாணி கையில் இல்லாமையை யறிந்து மடத்துக் காரியஸ்த ரொருவரை யழைத்து ஓர் எழுத்தாணியையும் ஏடுகளையும் கொணர்ந்து என்னிடம் கொடுக்கும்படி சொன்னர். அவர் அப்படியே செய்தனர். யோசித்து வைத்திருந்த ஒரு விநாயகர் காப்புச் செய்யுளை வழக்கப்படியே பொதுவாக முதலிற் சொல்லி எழுதுவித்தார்.

அப்பால் தல விநாயகராகிய வெயிலுவந்த விநாயகரது துதியைப் பாடுவதற்கு இவர் யோசிப்பதை அறிந்து, "முன்னமே நான் மாயூரத்திற்கு வந்து மொழிபெயர்ப்புப் புத்தகம் முதலியவற்றைக் கொடுத்தவுடன், 'நிலவுவந்த முடியினெடு வெயிலுவந்த மழகளிற்றை நினைந்து வாழ்வாம்' என்று ஐயா அவர்கள் சொன்ன ஓரடி எனக்கு ஞாபகத்தி லிருக்கின்றது" என்று குறிப்பித்தேன்; "அப்படியா? அது நன்ருகவிருக்கிறது" என்று சற்று நேரம் யோசித்து, முதல் மூன்றடியையும்

சிறந்த கற்பனையுடன் முடித்து ஈற்றடியை இறுதியிலே சேர்த்து எழுதும்படி சொல்லி மேலே பாடல்களைச் சொல்லி எழுதுவித்துக்கொண்டு போனார்.

### சிறவாதவற்றையும் சிறப்பிக்க வல்லவன்

திருப்பெருந்துறைப் புராணத்தில் நாட்டுப்படலம் பூர்த்தியாயிற்று. நடந்த பாகங்களைச் சுப்பிரமணிய தேசிகரிடம் படித்துக் காட்ட இவர் விரும்பினர். தியாகராச செட்டியாரும் உடனிருந்தால் மிகவும் நலமாயிருச்குமென்று நினைந்து ஒரு நாள் அவருக்கு என்னைக்கொண்டு ஒரு கடிதம் எழுதுவித்தனர்: "வருகிற சனிக்கிழமையின் பிற்பகலில் திருப்பெருந்துறைப் புராணத்தில் நடந்த பாகத்தை ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானத்தின் திருச்செவி சார்த்த எண்ணியிருக்கிறேன். அக்காலத்தில் நீயும் உடனிருந்தால் திருப்தியாக இருக்கும். ஆதலால் சனிக்கிழமை சூரியோதய காலத்தில் கோட்டுமாங் குளக் கரையில் நான் பார்க்கும்படி நீ வந்துவிடவேண்டும். சிறவாதவற்றையும் சிறப்பிக்க வல்லவன் நீ யல்லவா?" என்பது அக்கடிதத்திற் கண்ட விஷயம். சனிக்கிழமை காலையில் எப்படியும் அவர் வரக்கூடுமென்று நினைந்து காலையில் அனுஷ்டானத்தை முடித்துக்கொண்டு கோட்டுமாங்குளத்து வடகரையின் கீழைக்கோடியில் அவருடைய வரவைப் பார்த்துக்கொண்டே இவர் நின்றார்.

கடிதத்தைக் கண்ட செட்டியார் வெள்ளிக்கிழமை இரவே கும்பகோணத்திலிருந்து வண்டியில் ஏறிச் சூரியோதய காலத்திற் கோட்டுமாங் குளத்தின் வடகரையின் மேலைக்கோடியில் வருகையில் இவர் கிழக்கே நிற்பதைக் கண்டு வண்டியைவிட்டு இறங்கி ஆவலோடு விரைந்து வருவாராயினர். அங்ஙனம் வந்த செட்டியார் இவருக்கு அஞ்சலி செய்துவிட்டு உடனே கோபக்குறிப்புடன் என்னிடம் வந்து, "ஐயா எழுதச் சொன்னாலும் நீர் எழுதலாமா? சிறவாதவற்றையும் சிறப்பிக்க வல்லவன் நானா? ஐயா அவர்கள் அவசரமாகச் சொன்னாலும் யோசித்தல்லவோ நீர் எழுதவேண்டும்?" என்று மேலும் கண்டிப்பாராயினர். இக்கவியரசர் அவரைப் பார்த்து, "ஏனப்பா அவரைக் கண்டிக்கிறாய்? நானே அப்படி எழுதச் சொன்

னேன். நீ இடமறிந்து மகிழ்வதை நேரே பலமுறை பார்த்திருக்கிறேன். நீ இருந்தால் சந்நிதானத்திற்கும் திருப்தியாயிருக்குமன்றே?'' என்று சொன்னர்.

பிற்பகலில் சுப்பிரமணிய தேசிகருடைய முன்னிலேயில் புராணம் படித்துக் காட்டப்பட்டது. கடவுள் வாழ்த்திற் சிலசில பாடல்களிற் புராணத்தி லுள்ள சரித்திரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றைப் பற்றிச் சொல்லும்பொழுது இவர், *"நூனுதல் பொருளேத் தன்னகத் தடக்கி, என்னும் பாயிர இலக்கணம் அமைய இவ்வாறு பாடப்பெற்றது. இங்ஙனமே காஞ்சிப் புராணம் முதலியவற்றின் கடவுள் வாழ்த்துக்களிற் காணப்படும். அவற்றைப் பின்பற்றித்தான் அடியேன் இங்ஙனம் செய்தேன்" என்ருர்.

உடனிருந்த தியாகராச செட்டியார் முதலியவர்களும் வடமொழி வித்துவான்களும் பிறரும் கேட்டு மகிழ்ச்சி யடைந்தார்கள். தேசிகர் மிகவும் பாராட்டியதுடன், "இந்நூலே விரைவில் முடித்தால் அரங்கேற்றுதற்குரிய ஏற்பாடு செய்யப்படும்" என்றும் கூறினர். அங்ஙனமே இவர் ஓய்வுநேரங்களிற் புராணச் செய்யுட்களே இயற்றி எழுதுவித்து வந்தார். செட்டியார் விடைபெற்றுத் திங்கட்கிழமை காலேயிற் புறப்பட்டுக் கும்பகோணம் சென்ருர்.

### பார்க்க வருபவர்கள்

பல செல்வர்களும் வித்துவான்கள் பலரும் சுப்பிரமணிய தேசிகரைத் தரிசித்துச் சிலதினங்கள் இருந்து அளவளாவுதற் பொருட்டுத் திருவாவடுதுறைக்கு வருவார்கள். சிலருடைய விருப்பத்தின்படி அவர்கள் செய்தனவாகப் பிறர்க்குத் தோற்றும் வண்ணம் புதிய செய்யுட்களேச் செய்து கொடுத்தும், சிலர் ஏதேனும் புதிய நூலொன்றைச் செய்து கொணர்ந்தால் அதைத் திருத்திக் கொடுத்துச் சிறப்புப்பாயிர மளித்தும், தாம் படித்த நூல்களில் உண்டான ஐயங்களே யாரேனும்

---

* அது முதற்கொண்டுதான் நூல் நுதல் பொருள் கடவுள் வாழ்த்தில் அமைந்திருத்தலேக் கவனித்து நாங்கள் ஆராய்ச்சி செய்யத் தொடங்கினேம்.

வந்து வினாவினால் அவற்றைத் தீர்த்தும், இன்னும் அவர்களுக்கு ஆகவேண்டியவற்றைக் கவனித்தும் அனுப்புவது இவருக்கு அப்போது வழக்கமாக இருந்தது. பின்னும் நகரப் பள்ளிக்கூடங்களிலும் காலேஜ்களிலு முள்ள தமிழ்ப் பண்டிதர்கள் தாங்கள் சொல்லவேண்டிய பாடங்களிற் கடினமானவற்றிற்குப் பொருள் தெரிந்துகொண்டு போவதற்கு விடுமுறை நாட்களில் வந்து வந்து கேட்டுவிட்டுத் திருப்தியுற்றுச் செல்வார்கள். அப்படியே கிராமப் பள்ளிக்கூடங்களி லுள்ள உபாத்தியாயர்களும் வந்து தமக்கு வேண்டிய நூல்களுக்கும் பொருள் கேட்டுத் தெரிந்துகொண்டு போவார்கள். பிள்ளையவர்களுக்கு ஒய்வில்லை யென்று தெரிந்தால் சுப்பிரமணிய தேசிகர் படிக்கவேண்டியவர்களைத் தம்மிடம் வரச்செய்து தாமே பாடம் சொல்லித் தெளிவித்து அவர்களை அனுப்புவார்.

தம்மூர்களிற் பாடம் சொல்லுவோர் இல்லாமையாலும் திரவிய சௌகரியம் இல்லாமையாலும் இவர் பாடஞ்சொல்லுதலைக் கேள்வியுற்று அடிக்கடி வந்து படிக்க வருவோர் சிலர். சில மாதங்கள் இருந்து வேண்டியவற்றைக் கேட்டுக்கொண்டு விடை பெற்றுப் போவோர் சிலர்.

## பெரியபுராணப் பாடம்

ஆங்கிரச வருஷம் கார்த்திகை மாதத்திற் பெரியபுராணப் பாடம் ஆரம்பிக்கப்பட்டது. தியாகராச செட்டியாரும் வந்து கேட்டு இன்புற்றனர். இயல்பாகவே மகா வைத்தியநாதையரும் அவர் தமையனார் இராமசாமி ஐயரும் மடத்திற்கு வந்திருந்தமையால் அவர்களும் சிலதினம் உடனிருந்து கேட்டு வருவாராயினர்.

## பெரிய புராணப் பாடத்தை நிறுத்தியது

பெரிய புராணத்திற் கண்ணப்ப நாயனார் புராணத்தைப் பாடம் கேட்டுவருகையிற் சில தினத்திற்குப் பின்பு எனக்கு முதலிற் கடுமையான ஜ்வரம் கண்டது. பின்பு பெரியம்மை (பனையேறி யம்மை) பூட்டிவிட்டமையால் தைமாத முதலில் என் அம்மானுடைய ஊராகிய சூரிய மூலைக்கு நான் செல்லும்படி ஏற்பட்டது. நான் சென்றதனால் மனவருத்தமுற்றிருந்த

பிள்ளையவர்களுடைய நோக்கத்தை அறிந்த ஆதீனகர்த்தர், "சாமிநாதையர் வந்தபின்பே பெரிய புராணத்தில் எஞ்சிய பாகத்தைப் படிக்கலாம்" என்றார். அதனால் அப்பாடம் சில காலம் வரையில் நடைபெறவில்லை.

## திருவாவடுதுறைக்கு நான் திரும்பி வந்தது

சூரியமூலைக்குச் சென்றிருந்த நான் மாசிமீ 17-ஆந்தேதி (26-2-1873) புதன்கிழமை மாலையில் என் தந்தையாரோடும் துறைசை சென்று மடத்திற் பல அறிஞர்களிடையே கலந்து அளவளாவிக் கொண்டு விளங்கிய இவரைக்கண்டேன். உடம்பின் அம்மை வடுக்கள் இவர் கண்ணுக்குப் புலப்படாதபடி அதிகமாக விபூதியைத் தூளனம் செய்துகொண்டிருந்தேன்; என்னைக் கண்டதும் அருகே யழைத்து இருக்கச்செய்து இவர், "அம்மை வடுக்கள் புலப்படாதபடி விபூதிக் கவசம் தரித்திருக்கிறீர் போலும்; அடையாளம் தெரியவில்லையே! உம்முடைய ஞாபகமாகவே இருந்தேன். நீர் இல்லாமையினால் பெரிய புராணப் பாடத்தை நிறுத்தி வைக்கும்படி ஸந்நிதானம் கட்டளையிட்டது. அதனால் அது நடைபெறவில்லை. இனிமேல்தான் நடைபெறவேண்டும்" என்றனர். பின்பு அங்கே வந்திருப்பவர்களுள் ஒவ்வொருவரையும் எனக்குப் பழக்கம் செய்வித்தார். நான் பலநாளாகக் கேள்வியுற்றிருந்த அவர்களை அன்று தெரிந்துகொண்டேன்.

அதன் பின்பு பெரிய புராணத்தில் எஞ்சிய பாகமும் நன்னூல் விருத்தியுரை முதலியனவும் முறையே எங்களாற் பாடங் கேட்கப்பட்டு வந்தன. மற்றொரு வகையாருக்கு நன்னூற் காண்டிகையுரை முதலியன இவராற் பாடம் சொல்லப்பட்டு வந்தன.

## சுப்பிரமணிய தேசிகர் விடுதி அமைத்துக் கொடுத்தது

பிள்ளையவர்களுக்கும் படிக்கிறவர்களுக்கும் வசதியான இடங்கள் இல்லையென்பதை அறிந்த சுப்பிரமணிய தேசிகர் திருவாவடுதுறைத் தெற்குவீதியின் தென்சிறகிற் புதியனவாக மூன்று வீடுகள் கட்டுவித்து அவற்றில் நடுவீட்டை இவருக்

காக அமைத்து இவர் வருத்தமில்லாதபடி சென்று வருவதற்காக முன்வாயிலின் நிலையை உயரமாக வைக்கும்படி கட்டளையிட்டார். அப்படியே அஃது அமைக்கப் பெற்றது. இப்போதும் அந்த வீடு பிள்ளையவர்கள் வீடென்றே வழங்கி வருகிறது.

## குற்றாலச் சிலேடை வெண்பா

பிறகு வன்றொண்டச் செட்டியார் வந்து சில தினங்கள் இருந்து ஓய்வுநேரங்களில் தமக்குள்ள சில ஐயங்களைத் தீர்த்துக்கொண்ட தன்றித் திருச்சிற்றம்பலக் கோவையாரை முறையே பாடங்கேட்டுக்கொண்டு வந்தனர்: குற்றாலச் சிலேடை வெண்பா, சிங்கைச் சிலேடை வெண்பா என்பவற்றின் கையெழுத்துப் பிரதிகளை அவர் கொணர்ந்திருந்தார். அவற்றை நன்றாக ஆராய்ந்து பதிப்பிக்க வேண்டுமென்னும் நோக்கம் அவருக்கு இருந்தது. அதனால் மடத்திலிருந்த பிரதிகளையும் வாங்கி வைத்துப் படிப்பித்து இக்கவிஞர் பிரான் முன்னிலையிற் பொருள் வரையறை செய்து கொண்டே வந்தார். இவருடைய மற்ற மாணவர்களும் பிறரும் உடனிருந்து கேட்டுக்கொண்டும் இவருடைய கருத்தின்படி தமக்குத் தோற்றியவற்றை அப்பொழுதப்பொழுது சொல்லிக்கொண்டும் இருந்தார்கள். குற்றாலச் சிலேடை வெண்பாவை வாசித்து வருகையில்,

"வாடிய மெய்த்தவரும் வாரி மணித்திரளும்
கோடி வரம்படைக்குங் குற்றாலம்"

என்னும் செய்யுளில் 'கோடி வரம்படைக்குங் குற்றாலம், என்ற அடிக்குக் கோடி வரங்களை அளிக்கும் குற்றாலமென்ற ஒரு பொருள் மட்டும் விளங்கிற்று; மற்றொன்று விளங்கவில்லை. அதைப்பற்றி யாவரும் யோசித்துக்கொண்டிருக்கையில் அங்கிருந்த மாணவர்களில் ஒருவர் திடீரென்று, "கோடு இவர் அம்பு அடைக்கும் என்று சொல்லலாமோ?" என்று அச்சத்தோடு அறிவித்தனர். இக்கவிநாயகரும் மற்றவர்களும் சந்தோஷித்து அவர் கூறியதை அங்கீகரித்தார்கள். வன்றொண்டச் செட்டியார் மட்டும் சிறிதும் வியவாமல், "மறுத்து" என்று சொல்லி மேலே படிக்குமாறு குறிப்பித்

தனர். அப்பால் சில பாட்டுக்கள் படிக்கப்பட்டன. தாம் சொன்ன பொருளைச் செட்டியார் சிறிதும் பாராட்டவில்லையே யென்ற வருத்தம் மேற்சொன்ன மாணவருக்கு இருந்தது. எழுந்து செல்லுகையில் அம்மாணவரை நோக்கி இவர், "செட்டியார் மதிக்கவில்லை யென்ற வருத்தம் உமக்கு இருப்ப தாகத் தெரிகிறது. உண்மைப் பொருளுக்கு எப்பொழுதும் மதிப்புண்டு. அவர் மதியாவிட்டால் அதற்கு இழிவொன்று மில்லை. பிறருடைய மதிப்பையும் அவமதிப்பையும் கவனிக்கக் கூடாது" என்று ஆறுதல் கூறினர். இக்கொள்கை பிறருக்குக் கூறப்படுவது மட்டுமன்று. பிறர் மதித்தாலும் மதியாவிட்டா லும் அதைக் கவனியாதவராகி உண்மைப் பொருளை வெளி யிடலையே இவர் தமது வாழ்வின் பயனைக் கொண்டிருந்தார்.

## திருக்குற்றாலப் புராணம் படித்தது

ஒருசமயம் திருக்குற்றாலப்புராண அச்சுப்பிரதி கிடைத் தது. அதனிடத்து நெடுங்காலமாக இருந்த பிரீதியால் இவர் அதனை உடனே படிப்பித்துக் கேட்டு முதலிலிருந்து பொருள் வரையறை பண்ணிக்கொண்டே சென்றார். அப்பொழுது மகா வைத்திய நாதையர், மேலகரம் * சண்பகக் குற்றாலக் கவிராயர் முதலியோர் உடனிருந்தார்கள். அப்படிக் கவனித்து வருகை யில் சண்டிகேசுவரர் துதியாகிய,

(விருத்தம்)

"தான்பிறந்த தந்தையையும் இனிப்பிறக்கும் நிந்தையையும்
தடிந்து சேயென்
ஞன்பிறங்கு மழவிடைமே லொருவரமைத் திடவிருவர்
அயிர்ப்ப வேகிக்
கான்பொலிதா ரரிபிரமா தியர்க்குமெய்தா இருக்கையெய்திக்
கடவுட் சேடம்
வான்புலவர் பெருப்பேறு பெற்றவனை நற்றவனை
வழுத்தல் செய்வாம்"

---

*இவர் திருவாவடுதுறை யாதீன கர்த்தராக விளங்கிய மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருக்குப் பூர்வாச்சிரமத்தில் தம்பியாவார்.

என்னும் செய்யுளில், 'சேயென்று ஒருவரழைத்திட இருவர் அயிர்ப்பவேக்' என்ற பகுதியில் இருவரென்பதற்குப் பொருள் விளங்காமையால் இவர் யோசித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது மகாவைத்தியநாதையர், "இருவரென்பதற்கு விநாயகர் சுப்பிரமணியரென்று சொல்லலாமோ?" என்று மெல்லச் சொன்னார். அப்பொருள் மிகவும் பொருத்தமுள்ளதாக இருந்தது; கேட்ட இக்கவிஞர்கோமான், "ஐயா, நிரம்ப நன்றாயிருக்கின்றது. உங்களுடைய ஈசுவர பக்தியே இவ்வாறு தோற்றச் செய்கிறது" என்று மனமுருகிக் கொண்டாடினர்.

## இரண்டு புறங்கூற்றாளர் பாடம் கேட்டது

இவர் இயற்றிய திருவிடைமருதூருலாவைப் பற்றிப் பொறாமையாற் பலவகையான புரளிகளை அங்கங்கேஉண்டாக்கி இவருக்கும் இவருடைய மாணாக்கர் முதலியவர்களுக்கும் மன வருத்தத்தை யுண்டுபண்ணி அதனாற் பலராலும் அவமதிப்பை அடைந்தவர்களில் முக்கியமானவர் இருவர். அவர்கள் எப்படியாவது தம் குறைவைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென் றெண்ணி அதற்கு உபாயம் இக்கவியரசருடைய அன்பைப் பெறுவதுதா னென்றும், அதனைப் பெறுதற்கு உபாயம் பாடம் கேட்பதாக இவர்பாற் செல்வதுதானென்றும் தம்முள் நிச்சயித்துக்கொண்டு ஒரு நாட் காலையிற் கையுறையுடன் இவர்பால் வந்தனர். சாந்தமூர்த்தியாகிய இவர் வந்தவர்களுடைய இயல்பை நன்றாக அறிந்திருந்தும் விசாரித்து அவர்களுடைய நோக்கத்தை யறிந்து சிறிதும் வருத்தத்தைப் புலப்படுத்தாமல் அங்கீகரித்து மற்ற மாணாக்கர்களோடு சேர்த்து அவர்களுக்குப் பாடஞ்சொல்லி வந்தார்; அப்போது மாணவர்களிற் சிலர் அவ்விருவரும் முன்பு செய்துள்ள தீங்குகளை எல்லாம் நினைந்து நினைந்து மனம் பொறாதவர்களாகி அவர்களைக் கண்டிப்பதற்குக் கங்கணம் கட்டிக்கொண்டு சமயத்தை எதிர்பார்த்திருந்தவர்களாதலால் இடையிடையே கேள்விகளைக் கேட்டு அவ்விருவரையும் விழிக்கச்செய்து அடிக்கடி வருத்துவாராயினர். இக்கவியரசர் சும்மா இருக்கும்படி குறிப்பித்தும் அவர்கள் கேட்கவில்லை.

அதனைக் கண்ட இவர் ஒருநாள் திடீரென்று தனியே சுப்பிரமணிய தேசிகரிடம் சென்று அதனை விண்ணப்பித்தனர். அவர் உடனே பழைய மாணாக்கர்களை மட்டும் அழைப்பித்து நன்றாக விசாரித்து, “ஒருவன் தமக்குப் பரம விரோதியாக இருந்தாலும் தம்பால் வருவானாயின் அவனை ஏற்றுக்கொண்டு முன்னிலும் நன்கு மதித்துப் பாராட்டவேண்டு மென்பது பெரியோருடைய கொள்கை. அதனை அறியாமல் நீங்கள் வழுவி ஒழுகுவீர்களாயின் உங்களை மட்டு மன்றி உங்கள் ஆசிரியரையும் உலகம் அவமதிக்கும்; நீங்கள் படித்துக் கொண்டிருக்கும் மடத்திற்கும் அகௌரவம் உண்டாகும்; ‘இணரெரி தோய்வன்ன வின்னா செயினும், புணரின் வெகுளாமை நன்று’ என்னும் திருக்குறளை யறியீர்களோ? அதற்குச் சங்கர நமச்சிவாய ரெழுதிய அருமையான உரையை நோக்குங்கள்” என்று பல நியாயங்களை எடுத்து மொழிந்தனர். அன்றியும் உடனே விருத்தியுரையில் உள்ள * அந்தப் பகுதியைப் படிப்பிக்கச் செய்து இடையிடையே வேண்டியவற்றையும் சொல்லி அறிவுறுத்தினார். மாணாக்கர்கள் அதனால் அமைதியுற்றுச் சென்று அவ்விருவரோடும் நட்புற்று மனங் கலந்து பழகுவாராயினர். அவ்விருவரும் பின்பு திருச்சிற்றம்பலக் கோவையார், கல்லாடம், திருநாகைக்காரோணப் புராணம் முதலிய சில நூல்களைப் பாடம் கேட்டுத் தங்கள் எண்ணத்தை முடித்துக்கொண்டு விடை பெற்றுச் சென்றார்கள்.

## வேலுச்சாமி பிள்ளை

பிள்ளையவர்களோடு கூடப் படித்த ஒரு சாலை மாணாக்கராகிய சென்னை அஷ்டாவதானம் சபாபதி முதலியார் தம்மிடம் படித்துக் கொண்டிருந்தவரும், தில்லைவிடங்கன் மாரிமுத்தா பிள்ளையின் பரம்பரையினரு மாகிய வேலுச்சாமி பிள்ளை யென்பவரை மேலும் நன்றாகப் படிப்பிக்க நினைந்து, தமக்கும் பிள்ளையவர்களுக்கும் உள்ள சிநேகபாவத்தைப் புலப்படுத்தி, ‘இவரைப் படிப்பித்து முன்னுக்குவரச் செய்ய வேண்டும்’ என்று ஒரு கடிதமெழுதிக் கொடுத்தனுப்பினர். அவர் வந்து இவரை வணங்கி அக் கடிதத்தைக் கொடுத்தனர். அதைப்

* நன்னூல் 300-ஆம் சூத்திரவுரை.

பார்த்துவிட்டு இவர் அவரை அங்கீகரித்து அப்படியே பாடம் சொன்னார். நாளடைவில் அவருடைய கல்வி மிகப் பெருகியது. இவரிடத்திற் படித்தமையாற் கவித்துவ சக்தியும் நன்றாக அவருக்கு உண்டாயிற்று. பெரும்பாலும் வெண்பாவே பாடுவார். பாடுவதிற் கஷ்டமென்று சொல்லப்படும் அந்தப் பாவை விரைவாகப் பாடுவதைத் தெரிந்து உடன் படிக்கும் மாணாக்கர்கள் 'வெண்பாப்புலி' என்று அவரை அழைப்பாராயினர். அதுவே பின்பு அவருக்குரிய பட்டப் பெயராக அமைந்து வழங்கலாயிற்று. அவர் பிற்காலத்திற் காஞ்சீபுரம் ஹைஸ்கூலில் தமிழ்ப் பண்டிதராக இருந்தனர்.

---

# 7. பட்டீச்சுர நிகழ்ச்சிகள்

## பட்டீச்சுரம் சென்றது

இங்ஙனம் திருவாவடுதுறையி லிருந்த காலத்தில் திருப்பெருந்துறைப் புராணத்தைப் பாடுதற்கு ஓய்வுநேர மில்லாமையால் அதனை அரங்கேற்றச் செல்லுதற்கு இவருக்கு இயலவில்லை. அப்பொழுதப்பொழுது இவருக்கு உண்டான செலவுகள் அதிகம். அவற்றால் கடன் அதிகரித்துக்கொண்டே வந்தது. வேறிடத்திற் சென்று வாங்கிக் கொடுப்பதற்கும் இயலவில்லை. மிகுதியான செலவுள்ளவராதலால் அடிக்கடி பலவிடங்களிற் கடன்கள் வாங்கிச் செலவழிப்பதும் ஏதேனும் நூல் அரங்கேற்றிய பின்பு கிடைக்கும் ஊதியத்தில் எஞ்சியதைக் கொண்டு அவற்றைத் தீர்ப்பதும இவருடைய வழக்கம்.

அதனால் இவர், "ரூபாய் ஐந்நூறு கொடுத்தால் திருப்பெருந்துறைப் புராணம் அரங்கேற்றியவுடன் முதலையும் வட்டியையும் சேர்ப்பித்துவிடுவேன்; அவசியமாக வேண்டியிருக்கின்றது'' என்று குமாரசாமித் தம்பிரான் முகமாக அப்பொழுது மடத்தின் காறுபாருக இருந்த ஒருவரிடம் தெரிவித்தார். பிள்ளையவர்களுடைய அருமையை அவர்

சிறிதும் அறியாமல், "எதை நம்பி இவருக்குப் பணம் கொடுக்கிறது?" என்று குமாரசாமித் தம்பிரானிடம் இரகசியமாகச் சொன்னதுடன், "இப்பொழுது கொடுப்பதற்குச் சௌகரியமில்லை என்று சொல்லிவிடுக" என்றும் சொல்லி யனுப்பிவிட்டார். அன்புடையவராதலால் குமாரசாமித் தம்பிரான் அதனை அப்படியே இவரிடம் வந்து சொன்னார். அதனைக் கேட்ட இவருடைய மனம் மிகப் புழுங்கிவிட்டது. அவ்வருத்தத்தை மனத்திலேயே வைத்துக்கொண்டு சிலகாலம் அங்கே யிருந்தார். பின்பு வேறிடம் சென்று சிலதின மிருந்து அவ்வருத்தத்தை ஆற்றிக்கொண்டு வரலாமென்று எண்ணிப் பட்டீச்சுரம் போய்வருவதாகச் சுப்பிரமணிய தேசிகரிடம் விண்ணப்பித்துக்கொண்டு புறப்பட்டார். மாணுக்கர்களெல்லாம் பிரிவாற்றுமல் வருந்தினர்கள் நான்மட்டும் உடன்சென்றேன். இன்ன காரணத்தால் இவர் பட்டீச்சுரத்துக்குப் புறப்பட்டாரென்பது தேசிகருக்குத் தெரியாது.

### திருப்பெருந்துறைப் புராணம் பாடிவந்தது

சென்றவர் ஐப்பசி மாதத்தின் இறுதிவரையில் பட்டீச்சுரத்திலேயே இருந்தார். அப்பொழுது தினந்தோறும் திருப்பெருந்துறைப் புராணத்தின் செய்யுட்கள் முறையே பாடப்பெற்று வந்தன. பழைய திருப்பெருந்துறைப் புராணங்களுள் ஒன்றில் படலந்தோறும் திருவாதவூரடிகள் தோத்திரம் ஒவ்வொன்று இருந்தது. அதனைக் கண்ட நான், நாட்டுப்படலஞ் செய்ய இவர் தொடங்குகையில் படலங்கள் தோறும் முதலில் திருவாதவூரடிகள் தோத்திரம் இருந்தால் நலமா யிருக்குமென்று தெரிவித்துக்கொண்டேன். அவ்வாறே இவர் பாடி அமைத்துவந்தார். முதன்முறை பாடல்களை எழுதிப் படித்துக் காட்டி ஏதேனும் திருத்தம் செய்யவேண்டி யிருந்தால் இவர் சொல்ல அங்ஙனம் செய்துவிட்டு ஆன பாகங்களைத் தினந்தோறும் வேறு பிரதியில் எழுதிக்கொண்டே வருவது அக்காலத்தில் எனக்கு வழக்கமாக இருந்தது. அதனால் பாடம் கேட்பதற்கு எனக்கு நேரமில்லை. அந்தப் புராணத்தை எழுதி அப்பொழுதப்பொழுது பொருள் கேட்டு வந்ததே என்னுடைய பயிற்சிக்கு அனுகூலமாக இருந்தது.

## பாலசுந்தர முதலியார்

ஒருநாள் முற்பகலில் கும்பகோணம் நாகேசுவர ஸ்வாமி கோயில் வடக்குவீதியில் ஒரு காரியமாக இவர் செல்லும் பொழுது இவர் மேலே வெயில் பட்டது. அப்போது பின்னே வந்த கனவான் ஒருவர் தாம் பிடித்திருந்த குடையை இவரறியாமல் இவருக்குப் பிடித்து வருவாராயினர். சற்று நேரத்தின் பின்பு அதனை இவர் அறிந்து திரும்பிப் பார்த்தார்; "என்ன தம்பி! இப்படியும் செய்யலாமா? இப்போது எங்கே இருக்கிறீர்கள்?" என்று கேட்கவே அவர், "திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் வேலையாக இருக்கிறேன். தங்களைத் தரிசித்த இன்றைத் தினத்தைப் புண்ணியதினமாகக் கொண்டாடுவேன். என் கை இன்றைக்குத்தான் நல்ல பயனை அடைந்தது" என்று சொல்லிச் சிலநேரம் பேசிக்கொண்டே வந்தார். அப்பால் அஞ்சலி செய்துவிட்டுத் தம் பரிவாரங்களுடன் விடை பெற்றுச் சென்றார். அவரை இன்னாரென்று தெரிந்துகொள்ள நாங்கள் விரும்பினோம். அதனை யறிந்த இக்கவிஞர்பிரான், "இவர் பாலசுந்தர முதலியாரென்பவர்; எஞ்சினியர் வேலை பார்த்து வருகிறார்; தமிழ்ப்பாஷையிற் பிரீதியும் நல்ல பயிற்சியும் உள்ளவர்; தர்மிஷ்டர்; ஏழைகள்பால் இரக்கமுடையவர்; கொள்ளிடத்துக்கு வடபால் பொன்னியாறு என்ற ஓர் ஆறு இவரால் புதிதாக வெட்டப்பட்டுள்ளது. இவருடைய பெருமையை நினைந்து பாலசுந்தரபுரமென்று ஓரூரை இவர் பெயரால் அமைத்துச் சிலர் அதில் வசித்து வருகிறார்கள்" என்றார்.

## இவருடைய கௌரவம்

இதுபோலவே தக்கவர்கள் சந்தித்த காலங்களில் இவருக்கு வலிந்து செய்த முகமன்கள் பலவற்றை நாங்கள் அவ்வப்பொழுது பார்த்திருக்கிறோம். பொருள் வருவாய் இல்லையென்ற குறைவு ஒன்றே யன்றி வேறு யாதொருவிதமான குறைவும் இவருக்கு இல்லை. தமிழ்க் கல்விமான்களுட் சக்கரவர்த்திபோலவே இவர் விளங்கினர். பெரிய செல்வவான்களும் பிரபுக்களும் வித்துவான்களும் தங்களைக் காட்டிலும் எவ்வகையிலும் உயர்ந்தவர்களுக்குச் செய்யும் மரியாதைகளை இவருக்குச்

செய்துவந்தார்கள். நினைத்தால் லட்சக்கணக்கான திரவியம் இவருக்கு எளிதிற் கிடைத்துவிடும். ஆனால் அதைப்பற்றி முயற்சி செய்ய இவர் அதிகமாக நினைத்தவரல்லர்.

“ வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில் ”

என்ற அருமைத் திருக்குறளுக்கு இலக்கியமாக இவர் எல்லாச் செல்வர்களுக்கும் மேலாகவே இருந்து விளங்கினர்; தமிழ் மொழியிற் பிரியமும் மதிப்பும் அன்பும் உள்ளவர்களோடு மட்டுமே பழகுவார். பெரிய சபையிற் செல்வாராயின் அங்கே உள்ள எல்லோரும் எழுந்து நிற்பார்கள். சிலர் முன்னே வந்து அழைத்துச் செல்வார்கள். அவர்கள் முதல் ஸ்தானத்தைக் கொடுப்பதன்றி முதல் மரியாதையையும் இவருக்கே செய்வார்கள்.

நெருங்கிப் பழகுகிறவர்களுக்கு மட்டும் இவர் செல்வமில்லாதவரென்று தெரியுமே யன்றி வேறு யாருக்கும் இவருடைய உண்மைநிலை தெரியாது. பழகாதவர்கள் இவருடைய இயல்பையும் தோற்றப் பொலிவையும் கண்டு இவரைப் பெருஞ் செல்வராகவே மதிப்பார்கள்,

வரன்முறையாகத் தமிழ்க்கல்வியின் பெருமையை அறிந்தவர்களும் அடக்கமுடையவர்களும் அக்காலத்தில் அதிகமாக இருந்தமையால் எந்த இடத்தும் யாவராலும் மதிக்கப்பெற்று இவர் விளங்கினர். படித்தவர்களும் ஏனையோர்களும் இவரைக் கண்டுவிட்டால் காணுதற்கரிய ஒரு தெய்வத்தைக் கண்டாற்போல எண்ணி வரவேற்று உபசரிப்பார்கள். அங்ஙனம் பிறர் நினைத்தற்குரிய ஓர் ஆச்சரிய சக்தி இவர்பால் அமைந்திருந்தது.

## ‘இன்னும் சில வருஷம் படிக்கட்டுமே’

குடும்ப நிலைமையைக் கருதி “எனக்கு ஏதாவது ஒரு வேலை செய்விக்கவேண்டும்” என்று ஒருநாள் சந்தித்த பொழுது தியாகராச செட்டியாரை நான் கேட்டுக்கொண்டிருந்தேன். அப்பால் ஒருசமயம் பட்டீச்சுரத்துக்கு அவர் வந்த

போது, "கும்பகோணத்தில் எனக்கு வேண்டிய அன்பர்களாகிய மூவர் நேடிவ் ஹைஸ்கூலென்று புதிதாக ஒரு கலாசாலையை ஏற்படுத்தப் போகிறார்கள்; அதில் தமிழ்ப்பண்டிதர் வேலைக்கு ஒரு தக்கவரைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்று என்னிடம் தெரிவித்தார்கள். பிரிய மிருந்தால் நீர் அதனை ஒப்புக்கொள்ளலாம். இப்பொழுது சம்பளம் 15 ரூபாய் கிடைக்கும்; செய்விக்கிறேன்" என்றார். அச் செய்தியை இவரிடம் தெரிவித்தேன். அருகில் நின்ற செட்டியாரைப் பார்த்து இப் பெருந்தகையார், "தியாகராசு, சாமிநாதையர் இன்னும் சில வருஷம் படிக்கட்டுமே; ஏன் அவசரப்படுகிறாய்? பின்னாலே கூடுமானால் இவரைக் கவனித்துக்கொள்" என்றார். அதனால் அம்முயற்சி நின்றது. பிற்காலத்தில் எனக்குத் தம் வேலையைச் செய்விக்க வேண்டுமென்ற எண்ணம் செட்டியாருக்கு உண்டானதற்குக் காரணம் இவர் சொல்லிய இந்த வார்த்தைதானென்றெண்ணுகிறேன்.

## திருச்சிராப்பள்ளி சென்றது

பட்டீச்சுரத்தில் இருந்து வருகையில், ஆறுமுகத்தாபிள்ளையின் குடும்பக் காரியமாக இவர் பரிவாரங்களுடன் ஒருநாள் திருச்சிராப்பள்ளிக்குப் புறப்பட்டார். நீடாமங்கலம் வரையில் சாலை வழியே வண்டியிற் சென்றார். நல்ல மரச்செறிவுள்ள சாலையைக் கண்டால் வண்டியிற் செல்லாமல் நடந்தே செல்லுவதும் பாடம் சொல்லுதல் நூலியற்றுதல் முதலியவற்றை அப்பொழுது மேற்கொள்ளுதலும் இவருக்கு இயல்பு. அப்பொழுது இவர் செய்யும் காரியம் எதுவும் நன்றாக நடைபெறும். அங்ஙனம் அச்சாலையிற் செல்லும்பொழுதுதான் திருப்பெருந்துறைப் புராணத் துள்ள பெருந்துறைப் படலத்தில் 31-ஆவதி லிருந்து 60-ஆவது வரையிலுள்ள பாடல்கள் இயற்றப்பட்டன. அவற்றை எழுதிக்கொண்டு நானும் உடன் சென்றேன்.

அப்பால் நீடாமங்கலத்தில் ரயில்வண்டியி லேறித் திரிசிரபுரம் சென்று கீழைச் சிந்தாமணியிலுள்ள சொர்க்கபுரமடத்தில் இவர் தங்கினார். அந்த நகரத்தில் பத்து நாட்கள் இருந்தார்.

இவர் அங்கே வந்திருப்பதைக் கேள்வியுற்ற பழைய மாணுக்கர்களும் முக்கியமான பிரபுக்களும் காலைமாலைகளில் வந்துவந்து அளவளாவி ஆனந்தித்துத் தாம் தாம் படித்து வந்த நூல்களில் தத்தமக் குள்ள ஐயங்களைத் தீர்த்துக்கொண்டு சென்றனர். பலர் திருப்பெருந்துறைப் புராணத் துள்ள பாடல்களைக் கேட்டு மகிழ்ந்தனர். காப்பிய இலக்கணங்களைச் சுவை ததும்ப அமைத்துப் பாடும் முறை இவர் புராணங்களில் மிகுதியாகக் காணப்படுமாதலால் இவர் இயல்பை அறிந்த பலர், 'நாட்டுச் சிறப்பைக் கேட்க விரும்புகிறோம்; நகரச் சிறப்பைக் கேட்க விரும்புகிறோம்' என்று தனித்தனியே தம் தம் ஆவலை வெளியிட்டு அங்ஙனமே அவ்வப் பகுதிகளைக் கேட்டு மகிழ்ந்தனர்.

சிலர் இடையிலே இவராற் செய்யப்பட்ட வேறு புராணங்களிலும் பிரபந்தங்களிலுமுள்ள பாடல்களைக் கேட்டு அவற்றில் அமைந்திருக்கும் கற்பனை நயங்களைப் பாராட்டினர். சிலர் தாம் இயற்றிய நூல்களைப் படித்துக் காட்டித் திருத்திக் கொண்டு சிறப்புப்பாயிரம் பெற்றனர். அக்காலங்களிற் சில பாடல்களுக்குப் பொருள் சொல்லிவிட்டு இவர் பதசாரம் சொல்லுதல் மிகவும் ஆச்சரியகரமாக இருந்தது.

### காலப்போக்கு

ஒவ்வொரு நாளும் ஏதேனும் அருகிலுள்ள ஒவ்வொரு கோயிலுக்குச் சென்று இவர் ஸ்வாமி தரிசனம் செய்துவிட்டு வருவார்; அச்சமயத்தில் அந்தத் தல சரித்திரம், அதன் சம்பந்தமான தேவாரம், நூல்கள், தனிப்பாடல், முதலியவை இன்னவை யென்று எங்களுக்கு எடுத்துரைப்பார்; அங்கே உள்ளவர்களைக் கொண்டும் எங்களுக்கு அவற்றைச் சொல்லச் செய்வார். இடையே சந்திப்பவர்களில், "நீங்கள் இவ்வூரை விட்டுப் போன பின்பு இதற்குள்ள சோபை போய்விட்டது" என்போர் சிலர்; "உங்களால் இந்த ஊர் மிக்க கீர்த்தியை நாளுக்கு நாள் அடைந்து வருகின்றது" எனப் பாராட்டுவோர் சிலர்; "உங்களுடைய அருமையான நூலை அடிக்கடி கேட்டு இன்புற இயலவில்லையே என்று வருந்துகின்றோம்"

என்பவர் சிலர்; "இனி இந்த ஊருக்கே வந்துவிடுங்கள்" என்பவர் சிலர். சிலர் தங்கள் தங்கள் வீடுகளுக்கு அழைத்துச் சென்று விருந்து செய்வித்து உபசரித்து அனுப்பினர்.

### தஞ்சாவூர் சென்றது

காரியத்தை முடித்துக்கொண்டு இவர் திருச்சிராப்பள்ளியிலிருந்து புறப்பட்டுப் பட்டீச்சுரம் வந்துவிட்டார். அங்கே சில தினம் இருந்துவிட்டு ஆறுமுகத்தா பிள்ளையின் குடும்பக் காரியம் ஒன்றன் நிமித்தம் தஞ்சாவூருக்குப் புரட்டாசி மாதம் முதலிற் சென்றார். கரந்தையிலுள்ள திருவாடுதுறை மடத்தில் இவர் ஒருமாத காலம் தங்கியிருந்தனர்.

## 8. திருப்பெருந்துறைப் புராண அரங்கேற்றம்

பின்பு இப்புலவர் கோமான் தஞ்சையிலிருந்து பட்டீச்சுரத்திற்கு வந்து அங்கே சில தினம் இருந்தனர். அப்பாற் பரிவாரங்களுடன் இவர் திருவாவடுதுறைக்கு வந்து சேர்ந்தார்.

### திருப்பெருந்துறைக்குப் புறப்பட்டது

பின்பு, ஒரு நல்ல தினம் பார்த்துத் தேசிகரிடம் விடைபெற்றுக்கொண்டு திருவாதிரைத் தரிசனத்துக்கு இவர் திருப்பெருந்துறை போய்ச் சேரவேண்டுமென்ற எண்ணத்துடன் ஸ்ரீமுகஷு மார்கழி மாதத்தின் முதலில் (1873 டிஸம்பரில்) புறப்பட்டனர். கூடவே சில மாணவர்களுடன் நானும் சென்றேன்.

செல்லும்பொழுது திருவிடைமருதூர்க் கட்டளை மடத்தில் தங்கி அங்கே யிருந்த நெல்லையப்பத் தம்பிரானென்பவரால் இவர் உபசரிக்கப்பெற்றார். அப்பாற் புறப்பட்டு மேற்கே சாலை வழியிற் செல்லும்பொழுது, "ஏதாவது படித்துக் கொண்டு வரலாமே" என்று சொன்னார். கையில்வெங்கைக் கோவை ஏட்டுப்பிரதி யிருந்தமையால் அதனைப் படித்துப் பொருள் கேட்டுக்கொண்டே சென்றோம். இவர் அதிலுள்ள

நயங்களைச் சுவைபட எடுத்துக் காட்டியதுடன் நூலாசிரியருடைய பெருமைகளை இடையிடையே பாராட்டிக் கொண்டும் வந்தார். அப்பாற் கும்பகோணம், பாபநாசம், தஞ்சாவூர், முத்தாம்பாள்புரம் (ஒரத்தநாடு), பட்டுக்கோட்டை, ஒட்டங்காடு, காலகம் என்னும் ஊர்கள் வழியே சென்று திருப்பெருந்துறையை இவர் அடைந்தார்.

## * வேம்பத்தூர்ப் பிச்சுவையர்

திருப்பெருந்துறையை அடைந்து அதன் தெற்கு வீதியி லுள்ள திருவாவடுதுறை மடத்தில் இவர் பரிவாரங்களுடன் தங்கினர். இவர் அங்கே வந்துவிட்டதை ஸ்ரீ ஆத்மநாத ஸ்வாமி கோயிற் கட்டளை ஸ்தானத்தி லிருந்த ஸ்ரீ சுப்பிரமணியத் தம்பிரானுக்குத் தெரிவிப்பதற்குப் பழனிக் குமாரத்தம்பிரானும் நானும் கட்டளை மடத்திற்குச் சென்றோம். அப்பொழுது மடத்தின் வெளியே உள்ள ஒரு மண்டபத்தில் நாட்டுக்கோட்டை நகரத்துத் தனவைசிய கனவான்கள் சிலரோடும், வேம்பத்தூர்ப் பிச்சுவையர் முதலிய தமிழ்ப் பண்டிதர்களோடும் இருந்து வன்றொண்டச் செட்டியார் பேசிக்கொண்டிருந்தார். பிச்சுவையர் பாடல் சொல்லி எல்லோரையும் மகிழ்வித்துக் கொண்டிருந்தனர். அதைக் கவனித்த என்னை நோக்கி, "இவர்தாம் வேம்பத்தூர்ப் பிச்சுவையர்" என்று பழனிக்குமாரத் தம்பிரான் தெரிவித்தனர். அவர் பாடல் சொல்லுதலைக் கேட்டுக்கொண்டே சிறிது நேரம் நின்றுவிட்டு உள்ளே சென்று சுப்பிரமணியத் தம்பிரானைப் பார்த்துப் பிள்ளையவர்கள் வந்திருப்பதை நாங்கள் தெரிவித்தோம். இவருடைய வரவை எதிர்பார்த்துக்கொண்டேயிருந்த அவர் அதனைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தார்.

வன்றொண்டர் முதலியவர்கள் வந்து வந்தனம் செய்து தம்பிரானிடம் விபூதிப் பிரசாதம் பெற்றுக்கொண்டார்கள். பிச்சுவையர் நிமிஷப் பொழுதிற் கவி செய்யும் ஆற்றலைக் குறித்து வியந்துகொண்டே நாங்கள் இக்கவிஞர்பிரான் இருந்த விடுதிக்குச் சென்றோம்.

---

* இது வேம்பற்றூரெனவும் வழங்கும்

அவ்விடத்திற் கோயிலார் மரியாதையுடன் வந்து பிரசாதங்களை இவரிடம் கொடுத்துத் தரிசனத்திற்கு வர வேண்டுமென்று அழைத்தார்கள். உடனே இவர் ஆலயத்துக்குச் சென்றார் சுப்பிரமணியத் தம்பிரான் அங்கே வந்து இவரை வரவேற்று முன்னே நின்று தரிசனம் செய்வித்தார். அன்றைத்தினம் திருவாதவூரடிகள் கொண்டருளியிருந்த மந்திரிக் கோலக் காட்சி எங்கள் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தது.

தரிசனமானபின்பு பிள்ளையவர்களுக்குத் தம்பிரானவர்களாற் காளாஞ்சிகள் கொடுக்கப்பெற்றன. அவற்றை இவர் வாங்கி வேறொருவரிடம் கொடுப்பதற்குத் திரும்பினார். உடனே அங்கே நின்ற வேம்பத்தூர்ப் பிச்சுவையர் வந்து அவற்றை அன்புடன் வாங்கிக்கொண்டனர்; அவரைக் கண்டு இவர், "துவடுகநாததுரை எப்பொழுது வந்தது?" என்று கேட்டனர்.

* 'துவடுக நாத துரை' என்று அவரைச் சொன்னதன் காரணத்தை நாங்கள் இவரிடம் பின்பு கேட்டுத் தெரிந்து கொண்டோம். அப்பால் இவர் தமக்கு அமைத்திருந்த விடு

---

* ஒரு காலத்திற் சிவகங்கை ஸம்ஸ்தானத் தலைவராக இருந்த முத்துவடுகநாத துரை யென்பவர்மீது பிச்சுவையர், காதலென்னும் ஒரு பிரபந்தம் செய்து அரங்கேற்றி ஸம்மானம் பெற்றனர். அப்பொழுது அங்கே ஆஸ்தான பண்டிதராக இருநத முத்துவீரப்ப பிள்ளை யென்பவர் அவரைப் பார்த்து, முத்துவடுகநாத துரை யென்பதை ஒரு வெண்பாவிலமைத்து ஐந்து நிமிஷங்களிற் பாடவேண்டுமென்று கூறினார். பிச்சுவையர் அப்படியே செய்துவிட்டார். அச்செய்யுளின் முன்னிரண்டடிகள் எனக்குக் கிடைக்கவில்லை. பின் இரண்டடிகள் மட்டும் கிடைத்தன. அவை வருமாறு:

" கவடுக நாதனையே கைதொழுது வாழ்முத்
துவடுக நாத துரை."

[கவடு உகத் தொழுதுஎன்க; கவடு - வஞ்சனை. நாதன் - சிவபெருமான்.]

அந்த வரலாற்றை ஒரு சமயம் பிள்ளையவர்கள் கேட்டு வியப்புற்று அது தொடங்கி அவரைக் காணுந்தோறும் 'துவடுக நாத துரை' என்றே அன்புடன் அழைப்பாராயினர்.

திக்குச் சென்றார். இவருடைய வரவைக் கேட்டதும் அங்கே திருவிழாவிற்கு வந்திருந்த பண்டிதர்கள் பலர் வந்து பார்த்து அளவளாவிக்கொண்டு உடனிருந்தார்கள்.

மறுநாட் காலையிற் பிச்சுவையர் தாம் ஆலவாயடிகள் திறத்துச் செய்திருந்த நிரோட்டக யமகவந்தாதியை இவரிடம் படித்துக் காட்டிப் பொருள் சொல்லிக்கொண்டிருந்தனர். அப்பொழுது, "இது பிழை, அது பிழை" என்று உடனிருந்த பழனிக்குமாரத் தம்பிரான் அடிக்கடி ஆட்சேபஞ் செய்தனர். பிச்சுவையர் உடனுடன் அந்தப் பதங்களை மாற்றி மாற்றி வேறு வேறு பதங்களை யமைத்துச் சிறிதும் வருத்தமின்றி முடித்துக் கொண்டே வந்தார். இதைக் கண்ட இக் கவிஞர்கோமான் தம்பிரானை நோக்கி, "சாமீ, நிரோட்டகத்தில் யமகமாகப் பாடல்கள் செய்திருக்கும் அருமையைச் சிறிதும் பாராட்டாமல் ஒவ்வொரு பாடலிலும் பல ஆட்சேபங்கள் செய்துகொண்டே செல்வது நன்றாக இல்லை. ஆட்சேபிக்க ஆட்சேபிக்க ஆலோசனை செய்யாமல் உடனுடன் வேறு பதங்களை அமைத்து விரைவில் இவர் முடித்து விடுவதைப் பார்த்து இவருடைய திறமையைப் பற்றி வியக்கவேண்டாமா? மேலே சொல்லும்படி தாராளமாக விட்டுவிடுக. ஊக்கத்தைக் குறைக்கக்கூடாது" என்று சொல்லவே அவர் ஆட்சேபியாமல் சும்மா இருந்தார். பின்னர் அந்நூல் முற்றும் படித்துக் காட்டப்பெற்றது.

இப்படியே வந்தவர்களுள் ஒவ்வொருவரும் தினந்தினம் தாம் தாம் செய்துவைத்திருந்த நூல்களை இவரிடம் படித்துக் காட்டித் திருத்திக்கொண்டனர். இவரும் சலிப்பில்லாமற் கேட்டு அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றி ஆதரித்து வந்தார்.

### புராண அரங்கேற்ற ஆரம்பம்

நல்ல தினத்திற் புராண அரங்கேற்றம் ஆரம்பிக்கப் பெற்றது. அப்போது தம்பிரானவர்கள் பல இடங்களுக்குச் சொல்லி யனுப்பினமையால் சமீபமான இடங்களிலிருந்த சில ஜமீன்களின் பிரதிநிதிகளும், சேர்வைகாரர்கள் முதலியவர்களும், பெரிய மிராசுதார்களும், புதுக்கோட்டை அறந்தாங்கி முதலிய

இடங்களில் இருந்த உத்தியோகஸ்தர்களும, பண்டிதர்கள் பலரும் வந்து கூடினார்கள்.

குறிப்பிட்டிருந்த நல்ல முகூர்த்தத்தில் திருப்பெருந்துறைப் புராணத்தின் எட்டுப் பிரதியை ஸ்ரீ ஆத்மநாத ஸ்வாமியின் திருமுன்பு பீடத்தில் வைத்துப் பூசித்துப் பிள்ளையவர்களிடம் ஒரு *நம்பியார் கொண்டு வந்து கொடுத்தனர். விபூதிப் பிரசாதத்தைக் கொடுத்து மாலை சூட்டிச் சிரத்திற் பட்டுக் கட்டுவித்த பின்பு இவரை உபசாரத்துட னழைத்து வந்து †குதிரை ஸ்வாமி மண்டபததில் இருக்கச் செய்து தொடங்கச் சொன்னார்கள். இவர் கட்டளைப்படி முதலிலிருந்து பாடல்களை நான் படித்தேன். ஒவ்வொன்றிற்கும் அழகாகப் பதசாரஞ் சொல்லி இவர் உபந்யசித்தார்.

## ஸ்ரீ மாணிக்கவாசகர் சரித்திரம்

இப்புராணத்தில் மாணிக்க வாசகர் சரித்திரமாகிய திருவாதவூரர் திருவவதாரப் படலம் முதலியன வடமொழியிலுள்ள ஸ்ரீ ஆதிகைலாஸ மாஹாத்மியம், மணிவசன மாஹாத்மியம், திருப்பெருந்துறைப் பழைய தமிழ்ப் புராணங்கள், திருவாதவூரடிகள்புராணம், திருவிளையாடற் புராணம் ஆகிய இவற்றை ஆராய்ந்தே செய்யப்பெற்றன. அரங்கேற்றுகையில் ஒருநாள் திருவாதவூரடிகள் புராணத்தை ஆராய்ந்து வருங்காலையில் பாண்டியனுடைய தண்டற்காரர்கள் மாணிக்கவாசகரைத் துன்புறுத்தியபொழுது அவர் மனமுருகிச் சிவபெருமானை நினைந்து முறையிட்டனவாக அமைக்கப்பெற்ற,

(விருத்தம்)

“ஊனுடம் புடைய வாழ்க்கை யொழித்துனக் கடிமை யென்று
மாநிலம் புகலு மாறு வந்துனை யடைந்தேன் றன்னை
மீனவன் றன்பான் மீள விடுத்தனை வேலை நீருள்
ஆனபி னந்நீ ராற்று நீரென வாவ துண்டோ”

---

* இவர் ஸ்ரீ ஆத்மநாத ஸ்வாமியை அர்ச்சிப்பவர்.

† இதன்பால் ஸ்வாமி அசுவாரூட மூர்த்தியாக எழுந்தருளியிருக்கின்றமையின் இஃது இப்பெயர் பெற்றது. இத்தலத்துள்ள சபைகள் ஆறனுள் இது கனகசபை என்று கூறப்படும்.

" அறத்தனிச் செல்வி பாக வன்பிலே னின்பா லென்று
வெறுத்திடி னடியேற் கிங்கு வேறொரு துணையு மில்லை
செறுத்துயர் புரங்க ளெல்லாஞ் செற்றவ னடியான் றன்னை
நிறுத்தினர் வெயிலி லென்று னின்புகழ்க் கேற்ற மாமோ "

" வானநா டவர்க்கு மேலோய் வந்துனக் கடிமை யிப்போ
தானநா னிடும்பை யுற்று லாருனக் கடிமை யாவார்
நானெனு மனத்தார் சொல்லு நல்லுரை யன்றி நின்ற
ஊனனு மொருவன் சொல்வ தேறுமோ வுளத்தி லென்றார் "
(திருப்பெருந்துறைச் சருக்கம் 131-3)

என்னும் பாடல்களைப் படிக்கையிற் கேட்டுக் கேட்டு இவர் மனமுருகினர்; கண்ணீர் உகுத்தார்; அதன் பொருளமைதியையும் நடையழகையும் பக்திச் சுவையையும் பாராட்டியதன்றி அந்நூலாசிரியர் அகத்திய முனிவருடைய அருள் பெற்றவரென்றும் அதனாலேதான் அந்நூற் செய்யுட்கள் அவ்வளவு சுவையுள்ளனவாக அமைந்திருக்கின்றன வென்றும் சொன்னார்.

## சேக்கிழார் பிள்ளைத்தமிழ்

இக் கவி சிகாமணியின் பக்கத்தில் இருந்து நாள்தோறும் புராணப் பிரசங்கங் கேட்டு வந்த வன்றொண்டச் செட்டியார் மாணிக்கவாசகர் சரித்திரத்தை இவர் அருமையாகச் செய்திருப்பதை அறிந்து ஒருநாள் இவரிடம், " திருத்தொண்டர்களுடைய பெருமைகளை நன்றாக யாவரும் அறியும்படி பெரிய புராணத்தின் வாயிலாகப் புலப்படுத்தியருளிய சேக்கிழார் திறத்தில் பிள்ளைத்தமி ழொன்று ஐயா அவர்கள் செய்தருளவேண்டும் " என்று மிகவும் வணக்கமாய்க் கேட்டுக்கொண்டனர். அப்போது, 'பெரிய புராணத்திற்கு வன்றொண்டர் வாய்மொழியாகிய திருத்தொண்டத்தொகை காரணமாக இருந்தது; அப்புராணத்தை இயற்றிய சேக்கிழார் பிள்ளைத்தமிழுக்கு வன்றொண்டச் செட்டியாரது வாய்மொழியே காரணமாயிற்று. இது நல்ல அறிகுறி' என்று இவர் எண்ணி எண்ணி மகிழ்ந்தனர். அவர் கேட்டுக்கொண்டவாறே சேக்கிழார் பிள்ளைத்தமிழைச் செய்யத்தொடங்கி மிக ஆராய்ந்து சில தினங்களிற் பாடி முடித்தனர்.

பெரிய புராணத்தி லுள்ள பலவகை நயங்களையும் அறிந்து பலவருஷம் அனுபவித்து இன்புற்றும் இன்புறுவித்தும் வந்த வராதலின் இக்கவிஞர் பிரானுக்குச் சேக்கிழார்பாற் சிறந்த பக்தி இருந்ததென்பதை யாவரும் அறிவார். இயல்பாகவே நாயன்மார்களுடைய வரலாற்றைப் பலவகையில் எடுத் தாண்டு தம்முடைய நூற்பகுதிகளை அழகுபடுத்தும் இயல் புடைய இவருக்கு அந்நாயன்மார் சரிதையை விரிவுற வெளி யிட்ட சேக்கிழார்பால் அத்தகைய அன்பு மிக்கிருத்தல் தக்கதன்றோ?

சேக்கிழார் பிள்ளைத்தமிழை இவர்பால் வரும் வித்துவான் களும் பிறரும் கேட்டுக் கேட்டு மகிழ்ந்து பாராட்டி வந்தனர். இவரே அதனை மீண்டும் மீண்டும் படிப்பித்துக் கேட்டு இன்புறுவதும் உண்டு. இவர் இயற்றிய பிள்ளைத்தமிழ்களுள் இறுதியிற் செய்தது அதுதான். தேவாரம் பெரிய புராணம் முதலிய நூல்களில் ஈடுபட்டுள்ள வித்துவான்கள் அந்தப் பிள்ளைத்தமிழில் ஈடுபடாமல் இரார்.

## அரங்கேற்றத்தின் பூர்த்தி

அப்பால் ஒரு நல்லதினத்தில் திருப்பெருந்துறைப் புராண அரங்கேற்றத்தின் பூர்த்தி விழா சிறப்பாக நடைபெற் றது. அதற்காக அழைக்கப்பட்டுப் பட்டுக்கோட்டைத் தாலு காவிலுள்ள பாலைவனம், நகரம் முதலிய சில ஜமீன்களி லிருந்து பிரதிநிதிகளும் உத்தியோகஸ்தர்களும், புதுக் கோட்டையி லிருந்து பல உத்தியோகஸ்தர்களும், நாட்டுக் கோட்டைத் தனவைசியப் பிரபுக்களிற் பலரும், வேறு சிலரும் வந்து சிறப்பித்தார்கள். அப்புராணம் ஒரு சிவிகையில் வைத்து ஊர்வலம் செய்விக்கப்பெற்றது. அச்சிறப்பு ஓர் அரசருடைய விவாக ஊர்வலம் போலவே நடைபெற்றது. அப்போது சுப்பிர மணியத் தம்பிரான் முதலில் வாக்களித்திருந்தபடியே ரூபாய் இரண்டாயிரம் இவருக்கு ஸம்மானம் செய்ததன்றி உடன் இருந்த மாணாக்கர்களுள் ஒவ்வொருவருக்கும் அவரவருடைய தகுதிக்குத் தக்கபடி மரியாதை செய்தார். அத்தொகைகள் அவருடைய சொந்தச் சம்பளத்தி லிருந்து மிகுத்து வைக்கப் பெற்றவை.

அந்த விசேஷத்திற்கு வந்திருந்த கனவான்கள் ஊருக்குச் செல்லுகையில் இக் கவிச் செல்வரைக் கண்டு, திருவாவடு துறைக்குப் போகும்போது தத்தம் இடங்களுக்கு வந்து சில தினங்கள் இருந்து சிறப்பித்துச் செல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

அக்காலத்தில் இருந்த ஜமீன்தார்களும் பிரபுக்களிற் பெரும்பான்மையோரும் கல்விமான்களோடு பழகுதலையும் அவர்களை ஆதரித்தலையும் தங்களுடைய கடமையாகக் கருதி வந்தார்கள். வித்துவான்களோடு சம்பாஷித்தலே அவர்களுக்குப் பொழுதுபோக்காக இருந்தது. ஒவ்வொருவரிடத்திலும் வடமொழியிலும் தமிழிலும் ஸங்கீதத்திலும் வல்ல ஒவ்வொருவர் இருந்தே வருவார். அவரவருடைய வருவாயில் வேறு செலவுகள் அக்காலத்தில் அதிகமாக இல்லாமையால் வித்துவான்களை ஆதரிப்பதில் விஞ்சவேண்டுமென்று ஒருவரை விட ஒருவர் ஊக்கங் காட்டியும் வந்தனர். ஆதலால், பிள்ளையவர்கள் தங்கள் ஊருக்கு வந்து போதலை அவர்கள் பெரிய பாக்கியமாகவே கருதினார்கள்.

## திருப்பெருந்துறைப் புராண அமைப்பு

திருப்பெருந்துறைப் புராணத்தில் முதலில் 27 செய்யுட்களடங்கிய கடவுள் வாழ்த்தும் அவையடக்கமும் திருநாட்டுப் படலம் முதலிய 32 படல உறுப்புக்களும் அமைந்துள்ளன. இதிலுள்ள செய்யுட்களின் தொகை 1659.

உருவம், அருவம், அருவுருவ மென்னும் மூவகைத் திருமேனிக்குள்ளே, சிவபெருமான், அம்பிகையும் தாமும் அருவத் திருமேனி கொண்டு எழுந்தருளி விளங்கும் இடம் இந்தத் திருப்பதியே. இதனை இப்புராணத்திற் பல இடங்களிற் புலப்படுத்தியிருக்கிறார்.

பிரமதேவர், திருமால், காலாக்கினியுருத்திரர், மாணிக்கவாசகர், சோழராசன், அதர்மன், இலக்குமி, ஒரு வேடன் என்பவர்கள் செய்தனவாக இந்நூலில் உள்ள துதிச் செய்யுட்கள் மனத்தை உருக்கி அன்பை மிகுவிக்கும்.

திருவாதவூரடிகளுடைய வரலாற்றைக் கூறும் பகுதிகள் பெரியபுராணத்தைப் போன்ற அமைதியையும் அழகையும் உடையனவாக விளங்கும். நைமிச முனிவர் பெருந்துறை யடைந்து பூசித்த படலத்தில், திருப்பெருந்துறையைத் தரிசித் தற்கு வரும்பொழுது சூதமுனிவர் சவுனகாதியருக்கு இடையி லுள்ள தலங்களைக் காட்டுவதாக உள்ள பகுதியில் அறுபத்து மூன்று தலங்கள் வெளிப்படையாகக் கூறுமல் பலவகைக் குறிப்புக்களால் கூறப்பட்டுள்ளன; அவற்றுல் அத்தலங்களின் வரலாறுகளுள் அரியனவாகிய சில செய்திகள் புலப்படும்.

---

# 9. பல ஊர்ப் பிரயாணம்

## திருப்பெருந்துறையினின்றும் புறப்பட்டது

பின்பு இக்கவிஞர் பெருமான் திருப்பெருந்துறையினின் றும் புறப்பட எண்ணிச் சுப்பிரமணியத் தம்பிரானிடம் பிரியா விடை பெற்றுக்கொண்டார். இருவரும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிதற்கு மனமில்லாதவராகி வருந்திஞர்கள். பின்பு ஒருவாறு ஆறுதல் கூறி விடைபெற்று இவர் புறப்பட்டார்.

## குன்றக்குடி சென்றது

அப்பொழுது இவரை அழைத்துவர வேண்டு மென்று குன்றக்குடியி லுள்ள திருவண்ணுமலை ஆதீனத் தலைவரான ஸ்ரீ ஆறுமுக தேசிகர் அனுப்ப, அவ்வாதீனத்தில் முதல் குமாஸ்தாவாக இருந்தவரும் சிறந்த தமிழ்க் கல்விமானும் அருங்கலை விநோதருமாகிய அப்பாப்பிள்ளை யென்பவர் வந்து அழைத்தார். அவருடன் புறப்பட்ட இவர் இடையிலே யுள்ள அன்பர்களின் வேண்டுகோளின்படி அவ்வவ் விடங்களுக்குச் சென்றுவிட்டுக் குன்றக்குடி சென்ருர். அங்கே ஆதீனத் தலைவர் இவரை வரவேற்று உபசரித்துச் சில தினங்கள் இருக்கும்படி செய்து தக்க சம்மானங்கள் வழங்கிப் பின்பு

பல்லக்கு வைத்து அனுப்பினர். அக்காலத்தில் அவர் மீது இவர் இயற்றிய சில பாடல்கள் உண்டு. அவை இப்பொழுது கிடைக்கவில்லை.

## குரு பூசை மான்மியம்

அப்பால் இவர் வன்றெண்டச் செட்டியார், சத்திரம் அருணசல செட்டியார், வெளிமுத்தி வைரவ ஐயா என்பவர்களால் அழைக்கப்பட்டுத் தேவகோட்டைக்குச் சென்று சில நாள் இருந்து அங்கே யுள்ள கனவான்களால் உபசரிக்கப் பெற்றார். பிறகு காரைக்குடி சென்று அங்கே அறுபத்துமூவர் குருபூசை மடத்தில் தங்கினர். அங்கே சிலதினம் இருந்த பொழுது குருபூசையின் பெருமையைப் புலப்படுத்திச் சில செய்யுட்கள் இயற்றித் தரவேண்டு மென்று அங்கே யிருந்த மெ. பெரி. ராம. மெய்யப்ப செட்டியா ரென்பவர் கேட்டுக் கொள்ளவே, குருபூசை மான்மிய மென்ற ஒரு நூல் இவரால் விரைவில் இயற்றி அளிக்கப்பெற்றது. அது பதினைந்து செய்யுட்களை யுடையது; அச்சிடப் பெற்று வழங்குகின்றது.

## புதுக்கோட்டை சென்றது

அப்பால் வழியிலுள்ள ஊர்களிற் பல கனவான்களால் உபசரிக்கப்பட்டுத் திருவாவடுதுறையை நோக்கி வருகையில் புதுக்கோட்டையைச் சார்ந்த திருக்கோகர்ணம் சென்று அந்த ஸம்ஸ்தான வித்துவா ஞன கணபதி கவிராயர் வீட்டில் தங்கினர்.

புதுக்கோட்டை மன்னராகிய கௌரவம் பொருந்திய இராமசந்திரத் தொண்டைமா னவர்களுடைய மூத்த தேவியாரான ஸ்ரீ பிரகதம்பா பாய்சாகே பவர்கள் அங்கே இவர் வந்திருத்தலைக் கேள்வியுற்றுத் தக்கவர்களை அனுப்பி இவரை அரண்மனைக்கு அழைத்துவரச் செய்து நாடோறும் பல அரிய விஷயங்களைக் கேட்டார்கள். தேவாரங்கள் சிலவற்றிற்கும் பெரியபுராணத்தி லுள்ள பாடல்கள் சிலவற்றிற்கும் பொருள் கேட்டு அறிந்து தக்க ஸம்மானங்கள் பல செய்வித்து இவருடைய பூசைக்கு வேண்டிய பாத்திரங்களை வெள்ளியினாலே செய்வித்து அளித்தார்கள்.

## திருவரன்குளப் புராணம்

புதுக்கோட்டைக்கு அருகிலுள்ளதான திருவரன்குள மென்னும் சிவஸ்தலத்து அபிமானிகளாகிய வல்லநாட்டுப் பெருங்குடி வணிகர் சிலர் வந்து இவரைப் பார்த்துப் பேசி மகிழ்ச்சியுற்றனர்; திருவரன்குளத்திற்கு வந்து ஸ்வாமி தரிசனம் செய்துகொண்டு போகவேண்டு மென்று கேட்டுக் கொண்டனர். அங்ஙனமே இவர் அங்கே சென்று ஸ்ரீ ஹர தீர்த்தஸ்தலேசரையும் பெரியநாயகி யம்மையையும் தரிசனம் செய்தனர். அக்காலத்தில் அத்திருக்கோயில் அர்ச்சகர்களாகிய ஆதிசைவர்களும் தருமகர்த்தர்களாகிய மேற்கூறிய வணிகர் களும் அத்தலத்திற்கு ஒரு வடமொழிப் புராணம் இருப்பதைச் சொல்லி அதனை மொழிபெயர்த்துத் தமிழ்க் காப்பியமாகப் பாடித்தரவேண்டு மென்று கேட்டுக்கொண்டனர். அங்ஙனமே செய்வதாக இவர் வாக்களித்து வடமொழிப் புராணத்தை வாங் கிக்கொண்டு சென்றனர். புதுக்கோட்டைக்கு மீண்டு வந்த பின்பு அங்கேயே இருந்து அந்நூலிற் சில பாடல்களை இயற் றினர்; திருவாவடுதுறைக்கு வந்தபின்பும் சில செய்யுட்கள் இயற்றப்பெற்றன. கடவுள் வாழ்த்து, ஆக்குவித்தோர் வரலாறு, அவையடக்க மென்பனவும்திரு நாட்டுப் படலத்தில் பத்துப் பாடல்களுமே இவராற் செய்யப்பெற்றன. அதன் பின் அது பூர்த்திசெய்யப் பெறவில்லை.

## தியாகராச செட்டியாரைச் சந்தித்தது

அப்பால் இவர் அந்நகரிலிருந்து புறப்பட்டுத் தஞ்சை வழி யாகக் கும்பகோணம் வந்து தியாகராச செட்டியார் வீட்டில் தங் கினர். அப்பொழுது திருப்பெருந்துறையிற் கிடைத்த ரூ. இரண் டாயிரமும் இடையிடையே சில ஜமீன்தார்கள் முதலியவர்க ளால் கிடைத்த ரூ. இரண்டாயிரமும் ஆக ரூபாய் நாலாயிரமும் இவரிடம் இருப்பதை உடன் வந்தவர்களால் அறிந்த தியாக ராச செட்டியார் இவரைப் பார்த்து, "இந்தத் தொகையை என்னிடம் கொடுத்தால் வட்டிக்குக் கொடுத்து விருத்திபண்ணி வட்டியை அவ்வப்பொழுது ஐயா அவர்களுடைய குடும்ப ஸௌகரியத்திற்காக அனுப்பிவருவேன். அந்த நாலாயிரமும் குடும்பத்துக்கு மூலதனமாக இருக்கும். உங்கள் கையி லிருந்

தால் சில தினங்களிற் செலவழித்து விடுவீர்கள். இளமைப் பருவத்தில் நீங்கள் பணத்தின் அருமையை அறிந்ததுபோல இப்பொழுது அறிந்துகொள்ளவில்லை. உங்களுக்கு என்னைப் போலச் சொல்லுபவர்கள் ஒருவரு மில்லை. நான் சொல்வதைக் கேட்கவேண்டும்" என்றார். அதற்கு இவர் சிறிதும் உடன்பட வில்லை. பின்பு ஆறுமுகத்தா பிள்ளையினது வேண்டுகோளால் இவர் அங்கிருந்து பட்டீச்சுரம் சென்று சில தினம் இருந்தார்.

### திருவாவடுதுறைக்கு வந்து சேர்ந்தது

அப்பால் இவர் பட்டீச்சுரத்திலிருந்து திருவாவடு துறைக்கு வந்து சேர்ந்தார். வந்தவுடன் திருப்பெருந்துறை முதலிய இடங்களில் நிகழ்ந்தவற்றை ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ரிடம் விண்ணபிக்க அவர் கேட்டு மிகவும் சந்தோஷித்தார். புராணத்தி லுள்ள சில பகுதிகளையும் சேக்கிழார் பிள்ளைத் தமிழையும் படிக்கச்சொல்லி மெல்லக் கேட்டுக் கேட்டுப் பிள்ளையவர்களுடைய பெருமையை உடனுடன் பாராட்டிக் கொண்டே வந்தார்.

### மருதவாணர் பதிகம்

பவ வருஷத்தில் குமாரசாமித் தம்பிரானுக்குத் தேகஅசௌ கரியம் உண்டாயிற்று. ஆதீனத் தலைவருடைய கட்டளையின்படி அவர் திருவிடைமருதூர் சென்று கட்டளை மடத்தில் தங்கித் தக்க வைத்தியர்களிடம் மருந்து வாங்கி உட்கொண்டு வந்தார். அப்பொழுது அவரைப் பார்க்கச் சென்ற இவர், அவர் தேக நிலையை யறிந்து வருத்தமுற்றார். அவர், "தினந்தோறும் நான் ஸ்தோத்திரம் பண்ணும்படி ஸ்ரீ மகாலிங்க மூர்த்தியின்மீது ஒரு பதிகம் இயற்றித்தரல் வேண்டும்" என்று விரும்பவே, இவர் ஒரு பதிகம் இயற்றினர். அது 'மருதவாணர் பதிக'மென்று வழங் கும். அதை அவர் தினந்தோறும் பாராயணம் செய்துகொண்டு வந்தார். சில தினத்தில் அவருக்குப் பிணி நீங்கிவிட்டது. அப் பால் அவர் திருவாவடுதுறைக்கு வந்து வழக்கம்போலவே பாடங் கேட்டு வந்தார்.

### ஷஷ்டியப்த பூர்த்தி

இவருக்கு அப்போது பிராயம் 60 ஆகிவிட்டமையால் அதனை யறிந்த சுப்பிரமணிய தேசிகர் அக்காலத்தில்

இவருக்கு நடத்த வேண்டிய ஷஷ்டியப்த பூர்த்தி யென்னும் விசேஷத்தைப் பங்குனி மாதத்தில் மடத்துச் செலவைக் கொண்டே மிகவும் சிறப்பாக நடத்துவித்தார்.

## அம்பர் சென்றது

அம்பர்ப் புராணம் பூர்த்தியாகியும் அரங்கேற்றப்படாமல் இருந்ததை யறிந்த ஆதீனகர்த்தர் அப்புராணத்தை ஆக்குவித்தோராகிய அம்பர் * வேலாயுதம்பிள்ளை யென்பவருக்கு அந்நூலை விரைவில் அரங்கேற்றுவித்தல் உத்தம மென்று ஒரு திருமுகம் அனுப்பினர். அவர் அதனைச் சிரமேற்கொண்டு விஷயத்தைப் படித்தறிந்து உடனே திருவாவடுதுறைக்கு வந்து தேசிகரைத் தரிசனம் செய்துவிட்டுப் பரிவாரங்களுடன் இக் கவி நாயகரை அழைத்துக்கொண்டு சென்றார்; அங்கே யிருந்த சொர்க்கபுர ஆதீன மடத்தில் இவரைத் தங்கும்படி செய்து வேண்டிய சௌகரியங்களைச் செய்வித்துத் தினந் தோறும் சென்று அளவளாவி மகிழ்ந்து வந்தனர்.

## நான் அம்பருக்குச் சென்று இவரைப் பார்த்தது

முன்பு திருப்பெருந்துறையி லிருந்து உடல்நல மின்மையால் இவரிடம் விடைபெற்றுப் பிரிந்த நான் விரைவில் தீர்க்க வேண்டிய கடனுக்காகப் பொருளீட்டும் பொருட்டுப் பெரும் புலியூர் (பெரம்பலூர்)த் தாலூகாவி லுள்ள காரை யென்னும் ஊருக்குச் சென்றேன்; அங்கே உள்ள சின்னப்பண்ணை கிருஷ்ணசாமி ரெட்டியார் முதலிய சில அன்பர்களின் விருப்பத்தின்படி திருவிளையாடற் புராணத்தைப் படித்துப் பொருள் சொல்லிக்கொண்டு வந்தேன். இடையிற் சிலநாட்கள் ஓய்வு ஏற்பட்டமையால் இவரைப் பார்த்துவர வேண்டு மென்னும் அவாவோடு புறப்பட்டுத் திருவாவடுதுறைக்கு வந்தேன்; இவர் புராணம் அரங்கேற்றுதற்கு அம்பர் சென்றிருப்பதாகக் கேள்வியுற்று ஒருநாள் அங்கிருந்து அம்பர் சென்று இவரைப் பார்த்து ஆறுதலடைந்தேன்.

அன்று பிற்பகலில் ஆலயம் சென்று தரிசனம் செய்கையில் ஒவ்வொரு விசேஷத்தையும் இவர் எனக்குச் சொல்லி

* இவர் பெயர் வேலுப்பிள்ளை யெனவும் வழங்கும்.

வந்தார்; ஒரு பஞ்சகாலத்திற் பொருளில்லாமல் வருத்தமுற்ற நந்தனென்னும் அரசனுக்கு நாள்தோறும் படிக்காசு அருளினமையால் அத் தல விநாயகருக்குப் படிக்காசுப் பிள்ளையாரென்னும் திருநாமம் அமைந்ததை எனக்கு விளங்கச் சொன்னதோடு, அங்கே இருந்த தீர்த்தத்தைக் காட்டி, "இதுதான், * 'அன்னமாம் பொய்கை சூழ் அம்ப ரானை' என்று தேவாரத்திற் சொல்லப்பட்டுள்ள அன்னமாம் பொய்கை; அன்ன வடிவங் கொண்ட பிரமதேவர் உண்டாக்கிய தீர்த்தம் இது" என்று கூறினர். சுவாமி எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலைக் காட்டி, "இது கோச்செங்கட் சோழ நாயனாரால் திருப்பணி செய்யப்பெற்ற பெருமை வாய்ந்தது; இத்தலத்துத் தேவாரங்களால் இது விளங்கும்" என்று சொன்னார்; பின்னும், "இந்த ஊர் மிகவும் பழைய நகரம். திவாகரத்தில், 'ஔவை பாடிய அம்பர்ச் சேந்தன்' என்றதிற் கூறப்பட்டதும், 'தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே, மண்ணாவ துஞ்சோழ மண்டலமே - பெண்ணாவாள், அம்பர்ச் சிலம்பி யரவிந்த மேமலராம், செம்பொற் சிலம்பே சிலம்பு' என்ற தனிப் பாடலிற் சொல்லப்பட்டதும் இந்த அம்பரே" என்று அந் நகரத்தின் சிறப்பை விரித்துச் சொல்லி வந்தார்.

அப்போது சில நாட்கள் உடன் இருந்து இவரிடம் சில நூல்களைப் பாடங்கேட்டேன். இவர் குறிப்பிட்டபடி அங்கே இருந்த குழந்தைவேற் பிள்ளை யென்னும் கனவானுக்குத் திருவிடைமருதூருலாவைப் பாடஞ் சொன்னேன். அது முற்றுப்பெற்ற பின்பு இவரே சில நூல்களை அவருக்குப் பாடம் சொல்லிவந்தார்.

### நான் மீண்டும் காரைக்குச் சென்றது

திருவிளையாடலைப் பூர்த்தி செய்ய வேண்டியவனாக இருந்தமையின், "என்னை ஊருக்கு அனுப்பவேண்டும்" என்று நான் கேட்டுக்கொண்டேன். பழக்கம் இல்லாமலிருந்தும் மேற்கூறிய கிருஷ்ணசாமி ரெட்டியாரென்பவருக்கு

* திருநாவுக்கரசர் - திருநாகைக்காரோணம்.

இவர் ஒரு பாடல் இயற்றித் தலைப்பில் அமைத்து, "திருவிளையாடற் புராணத்தை விரைவிற் பூர்த்தி செய்வித்துச் சாமிநாதையரை இங்கே அனுப்பினால் எனக்குத் திருப்தியாயிருக்கும்" என்று ஒரு கடிதம் எழுதுவித்துத் தந்தார். நான் விடைபெற்றுச் சென்று காரை சேர்ந்து அந்த ரெட்டியாரிடம் கடிதத்தைச் சேர்ப்பித்தேன். அவர், "நான் அறியாதவனாக இருந்தும் என்னையும் ஒரு பொருட்படுத்திப் பிள்ளையவர்கள் கடிதம் எழுதினார்களே; பாக்யசாலி யானேன்; இதற்குக் காரணம் உங்கள்பால் அவர்களுக் குள்ள அன்பே" என்று வியந்தனர்; கடிதத்திற் கண்டவாறே என்னை விரைவில் அனுப்ப அவர் முயன்று வருவாராயினர்.

## அம்பர்ப் புராண அரங்கேற்றம்

நல்ல தினம் பார்த்து அம்பர்ப் புராணம் அரங்கேற்றத் தொடங்கப் பெற்றது. அதனை அறிந்து இவருடைய மாணாக்கர் சிலரும் பல வித்துவான்களும் கனவான்களும் பல ஊர்களிலிருந்து வந்து நாள்தோறும் கேட்டு வருவாராயினர். அரங்கேற்றம் நிறைவேறிய தினத்தில் புராணச் சுவடி சிறப்புடன் ஊர்வலம் செய்விக்கப்பெற்றது. பிள்ளையவர்களுக்கு வேலாயுதம் பிள்ளை தம்முடைய குடும்பத்தாருடன் சேர்ந்து தக்க ஸம்மானம் செய்தார். அப்போது உடனிருந்த மாணாக்கர்களும் பிறரும் வேலாயுதம் பிள்ளையையும், கவிநாயகரையும், நூலையும் பாராட்டிச் சிறப்புக்கவிகள் இயற்றிப் படித்தார்கள்.

அம்பர்ப் புராணம் 15 படலங்களையும் 1007 செய்யுட்களையும் உடையது. சோமாசிமாற நாயனார் வரலாறும் கோச்செங்கட் சோழ நாயனார் வரலாறும் இப்புராணத்தில் அடங்கியுள்ளன அப்பகுதிகள் இவருக்கு நாயன்மார்கள்பாலுள்ள பேரன்பையும் சிறிய வரலாற்றையும் விரிவாக அமைத்துப்பாடும் வன்மையையும் புலப்படுத்தும்.

## திருவாவடுதுறைக்குத் திரும்பியது

அம்பர்ப் புராணம் அரங்கேற்றப்பெற்றபின் சில ஸ்தலங்களுக்குப் போய் ஸ்வாமிதரிசனம் செய்து வரலாமென்று இவர் நினைத்திருந்தார். இவருக்கு ஒருவகையான சரீரத் தளர்ச்சி ஏற்பட்டமையால் இவர் அவ்வாறு செய்வதை நிறுத்திக்கொண்டு

திருவாவடுதுறைக்கே போய்ச் சேர எண்ணினார். வேலாயுதம் பிள்ளை முதலியவர்கள் தங்களுடைய பேரன்பையும் இவருடைய பிரிவால் உண்டான துயரத்தையும் புலப்படுத்தினார்கள். பின்னர் இவர் எல்லோரிடத்தும் விடைபெற்றுக்கொண்டு மாணாக்கர்களுடன் திருவாவடுதுறையை அடைந்தார்.

# 10. தேக அசௌக்கிய நிலை

## நான் திருவாவடுதுறைக்கு வந்தது

அக்காலத்தில் நான் என்னுடைய வேலைகளையெல்லாம் ஒருவாறு முடித்துக்கொண்டு காரையிலிருந்து திருவாவடுதுறைக்கு வந்து இவரைப் பார்த்தேன். பார்த்ததுமுதல் இவரது குறிப்பறிந்து முன்பு நான் செய்து வந்த காரியங்களைக் கவனிக்கத் தொடங்கினேன்.

## கம்பராமாயணம் பாடம் சொல்லியது

பின்பு எங்களுடைய வேண்டுகோளின்படியே இவர் கம்பராமாயணத்தை ஆரம்பத்திலிருந்து பாடம் சொல்லத் தொடங்கினார். தேக அசௌக்கியத்தால் வழக்கமாக நடக்கிறபடி அதிகச் செய்யுட்கள் நடைபெறவில்லை. ஒரு நாளுக்கு நூறு அல்லது நூற்றைம்பது செய்யுட்களே நடைபெற்றன. முக்கியமான இடங்களுக்கு மட்டும் பொருள் தெரிந்துகொண்டு வந்தோம். அதைப் படித்துக்கொண்டே வருகையில் இவர், "இவை எவ்வளவு அழகாக இருக்கின்றன. இவையெல்லாம் யோசித்துப் பாடிய பாட்டுக்களா?" என்று மனமுருகிக் கூறிச் சில சமயங்களிற் கண்ணீர் விடுவதுமுண்டு.

## நோயின் தொடக்கம்

அக்காலத்தில் இவருடைய காலிலும் அடிவயிற்றிலும் வீக்கத்தைத் தோற்றுவித்துக்கொண்டு ஒருவகையான நோய் உண்டாயிற்று; இவருடைய தேகம் வரவரத் தளர்ச்சியடையத் தொடங்கியது; ஆகாரம் செல்லவில்லை. அதனால் இவர் நூல் இயற்றுதலும் பாடஞ் சொல்லுதலும் வழக்கம்போல நடைபெறாமல் சில சமயத்து மட்டும் நடைபெற்று வந்தன

## திருவிடைமருதூர்த் திரிபந்தாதி

இவருடைய மாணாக்கர்களுள் ஒருவர் அப்போது திருவாவடுதுறை ஸ்ரீ மாசிலாமணியீசர் மீது திரிபந்தாதி யொன்று இயற்றி அதைப் பல அன்பர்களுக்கு இடையே இருந்து இவரிடம் திருத்தம் செய்துகொள்வதற்காகப் படித்துக் காட்டினார். இவர் அதனை முற்றுங் கேட்டு முடித்தனர். பின்பு அவர் இல்லாத சமயம் பார்த்து, 'இந்த அந்தாதி சிறிதும் நன்றாக இல்லை; மிகவும் கடினமாக இருக்கின்றது; சரியான இடத்தில் மோனை யில்லை; பொருள் நயமுமில்லை; அவருடைய நிர்ப்பந்தத்தினால் ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தது. இவ்விடத்து வாக்கினால் இந்தத் தலத்திற்கு ஓரந்தாதி செய்துதரல் வேண்டும்" என்று மாணாக்கர்கள் எல்லாரும் இவரைக் கேட்டுக்கொண்டார்கள். இவர், "அவர் செய்திருக்கும்பொழுது இத்தலத்திற்கு நான் செய்வது முறையன்று; வேண்டுமானால் திருவிடை மருதூருக்குச் செய்வேன்" என்று கூறி அவ்வாறே செய்யத் தொடங்கி விநாயகர் காப்பை முடித்தவுடன், ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருடைய துதி செய்ய ஆரம்பித்தார். அப்பொழுது நான், "ஐயா அவர்கள் உடையவர் பூசை எழுந்தருளப்பண்ணிக்கொண்ட போது குரு ஸ்தோத்திரமாக ஒரு செய்யுள் செய்ததுண்டு; எனக்கு அது ஞாபகமிருக்கிறது" என்று சொன்னேன். அதைச் சொல்லச் சொல்லிக் கேட்டு அதையே சேர்க்கும்படி சொன்னமையால் அப்படியே அது சேர்க்கப்பட்டது. சில தினங்களில் அவ்வந்தாதி முடிவுபெற்றது. அந்த நூல் தான் இறுதியில் இவராற் பாடப் பெற்றவற்றுள் முற்றுப் பெற்ற பிரபந்தம்.

## * ஸ்ரீ சிவஞானயோகிகள் சரித்திரம்

சிவஞான யோகிகள் சரித்திரத்தைத் தமிழ்ச் செய்யுளாக இயற்றவேண்டு மென்றும் அதில் ஆதீனத்தின் பரம்பரை வரலாறுகள் முறையே கூறப்படவேண்டுமென்றும் ஆதீனத்து அடியார்கள் பலர் நெடுநாளாக விரும்பியதை யறிந்து சுப்பிரமணிய தேசிகர் இவருக்குக் குமாரசாமித் தம்பிரான் மூலம் தெரிவித்தார். அங்ஙனம் செய்யவேண்டுமென்று தமக்கு

---

* இவர் சிவஞான முனிவரெனவும் வழங்கப்பெறுவர்.

நீண்ட நாளாக எண்ணம் இருந்ததென்றும் சந்நிதானம் கட்டளையிட்டது அனுகூலமாயிற் றென்றும் சொல்லிச் செய்வதற்கு இவர் உடன்பட்டார்.

கச்சியப்ப முனிவருடைய நூல்களில் இவர் மிக்க மதிப்பு வைத்துப் படித்தும் பாடஞ் சொல்லிக்கொண்டும் வந்தவ ராதலால், அவரிடம் இவருக்குப் பக்தி அதிகம். அவர் சிவஞான யோகிகளைப் போலவே புலமை வாய்ந்தவ ரென்பதும் உடன் படித்தவ ரென்பதும் இவருடைய கருத்து; இதனை அடிக்கடி எங்களிடத்தும் பிறரிடத்தும் இவர் சொல்லி வருவதுண்டு. சிவஞான யோகிகள் இயற்றிய செய்யுள் நூல்களிலும் வசன நூல்களிலும் மிக்க பயிற்சியுடையவ ராதலால் அவருடைய பயிற்சி உயர்ந்த தென்பதும், கச்சியப்ப முனிவர் அவருடைய மாணாக்க ரென்பதும் சுப்பிரமணிய தேசிகருடைய கருத்து.

இந்த விவாதம் நெடுநாளக நிகழ்ந்து வந்ததுண்டு. இரு திறத்தாரும் தம்பால் வந்தவர்களோடு பேசிக்கொள்வதே யன்றிச் சந்தித்த பொழுது நேரே பேசிக் கொண்டதில்லை. இவர், சிவஞான யோகிகளோடு கச்சியப்ப முனிவர் படித்தவ ரென்று பாடிவிடுவாரென நினைந்து, கச்சியப்ப முனிவரைச் சிவஞான யோகிகளுடைய மாணாக்கரென்று பாட வேண்டுமெனத் தேசிகர் இவருக்குத் தெரிவித்தார். அதற்கு இவருடைய மனம் உடன்படவில்லை. அது தெரிந்த தேசிகர் மடத்துப் புத்தகசாலையி லிருந்த பழஞ் சுவடி ஒன்றை எடுத்துவரச் செய்து அதில் கச்சியப்ப முனிவர் சிவஞான முனிவருடைய மாணாக்கரென்று குறிப்பிட்டிருத்தலை இவருக்குத் தெரிவிக்கச் செய்தார். அப்பால் இவர் தேசிகருடைய நோக்கத்தை அறிந்து அங்ஙனமே செய்வதாக ஒப்புக்கொண்டு அக்கருத்தை அமைத்துப் பாடுவாராயினர்.

அந்நூல் திருவாவடுதுறையில் தொடங்கப்பெற்றுத் திருவிடைமருதூருக்கு அசௌக்கிய நிவிர்த்திக்காக இவர் போயிருந்தபொழுதும் செய்யப்பட்டு வந்தது; நடுநாட்டு வருணனையிற் பத்துப் பாடல்கள் வரையில்தான் நடைபெற்றது; எழுதியவன் யானே. அப்பால் தேகத் தளர்ச்சி இவருக்கு அதிகரித்து வந்தமையால் மேலே செய்யப்படாமற் போயிற்று.

## சுப்பிரமணிய தேசிகர் திருவாவடுதுறைப் புராணம் இயற்றுவிக்க விரும்பியது

"திருவாவடுதுறைக்குச் சாமிநாத முனிவரென்பவராற் செய்யப்பெற்ற புராணம் ஒன்று உண்டு; இருந்தாலும் அதில் சிவஞான யோகிகளுடைய முறைப்படியே காப்பிய இலக்கணங்கள் அமைக்கப்பெறவில்லை. அம்முறையில் ஸ்தல புராணங்கள் பாடி வரும் பிள்ளையவர்கள் இந்தத் தலத்திற்குப் புராணம் இக்காலத்திற்கு ஏற்றபடி செய்தால் நாம் அதற்காகவும் இதுவரையில் இங்கிருந்து சிறப்பித்து வந்ததற்காகவும் மூன்று வேலி நிலங்கள் வாங்கித் தருவோம்" என்று சுப்பிரமணிய தேசிகர் சொல்லியனுப்பினர்; இவருக்கும் அங்ஙனம் செய்தலில் உடன்பாடே; அங்ஙனமே செய்யலாமென்றெண்ணியும் அசௌக்கிய மிகுதியால் அதனைப் பாடத் தொடங்கவில்லை.

## திருவிடைமருதூர் சென்றது

அப்பால் கால்வீக்கம், அடிவயிற்று வீக்கம், தோள்களின் மெலிவு, அன்னத்துவேஷம் முதலியவை அதிகரித்து இவரை வருத்தின. வந்து பார்த்த வைத்தியர்கள் அதனை இரத்த பாண்டு வென்னும் நோயென்று சொன்னார்கள். அந்நோயைப் பரிகரித்தற் பொருட்டுச் சுப்பிரமணிய தேசிகர் திருவிடைமருதூருக்கு இவரை அனுப்பி அங்கே யுள்ள கட்டளை மடத்திலேயே தக்க வசதி ஏற்படுத்தித் திருவிடைமருதூர் அரண்மனை வைத்தியர்களைக் கொண்டு பார்க்கும்படி செய்வித்தார்.

இவருக்கு இரவிற் பெரும்பாலும் நித்திரை இராது. அக்காலத்தில் பெரியபுராணம் முதலாகிய நூல்களிலுள்ள பாடல்களைப் படிக்கச் சொல்லியும் முத்துத்தாண்டவர், பாவநாச முதலியார், மாரிமுத்தா பிள்ளை முதலிய பெரியோர்கள் செய்த தமிழ்க் கீர்த்தனங்கள், அருணாசல கவிராயரியற்றிய இராமாயணக் கீர்த்தனம், நந்தன் சரித்திரக் கீர்த்தனம் முதலியவற்றைச் சொல்லச் சொல்லியும் கேட்டு இவர் பொழுது போக்குவார்.

நாளுக்கு நாள் இவருடைய நல்லுடல் மெலிவுறுவதை யறிந்து சுப்பிரமணியதேசிகர் திருவிடைமருதூருக்கு விஜயஞ் செய்து ஸ்வாமி தரிசனஞ் செய்துவிட்டு மடத்திற்கு வந்து இவரைப் பார்த்தனர்; அப்பொழுது இவர் திடுக்கிட்டு எழுந்து இரண்டு கைகளையும் சிரமேற் குவித்துக்கொண்டே ஒன்றும் பேசாமல் நின்றுவிட்டார். அவர் சற்றுநேரம் நின்று கவனித்து ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளும்படி அங்கேயுள்ளவர்களிடம் சொல்லிவிட்டுத் திருவாவடுதுறைக்குச் சென்றனர். ஆதீன கர்த்தர் இங்ஙனம் செய்வது வழக்கமல்லாமையால் எல்லோரும் வியப்புற்று இவர்பால் தேசிகருக்கு இருந்த நன் மதிப்பை நன்றாக அறிந்து பாராட்டினார்கள்.

## திருவாவடுதுறைக்கு வந்தது

வியாதி குணப்படாமையைத் தெரிந்து இவரைத் திருவாவடுதுறையிலேயே வந்திருக்கும்படி தேசிகர் இவருக்குத் திருமுகம் அனுப்பினர். அப்படியே இவர் திருவாவடுதுறைக்கு வந்துவிட்டார். பூஜை செய்வதற்கு முடியாமல் இவர் வருந்துவதை அறிந்த குமாரசாமித்தம்பிரான் நாள்தோறும் தம்முடைய பூஜையை முடித்துவிட்டு வந்து இவர் செய்துவரும் முறைப்படியே பூஜையை இவருடைய பார்வையிலேயே இருந்து செய்து பிரசாதத்தை அளித்து வந்தார்.

புதியவர்களாகப் பாடங் கேட்க வந்தவர்களுக்கு மாணாக்கர்களே பாடஞ்சொல்லி வந்தார்கள்; கடினமான பாகங்களைமட்டும் இவரிடம் கேட்டுத் தெளிந்துகொள்வார்கள். இரவில் இவர் தேவாரம் திருவாசகம் முதலியவற்றைப் படிப்பித்துக் கேட்டுவருவார்; கடினமான பதங்களைப் பற்றியோ விஷயங்களைப் பற்றியோ கேட்டால் சுருக்கமாக விடையளிப்பார்.

## மாயூரம் சென்றது

அப்பால் துலாமாதத்தில் தீபாவளிக்கு வரவேண்டுமென்று இவருடைய குமாரர் சிதம்பரம் பிள்ளை வந்து அழைக்கவே, மாயூரஞ் செல்லுவதற்கு இவர் புறப்பட்டார். அதனை யறிந்த சுப்பிரமணிய தேசிகர் தீபாவளி ஸ்நானம் செய்த பின்பு தரித்

துக்கொள்ளும்படி வழக்கம்போலவே அப்பொழுது இவருக்கும் உடனிருந்தவர்களுக்கும் வஸ்திரங்கள் கொடுத்து, மேனாப் பல்லக்கை வருவித்துச் சௌக்கியமாக அதிற் செல்லும்படி செய்வித்து, உடன் செல்லக்கூடியவர்களையும் அனுப்பினார். நான்மட்டும் இவருடைய கருத்தின்படியே திருவாவடுதுறையில் இருந்துகொண்டு இடையிடையே மாயூரஞ் சென்று பார்த்துவந்தேன்.

## திருவாவடுதுறைக்கு வந்தது

துலாமாதம் முடிந்த பின்பு மாயூரத்திலிருந்து மேனாவிலேயே இவர் திருவாவடுதுறைக்கு வந்தார். நானும் மற்றவர்களும் உடன் வந்துவிட்டோம்.

நோய் வரவர அதிகப்பட்டுக் கொண்ட வந்தது. வைத்தியர்கள் தக்க மருந்துகள் கொடுத்துவந்தும் அது தணியவேயில்லை. இவருக்கு விருப்பமுள்ள உணவுகள் இன்னவையென்று எனக்குத் தெரியுமாதலால், அக்காலத்தில் அவ்வூரில் இருந்த என் சிறிய தாயாரிடம் சொல்லி அவற்றைச் செய்வித்து எடுத்துச் சென்று இவருக்குக் கொடுத்துவந்தேன்; இவர் பிரியமாக உண்டு வந்தனர்.

## திருவாரூர்க் கோவை

இவர் இரவிலும் நித்திரை செய்யாமல் தளர்வுற்று இருத்தலையறிந்து ஒருவர் மாறி ஒருவர் இவரைக் கவனிப்பதற்கு விழித்துக்கொண்டே இருப்போம். அங்ஙனம் இருக்கும் நாட்களுள் ஒருநாள் ஓசையுண்டாகாமல் மெல்லப் படித்துக் கொண்டேயிருக்க நினைந்து திருவாரூர்க் கோவைச் சுவடியைக் கையில் வைத்திருந்தேன். அதை இன்ன நூலென்று அறிந்து முதலிலிருந்தே படிக்கும்படி இவர் சொன்னார்; அப்படியே படித்து வருகையில் அங்கங்கே யுள்ள செய்யுட்களின் நயத்தையும் நடையையும் அந்த நூலாசிரியருடைய குண விசேஷங்களையும் மெல்லப் பாராட்டிக்கொண்டே யிருந்தார்.

## ஐயங்களைப் போக்கியது

மற்றொருநாள் இரவில் அகத்தியத் திரட்டைப் படித்துக் கொண்டிருந்தேன். அதில் உள்ள, "தில்லைச் சிற்றம்பலம்"

என்னும் பதிகத்தில் 10-ஆவது செய்யுளில் வந்துள்ள 'ஊற்றத் தூர்' என்னும் ஸ்தலம் எங்குள்ள தென்று கேட்டபொழுது அது வைப்புஸ்தலங்களுள் ஒன்றென்றும் ஊட்டத்தூரென்று வழங்கப்படுகின்றதென்றும் அதிலுள்ள மூர்த்திக்குச் சுத்தரத் தினேசுவர ரென்பது திருநாம மென்றும் நாக்குக் குழறலுடன் சொன்னர். அப்பால், திருவாசகத்தில் திருக்கோத்தும்பி என்னும் பகுதியைப் படிக்கும்படி சொன்னர்; அதைப் படித்து வருகையில், "நோயுற்று மூத்துநா னுந்துகன்று யிங் கிருந்து" என்பதி லுள்ள 'நுந்துகன்றுய்' என்பதற்குப் பொருள் விளங்கவில்லை என்றேன். 'வெறுத்துச் செலுத்தப் பட்ட கன்றைப் போன்று,' என்று அதற்கு நாக்குழறலுடன் விடையளித்தார். அப்பொழு திருந்த இவருடைய நிலைமையை அறிந்து ஒன்றும் தோன்றுமல், "எவ்வளவோ அரிய விஷயங் களை எளிதிற் சொல்லும் பெரியாரை அடுத்திருந்தும் இது வரையில் விசேஷமாக ஒன்றும் தெரிந்துகொள்ளாமல் இருந் தோமே; இனி அரிய விஷயங்களை யார் சொல்லப்போகி ருர்கள்!" என்ற மன வருத்தத்துடன் இவரைக் கவனித்துக் கொண்டே இருந்தேன்.

மாயூரத்தி லிருந்து இவருடைய தேவியாரும், குமாரரும் இவருடைய தேக நிலையை அறிந்து திருவாவடுதுறைக்கு வந்து ஸ்திரமாக இருந்து கவனித்துக்கொண்டு வந்தார்கள்.

### சுப்பிரமணிய தேசிகர் விசாரித்துக்கொண்டே இருந்தது

இவருடைய அசௌக்கிய மிகுதியைத் தெரிந்து சுப்பிர மணிய தேசிகர் அடிக்கடி பார்த்துவரும்படி தக்கவர்களை அனுப் பித் தெரிந்துகொண்டேயிருந்ததன்றி அவ்வப்போது வந்து சொல்லும்படி எனக்கும் கட்டளையிட்டிருந்தார். அப்படியே நான் சென்று இவருடைய நிலையைத் தெரிவித்துக்கொண்டு வந்தேன்.

தை மாதம் 20-ஆம் தேதி மங்களவாரம் (1-2-1876) காலை யிலிருந்து இவருக்குத் தேகத்தளர்ச்சி முதலியன அதிகரித் துக்கொண்டே வந்தன. நானும் சவேரிநாத பிள்ளை முதலிய சிலரும் இவரைக் கவனித்துக் கொண்டு அயலிலே இருந் தோம். பால் மட்டும் சிறிது சிறிதாகக் கொடுத்து வந்தோம்.

அன்றைத்தினம் கோயிலில் ஐந்தாம் திருவிழாவாதலால் ஸ்ரீ கோமுத்தீசுவரர் ரிஷபாரூடராகத் திருவீதிக்கு எழுந்தருளினார். இவருடைய குறிப்பின்படி நாங்கள் தேங்காய் பழம் கற்பூரம் முதலியவற்றை எடுத்துக்கொண்டு சென்று தீபாராதனை செய்வித்து ஆதிசைவர் கொடுத்த விபூதிப் பிரசாதத்தைக் கொணர்ந்து இவர்பாற் சேர்ப்பித்தோம். அதை இவர் மெல்ல வாங்கித் தரித்துக்கொண்டார்.

## சிவபதம் அடைந்தது

இரவு பதினைந்து நாழிகைக்கு மேற்பட்டு இவருக்கு நினைவுத் தப்பும் தேகத்தில் ஒரு துவட்சியும் உண்டாயின. அதனையறிந்த சவேரிநாத பிள்ளை இவருடைய பின்புறத்திற் சென்றிருந்து இவரைத் தம்முடைய மார்பிற் சார்த்தி ஜாக்கிரதையாகப் பிடித்துக் கொண்டார். அப்பொழுது சில நாழிகை வரையில் இவருக்கு நினைவு இல்லை; சிலநேரம் கழித்து நினைவு வந்தது. உடனே திருவாசகத்தில் ஏதேனும் ஒரு பாகத்தைப் படிக்கவேண்டும் என்னும் குறிப்போடு, "திருவா" என்றார். அக்குறிப்பை அறிந்து அப்புத்தகத்தை எடுத்து வந்து அடைக்கலப்பத்தை வாசித்தேன்: கண்ணை மூடிக் கொண்டே இவர் கேட்டு வந்தார். அப்பொழுது இவருக்கு உடலில் ஓர் அசைவு உண்டாயிற்று. உடனே நாங்கள் சமீபத்திற் சென்றபொழுது வலக்கண்ணைத் திறந்தார். அதுதான் ஸ்ரீ நடராஜமூர்த்தியினுடைய குஞ்சித சரணத்தை இவர் அடைந்த குறிப்பாக எங்களுக்குத் தோற்றியது. அப்போது இவருக்குப் பிராயம் 61. அந்தச் சமயத்தில் இவருடைய சரீரத்தைச் சார்த்திக்கொள்ளும் பாக்கியம் பெற்றிருந்த சவேரிநாத பிள்ளை அந்த நல்லுடலை உடனே படுக்கையிற் கிடத்தி விட்டு மற்றவர்களோடு புலம்பிக்கொண்டே அயலில் நின்றார். இவருடைய தேவியாரும் குமாரரும் மற்ற உறவினரும் கண்ணீர் விட்டுப் புலம்பினார்கள். அங்கேயிருந்த எல்லோருக்கும் உண்டான வருத்தத்திற்கு எல்லையே இல்லை,

## அபரக்கிரியை

இக்கவிரத்தினம் மண்ணுலக வாழ்வை நீத்த செய்தி ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருக்குத் தெரிந்தது. காளிதாசன் இறந்

தது கேட்டுப் போஜன் வருந்தியதைக் கதைகளில் கேட்டிருக்கிறோம். அந்தக் காட்சி இப்படித்தான் இருந்திருக்குமென்று எண்ணும்படியான நிலையில் தேசிகர் இருந்தார். தாமே அறிந்து ஸ்ரீ அம்பலவாண தேசிகரிடம் பலபடியாக இவருடைய நல்லாற்றலைத் தக்கவாறு எடுத்துக்கூறி ஆதீன வித்துவானகச் செய்தது முதல் இறுதிக் காலம் வரையில் பலவகையாலும் இக் கவிச்சக்கரவர்த்தியினுடைய குணங்களையும் புலமைத் திறனையும் நன்றாக அறிந்து அறிந்து இன்புற்றவர் அவரே. பிள்ளையவர்களுடைய உண்மையான பெருமையை அவரைப்போல அறிந்தவர்கள் வேறு யாவர்? தம்முடைய அவைக்களத்தை அலங்கரித்து மடத்திற்குத் தமிழ் வளர்த்த பெரும்புகழை உண்டாக்கிய இந்த மகாவித்துவானுடைய பிரிவைப் பொறுப்ப தென்பது அவரால் இயலுவதா?

அன்று குருபூசைத் தினமாதலின் சுப்பிரமணிய தேசிகர் கவனிக்க வேண்டிய பல காரியங்கள் இருந்தன. அவைகளில் அவர் மனம் செல்லவில்லை. அவருடைய முகம் அன்று மலர்ச்சியின்றியே யிருந்தது.

மிக்க வருத்தத்தோடு இருந்தும், தேசிகர் மேலே முறைப்படி மறுநாட் காலையில் நடக்கவேண்டிய அபரக் கிரியைகளை விரிவாக நடத்தும்படி மடத்துக் காரியஸ்தர்களுக்குக் கட்டளையிட்டனுப்பினர். காலையில் அதிர்வெடிகள் போடப்பட்டன. திருக்கோடிகா, திருத்துருத்தி, திருவிடைமருதூர் முதலிய ஊர்களிலிருந்து அபிஷிக்தப் பெரியார்கள் பலர் வருவிக்கப் பட்டார்கள்.

மற்றவர்களுக்கு நடக்கும் முறையிலும் செலவிலும் அதிகப்பட நடத்தி இவருடைய திவ்ய சரீரத்தை விபூதி ருத்திராக்ஷங்களால் அலங்கரித்து எடுப்பித்துக்கொண்டு செல்லத் தொடங்கியபொழுது இவருடைய மாணாக்கர்களாகிய தம்பிரான்கள் மடத்து முகப்பில் வரிசையாக வந்து நின்று கண்ணீரை வீழ்த்திக்கொண்டே கலங்குவாராயினர். வடமொழி வித்துவான்களாகிய அந்தணர்களின் கூட்டத்திலிருந்து, "தமிழ்க் காளிதாசா! தமிழ்க் காளிதாசா!" என்ற சப்தமும், தமிழ் வித்துவான்கள் வாக்கிலிருந்தும் அயலூரிலிருந்து வந்திருந்த இவர்

மாணாக்கர் கூட்டத்தி லிருந்தும், "கவிச்சக்கரவர்த்தியே! தமிழ்க் கடலே! எங்களுக்கு அரிய விஷயங்களை இனி யார் அன்புடன் சொல்வார்கள்! யாரிடத்தில் நாங்கள் செல்லு வோம்! எங்களைக் கவனிப்பார் யார்!" என்ற ஒலியும், வேறொரு சாராரிடத்திருந்து, "குணக்கடலே! சாந்த சிரோ மணீ!" என்ற சப்தமும், பொதுவாக மற்ற யாவரிடத்திலிருந் தும், "ஐயா! ஐயா!" என்ற சப்தமும் உண்டாயின. உடன் சென்ற அபிஷிக்தர்கள் திருவாசகம் சொல்லிக்கொண்டு போகையில், "இனிமேல் திருவாசகத்திற்கு மிகவும் தெளிவாக வும் அழகாகவும் யார் பொருள் சொல்லப் போகிறார்கள்?" என்று என் தந்தையார் முதலிய பலர் சொல்லி மனம் உருகினார்கள். உடன் சென்ற கூட்டம் மிக அதிகம்.

இவ்வண்ணம் திருக்கோயிலுக்கு வடக்கே யுள்ள மருதமரச் சாலை வழியே சென்று காவிரிக் கரையி லுள்ள ருத்திர பூமியை அடைந்தவுடன் இவருடைய தேகம் சந்தனக்கட்டை, பரிமளத் தைலம் முதலியவற்றோடு அமைக்கப்பட்ட ஈமப்பள்ளியில் வைத்துச் சிதம்பரம் பிள்ளையால் விதிப்படி தகனம் செய்யப் பெற்றது.

மாணாக்கர்களாகிய நாங்கள் அடைந்த வருத்தம் இங்கே எழுதி அடங்குவதன்று; செயலழிந்திருந்தோம். "உடலெ லாம் உயிரிலா எனத்தோன்று முலகம்" என்றபடி அவ்வூரா ரும் வந்தோர்களும் செயலற்று மிக்க வாட்டத்துடன் இருந்தார்கள்.

அப்பால் ஸ்நான முதலியவற்றை முடித்துக்கொண்டு மீண்டு வந்து நான் திருவாரூர்த் தியாகராச லீலையைக் கையில் வைத்துக்கொண்டு அதிலுள்ள அருமையான செய்யுட்களைப் படித்துப் படித்துப் பொருள் நயங்களை அறிந்து கண்ணீர் வீழ்த்திக்கொண்டே பகல் ஒரு மணிவரையில் இருந்து விட்டேன்; ஆகாரத்திற் புத்தி செல்லவில்லை. மற்றவர்களும் அப்படியே இருப்பவர்களாகி இவர் இயற்றியவற்றுள் தத் தமக்குப் பிரியமான ஒவ்வொரு நூலைப் பார்த்துக்கொண்டே இருந்து வருந்துவாராயினர்.

சுப்பிரமணிய தேசிகர் தம்மைச் சூழ்ந்திருந்த பலரிடம் பிள்ளையவர்களுடைய குணங்களையும் கல்விச் சிறப்பையும்

பற்றிப் பாராட்டியும் பிரிவைப் பற்றி வருத்தமுற்றும் பேசிக் கொண்டிருந்தனர்; "தேசாந்தரங்களிலெல்லாம் பிள்ளையவர்களுடைய பெரும் புலமைத் திறம் புகழப்படுகிறது. அவர்கள் பெயரோடு நமது மடத்தின் பெயரும் விளங்குகின்றது. அந்தப் புலவர்மணியின் ஆற்றல் இந்த மடத்தை எல்லோருக்கும் உரிய கல்வி நிலயமாகச் செய்தது. வைதிகமதஸ்தர்களும் பல வகைச் சாதியினரும் தமிழ் நூல்களைத் தடையின்றிப் பாடஞ் சொல்லும் அவர்களை எண்ணி எண்ணி இங்கே வந்தனர். நமது மடத்துக்கும் கௌரவத்தை அளித்தார்கள். முன் பழக்கமில்லாத எத்தனையோ உத்தியோகஸ்தர்களும் வேறு வகையான பிரபுக்களும் இந்த மடத்திற்கு வந்திருக்கிறார்கள். எல்லாம் அவர்களால் வந்த பெருமையே. பணமும் இடமும் அதிகாரமும் சாதியாத எவ்வளவோ காரியங்களை மடத்திற்காக அவர்கள் சாதித்து உதவியிருக்கிறார்கள். அவ்வளவுக்கும் இந்த மடத்திலிருந்து அவர்கள் பெற்ற பயன் சிறிதளவேயாகும். எங்கே இருந்தாலும் அவர்கள் தம்முடைய தமிழரசாட்சியை நடத்தியிருப்பார்கள். அதற்கு இம்மடத்தை அமைத்துக்கொண்டது ஆதீனத்தின்பாலுள்ள அபிமானமே. இந்த ஆதீன குல தெய்வமென்று சொல்லப்படுகிற சிவஞான முனிவர் முதலிய பெரியோர்களால் இவ் வாதீனம் தமிழ்க் கல்வியில் மிக்க சிறப்பை அடைந்ததாயினும் மடத்திலிருந்தே பாடம் சொல்லித் தமிழை விருத்தி செய்யவில்லையே என்ற குறை இந்த மடத்திற்கு இருந்து வந்தது. அக் குறை பிள்ளையவர்களாலேதான் தீர்ந்ததென்பதை நாம் சொல்ல வேண்டுமா? இனிமேல் அத்தகைய உபகாரிகள் எங்கே பிறக்கப் போகிறார்கள்! 'பிள்ளையவர்களைப் பார்க்கும்படி செய்விக்க வேண்டும்' என்று இங்கே வந்தவர்களெல்லாம் சொல்லச் சொல்லக் கேட்டுக் குளிர்ந்த இந்தச் செவிகள் இனிமேல் எதைக் கேட்கும்! பெரிய மனிதர்கள் வந்த காலத்திலும் சிறந்த வித்துவான்கள் வந்த காலத்திலும் சமயத்துக்கு ஏற்றபடியும் நம்முடைய உள்ளக் கருத்துக்கு ஒத்தபடியும் அரிய இனிய செய்யுட்களை விரைவிற் செய்து மகிழ்விக்கும் அவர்களுடைய திறமையை வேறு யாரிடம் பார்க்கப் போகிறோம்! எவ்வளவு பெரிய சபையிலும் அவர்கள் அங்கே நிகழும் நிகழ்ச்சியைச் சிறப்பித்துக் கவியொன்று கூறி

விட்டால் சபையோருக்கு உண்டாகும் குதூகலமும் நமக்கு உண்டாகும் ஆனந்தமும் இனிமேல் எங்கே வரப்போகின்றன! அவர்களுடைய கவியானது, சபை நிகழ்ச்சியின் முடிவில் மகுடம் சூட்டியதுபோல விளங்குமே! அவர்களிடம் மதிப்புள்ள எத்தனை பேர் தம்மாலான அனுகூலங்களை மடத்திற்குச் செய்திருக்கிறார்கள்! 'திருவாவடுதுறை ஆதீனம் செந்தமிழ்ச் செல்வியின் நடனசாலை' என்று பிற்காலத்திலும் யாவரும் கூறும் வண்ணம் செய்வித்த அவர்கள் இல்லாத குறை இனி என்றைக்கு நீங்குமோ தெரியவில்லை."

"வந்தவர்களில் அவர்கள் குணத்தைக் கண்டு வியவாதவர்களே இல்லை. என்ன அருமையான குணம்! நாமும் தினந்தோறும் எவ்வளவோ வித்துவான்களைப் பார்த்துக் கொண்டே வருகிறோம். சிறிது படித்திருந்தால் எவ்வளவு தருக்கு வந்துவிடுகிறது! இப்பொழுது தமிழ்நாட்டிலுள்ள தமிழ்ப்புலவர்களுக்கெல்லாம் தலைவராக விளங்கிய அவர்கள் அலையற்ற கடல்போல அடங்கியிருந்த ஆச்சரியத்தை என்னவென்று சொல்வோம்! அவர்கள் தம்முடைய ஆற்றலைத் தாமே புகழ்ந்துகொண்டதை யாரேனும் கேட்டிருக்கிறார்களா? அத்தகைய குணக்குன்றை இனிமேல் எங்கே பார்க்கப்போகிறோம்! மிகச் சிறந்த பண்டிதராகிய ஆதீனவித்துவான் *தாண்டவராயத் தம்பிரானவர்கள்கூட 'இவர்களைப்போல் யாரும் இல்லை' என்று வியக்கும் புலமையும் இயல்பும் உடைய அவர்களுக்கு ஆயுள் மாத்திரம் இவ்வளவினதாக அமைந்ததை நினைந்து நினைந்து வருந்துவதை யன்றி நாம் என்ன செய்ய முடியும்? ஸ்ரீ நமச்சிவாய மூர்த்தியின் திருவருள் இவ்வளவுதான்

---

* ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருக்குந் தாண்டவராயத் தம்பிரானவர்கள்பால் சிறந்த மதிப்பும் அன்பும் உண்டு; "நாம் வழிபடு தெய்வம் பிரத்தியட்சமாகி என்ன வேண்டுமென்று கேட்டால் தாண்டவராயத் தம்பிரானவர்களை நாம் பார்க்கும்படி செய்யவேண்டுமென்று கேட்போம்" என்று அவர் சொல்வதுண்டு. அத்தகைய மதிப்புடைய தாண்டவராயத் தம்பிரானவர்கள் பாராட்டத்தக்க புலமைத்திறம் பிள்ளையவர்கள்பால் இருந்தமையால்தான் தேசிகர் இவரிடத்து மிக அதிகமாக ஈடுபட்டார்.

போலும்! கவித்துவ சக்தியை நேரிற் காணமல் யாராவது கேட்டால் உண்மையென்று நம்பமுடியாதபடி அவ்வளவு ஆச்சரியமாகப் பாடும் அந்த மகாகவியைத் தமிழ் மொழி இழந்த நஷ்டத்தை நீக்குதற்கு இனி யாரால் முடியும்? இனி நமக்குப் பொழுது போவது எவ்வாறு?" என்று அவர் பலவாறு சொல்லிக்கொண்டே இருந்தனர்.

பிள்ளையவர்கள் சிவபதமடைந்த தினத்தைப் புலப்படுத்தித் தில்லைவிடங்கன் வெண்பாப் புலி வேலுச்சாமி பிள்ளை யென்பவர்.

> "மன்னும் யுவவருட மாதந்தை முன்பக்கம்
> உன்னும் பிரதமைமா லோண நாள்—மின்னும்
> துருவுப்புகழ் மீனுட்சி சுந்தரநம் மேலோன்
> திருவுருவ நீங்கு தினம்"

என்னும் வெண்பாவை இயற்றினர். மற்றும் பலவகையினரும் கடிதங்கள் மூலமாகவும், நேரில் வந்தும், இரங்கற் பாக்கள் பல பாடியும் தம் தம் ஆராமையைப் புலப்படுத்தினர்.

கிரியைகளெல்லாம் முடிந்த பின்பு சுப்பிரமணிய தேசிகர் இவருடைய குடும்ப நிலையைப் பற்றி விசாரித்து, ரூ. மூவாயிரத்துக்கு மேற்பட்டுக் கடன்கள் இருப்பதாக அறிந்து, அவற்றைத் தீர்ப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து தீர்த்து வைத்தார்.

சிதம்பரம் பிள்ளையினுடைய குடும்பம் வரவரப் பெருகிவிட்டமையினல் செலவு அதிகரிக்கவே குடும்பம் தளர்ச்சியை அடைந்தது. அதனை அவர் மடத்திற்குத் தெரிவிக்கவில்லை. வேதநாயகம் பிள்ளை அதனை அறிந்து அந்தத் துயரத்தை நீக்கியருளவேண்டுமென்று சுப்பிரமணிய தேசிகருக்கு எழுதியனுப்பினர். அதன்மேல் தேசிகர் சிதம்பரம் பிள்ளையை வருவித்து விசாரித்து, அவருக்கு வேண்டிய அநுகூலங்களைச் செய்வித்து அனுப்பினர். பின்பும் பிள்ளையவர்களுடைய அன்பர்கள் பலர் உதவியால் சிதம்பரம்பிள்ளை குடும்பத்தை ஒருவாறு நடத்தி வந்தார்.

———

# 11. இயல்புகளும் புலமைத் திறனும்

## தோற்றம்

பிள்ளையவர்களுடைய சரீரம் மாநிற முடையது. இவர் நல்ல வளர்ச்சி யமைந்த தோற்றமுடையவர். இவரைப் பார்த்த மாத்திரத்தில் யாரும் 'சிறந்த தகுதியுடையவர்' என்று எண்ணுவர். நெற்றியின் அகலமானது இவருடைய அறிவைப் புலப்படுத்தும். கைகள் முழங்கால்வரையில் நீண்டிருக்கும். வலக்கையில் உள்ளங்கையி லிருந்து நடுவிரலின் மத்தியில் ஊடுருவிச் செல்லும் ரேகை ஒன்று உண்டு. அது வித்தியாரேகை யென்றும் அதனை யுடையவர்கள் சிறந்த கவிஞர்களாகவும் நல்ல ஞாபக சக்தியுடையவர்களாகவும் இருப்பார்களென்றும் அத்தகையவர்களைக் காண்டல் அரிதென்றும் அறிஞர் கூறுவர். உள்ளங்கையானது பூவைப் போன்று மிகவும் மென்மையுடையதாக இருக்கும். "எத்தகைய வறுமை நிலையை அடைவதாயிருந்தாலும் ஆகார விஷயத்தில் எந்த இடத்திலும் இவருக்கும் இவரைச் சார்ந்தவர்களுக்கும் யாதொரு குறைவும் வராது" என்று சாமுத்திரிகா லட்சணம் தெரிந்தோர் கூறுவதுண்டு. நான் பழகியபோது இவர் பருத்த தேகம் உடையவராக இருந்தார். தலையில் சிறிய குடுமி உண்டு. இளமையிலிருந்ததைவிட முதுமையில் பருத்த தேக முடையவராக ஆயினரென்று இவருடன் பழகியவர் சொல்லுவர்.

காட்சிக்கு எளிமையும், பணிவும், சாந்தமும் இவர்பா லுள்ளன வென்பதை இவரைக் கண்டவுடன் அறியலாம். ஆழ்ந்த அறிவும் இணையற்ற கவித்துவமும் வாய்க்கப்பெற்றிருந்தும், அலைகளெல்லாம் அடங்கி ஒலியற்றிருக்கும் ஆழ்ந்த கடலைப் போல் அறிவின் விசித்திர சக்தியெல்லாம் கண்டவுடன் அறிய முடியாவண்ணம் அடங்கியிருக்கும் தோற்றமுடையவராக இவர் இருந்தார்.

இடையில் ஆறுமுழ நீளமும் மூன்றுமுழ அகலமும் உள்ள தூய வெள்ளை உடை, ஆறுமுழ நீளமுள்ள மேலாடை, உதர பந்தனமாக ஒரு சிறிய சவுக்கம் ஆகிய இவ்வளவே இவர்

எக்காலத்தும் அணியும் ஆடைகள். உடையை மூலகச்சமாக உடுத்திக் கொள்வார். முன்னும் பின்னும் கௌரிசங்கர முள்ள ருத்திராட்ச கண்டியைத் தரித்திருப்பார். இவருடைய கையில் ஊன்றிச் செல்வதற்குரிய பிரம்பு ஒன்று இருக்கும். நடந்து செல்லுங்காலத்தில் வலக்கையால் வஸ்திரத்தின் மூலையைப் பற்றிக்கொண்டு நடப்பார். இடையின் வலப்புறத்தில் நன்றாக வடிக்கட்டிய விபூதி நிறைந்த வெள்ளிச் சம்புடம் ஒன்றும் இவர் உடையிற் செருகப்பட்டிருக்கும். காலில் ஜோடு போடுவ துண்டு; ஆனால் திருவாவடுதுறையில் மட்டும் இவர் அவற்றை உபயோகிப்பதில்லை. யானை போன்ற அசைந்த மெல்லிய நடையை உடையவர் இவர். அளவாகவும் மென்மை யாகவும் நிறுத்தியும் பேசுவார். திடீரென்று அதட்டிப் பேசு தலும் கோபமாக இரைந்து பேசுதலும் இவர்பால் இல்லை.

### வழக்கங்கள்

விடிய நான்கு நாழிகைக்கு முன் எழுந்திருப்பது இவர் வழக்கம்; உடனே ஒரு நாழிகைவழித் தூரத்திற்குக் குறையா மல் நடந்து சென்று தந்தசுத்தி முதலியவற்றைச் செய்து அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு வருவார். அப்பொழுது உடன் செல்பவர்களுடன் தமிழ் நூல்களி லுள்ள செய்யுள் நயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டே நடப்பார். தம்முடன் உறையும் மாணாக்கர்கள் விழித்து எழுந்து வாராவிட்டால், அவர்கள் எழுந்து வரும் வரையில் *பழந்தமிழ்ச் செய்யுட்களைச் சொல்லிக்கொண்டே வீட்டு வாயிலில் உலாத்துவார்; அவர் களைத் தாமாக எழுப்புவதில்லை.

நான் பழகிவந்த காலத்தில் இவர் பெரும்பாலும் வெந் நீரிலேயே ஸ்நானம் செய்துவந்தார். நல்ல புல்தரைகளையும் சோலைகளையும் ஆற்றின் கரைகளையும் பார்ப்பதில் இவருக்கு மனமகிழ்ச்சி உண்டு. கோடைக்காலத்தில் பிற்பகலிற் சென்று

---

* இங்ஙனம் சொல்லும் செய்யுட்களில் திருச்சிற்றம்பலக் கோவையாரி லுள்ள 'சிலம்பணிகொண்ட' என்பதும், புகலூரந்தாதி யிலுள்ள 'தொழுந் துதிக்கைக்கு' என்பதும் எனக்கு ஞாபகத்தில் இருக்கின்றன.

ஆறுகளில் ஊற்றுத் தோண்டி இறைப்பித்துச் சுத்தமான அந்த ஊற்றைப் பார்த்தலிலும் அதில் ஆடையைத் துவைக்கச் செய்தலிலும் துவைத்த ஆடைகளைக் கொய்து ஊற்றின் குறுக்கே போடுவித்து ஊறவைத்தலிலும் இவருக்கு விருப்பம் அதிகம். அந்த ஊற்றுக்களைப் பார்த்துக்கொண்டே வழக்கமாகச் செய்யும் செய்யுட்களை இயற்றுவது முண்டு. ஒருமுறை நான்கு ஊற்றுக்களைப் போடுவித்து அவற்றைப் பற்றி நான்கு செய்யுட்கள் இயற்றினர்.

வண்டியிற் போவதைவிட நடப்பதில் இவருக்கு விருப்பம் அதிகம். வண்டியிற் பிரயாணம் செய்யும்போது சில சமயங்களில் சில மாணாக்கர்களை வண்டியிலேயே இருக்கச்செய்து தாம் இறங்கிச் சிலருடன் நடந்து வருவார்; அப்போது அங்கங்கே உள்ள இயற்கைக் காட்சிகளைக் கண்டு இன்புறுவார்.

உட்கார்ந்து பாடஞ் சொல்லும்பொழுது மடியில் ஒரு திண்டை வைத்து அதன்மேல் கைகளை மடக்கி வைத்துக்கொண்டே சொல்வார். மடத்தி லிருந்து பாடம் சொல்லும்பொழுது திண்டை வைத்துக்கொள்வதில்லை. கைகளைக் கட்டிக்கொண்டே சொல்வது வழக்கம். ஆறுமணி நேரம் வரையில் காலைப் பெயர்த்து வையாமல் அமர்ந்தபடியே யிருந்து பாடம் சொல்வார். எந்த வகையான செய்யுளையும் * ஒரே வகையான இசையிலேதான் சொல்வது இவருடைய வழக்கம்.

## உணவு

காலையில் எவ்வித உணவையும் இவர் உட்கொள்ளுவதில்லை. தினந்தோறும் பகலில் பூசை பண்ணியபின்பே உண்பார். இரண்டு வேளையே உணவு கொள்வார். மிளகு சேர்த்த உணவு வகைகளிலும் கீரை வகைகளிலும் சித்திரான்னங்களிலும் புளி சேர்த்துச் செய்த அரைக்கீரை உணவிலும் நறு நெய்யிலும் மாம்பழத்திலும் தேங்காய் வழுக்கையிலும் இவருக்கு விருப்பம் உண்டு. இரவில் சீனாக்கற்கண்டு சேர்த்துக் காய்ச்

* அவ்வகையான இசையைத் திருச்சிராப்பள்ளியிலும், அந்நகரைச் சார்ந்த இடங்களிலும் பெரும்பாலோரிடத்தில் அக்காலத்திற் கேட்கலாம். தியாகராச செட்டியார் பிள்ளையவர்களைப்போல அந்த இசையோடுதான் செய்யுட்களைச் சொல்லுவார்.

சிய பாலை உண்டு படுப்பார்; பாலுண்ணுதல் ஒருநாளும் தவறியதே யில்லை; திருவாவடுதுறையில் இருக்கும்பொழுது இரண்டு சேர் பால் இவருக்கு மடத்திலிருந்து அனுப்பப்படும்; ஒரு சேரைத் தாம் உண்டு மிகுதியை உடன் இருப்பவர்களுக்குக் கொடுத்துவிடுவார்.

## குணங்கள்

இவருடைய அரிய குணங்களுள் பொறுமை, திருப்தி, தம்மை வியவாமை, பிறருடைய குற்றத்தைக் கூறாமை, பிறரைப் பாராட்டல், இரக்கம், நன்றியறிவு, சிவபக்தி, மாணாக்கர்பால் அன்பு முதலியவற்றைச் சிறப்பாகச் சொல்லலாம்.

## பொறுமை

இவர்பால் அமைந்திருந்த சாந்தகுணமே மாணாக்கர்களையும் பிறரையும் இவர்பால் இழுத்தது. பிறர் தம்மை அவமதித்தாலும் பிறரால் தமக்கு இடையூறுகள் நேர்ந்தாலும் பொறுத்துக்கொண்டிருக்கும் இவருடைய இயல்பை அறிந்து வியந்தவர்கள் பலர். தியாகராச செட்டியார் முதலியோர் சில சமயங்களில் இவர் மேற்கொண்ட பொறுமைக்காக இவரைக் குறை கூறியது முண்டு. யாரேனும் கடுமையாகப் பேசினால் எதிர்த்து ஒன்றும் கூறாமல் உடனே எழுந்து சென்றுவிடுவார். யாரிடத்தும் விரோதம் பாராட்டக்கூடாதென்பது இவர் கொள்கை. தம் கொள்கைக்கு மாறுபாடுடையவர்களானாலும் தமக்குப் பல இடையூறுகளைச் செய்தவர்களானாலும் அவர்களோடு பழக நேர்ந்தால் எல்லாவற்றையும் மறந்து அன்புடன் பழகுவார்; அவர்களுக்கு உதவியும் செய்வார். இவருடைய வாழ்க்கையில் வறுமையினாலும் பிறருடைய அழுக்காற்றாலும் இவருக்கு நேர்ந்த இடையூறுகள் பல. அவற்றை யெல்லாம் பொறுமையால் வென்று புகழோடு விளங்கினார்.

## திருப்தி

பணத்திற்கு அடிமையாக இராமல் பணத்தை இவர் அடிமையாக்கினார். எவ்வளவு வறிய நிலையில் இருந்தாலும் தம் கொள்கைக்கு விரோதமான எதையும் செய்யாத வீரம் இவர்பால் இருந்தது. வறுமையால் துன்பமுறுகையில் தமது

விவேகத்தால் அத்துன்பத்தை இன்பமாக எண்ணி வாழ்ந்து வந்தார். இவரைக்கொண்டு தாம் பொருள் வருவாய் பெறலாமென்றெண்ணிப் பாடசாலை வைக்கலாமென்றும் புஸ்தகங்கள் பதிப்பிக்கலாமென்றும் வேறு வகைகளிற் பொருள் ஈட்டலாமென்றும் பலர் அடிக்கடி வந்து வந்து இவர்பால் கூறிய துண்டு. அவற்றிற்கு இவர் செவிகொடுக்கவேயில்லை. இவர் நினைத்திருந்தால் எவ்வளவோ செல்வத்தைப் பெற்றுப் பின்னும் சிறந்த நிலையில் இருந்திருக்கலாம். உள்ளதே போதுமென்ற திருப்தியே அத்தகைய முயற்சியில் இவரைச் செலுத்தாமல் இருந்தது. இவர் ஒருவார்த்தை சொல்லியிருந்தால் இவருக்குத் தெரிந்த பிரபுக்களிற் பலர் இவரைப் பெருஞ்செல்வராகச் செய்திருப்பார்கள். அவர்களிடம் தம் நிலையைக் கூறுதலை இவர் நினைத்தும் அறியார். கல்விச் செல்வத்தையன்றி வேறு செல்வத்தை இவர் மதியார்.

## தம்மை வியவாமை

தம்மை வியத்தலென்னும் குற்றம் இவர்பால் ஒரு பொழுதும் காணப்படவில்லை. இவர் தமிழ் நூலாசிரியராக இருந்து செய்தற்கரிய பல செயல்களைச் செய்திருந்தாலும் அவற்றைப் பற்றித் தாமே பாராட்டிக்கொண்டதை யாரும் இவர்பால் ஒரு போதும் கண்டிலர்.

## பிறருடைய குற்றத்தைக் கூறாமை

பிறருடைய குற்றங்களை இவர் எடுத்துக் கூறமாட்டார். ஒரு நூலாசிரியரிடமோ உரையாசிரியரிடமோ ஏனைப் புலவர்களிடமோ குற்றங்கள் காணப்படின் அவற்றை இவர் பெரும்பாலும் வெளியிடார்; வெளியிட்டாலும் குற்றமென்று பிறர் கருதாதவாறு பக்குவமாகச் சொல்லுவார்; யாரேனும் குற்றமென்று வலிந்து சொல்வாராயின் சமாதானம் சொல்லிப் பின்பு அவரை அவ்வாறு சொல்லாத வண்ணம் செய்விப்பார்.

## பிறரைப் பாராட்டல்

பிறரைப் பாராட்டுதலும் பிற கவிஞர்களுடைய செய்யுட்களைப் போற்றுதலும் தம்பால் வந்தவர்கள் கல்வியறிவிற் குறைவுடையவர்களாக இருந்தாலும் அவர்களுடைய செய்யுட்

களைப் பாராட்டி ஆதரித்து ஊக்கமளித்தலு மாகிய இவருடைய நற்குணங்கள் யாவரையும் இவர்பால் இழுத்தன. தமக்குப் புலப்படாத ஒரு கருத்து எவ்வளவு சிறிதாயினும் அதனை யார் கூறினும் அங்ஙனம் கூறியவருடைய நிலையைக் கருதாமல் இவர் மிகவும் பாராட்டுவார்; இவரால் அங்ஙனம் பாராட்டப் பெற்ற பின்பு அவர்களுக்கு ஒரு தனி மதிப்பு உண்டாகும்.

## இரக்கம்

பிறருடைய துயரைக் கண்டவிடத்து இரங்கும் உள்ள முடையவர் இவர். தமக்குக் குறைபாடிருப்பினும் பிறருக்குள்ள குறைபாடுகளை நீக்கும் தன்மையினர்; "தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம், வெங்குறை தீர்ப்பிக்கும் விழுமி யோர்" இவர்.

## நன்றி மறவாமை

பிறர் செய்த நன்றியை மறவாமற் பாராட்டும் தன்மை இவருடைய குணங்களில் தலைசிறந்து விளங்கியது; "தினைத் துணை நன்றி செயினும் பனைத்துணையாக் கொள்வர்" என் னும் அருமைத் திருக்குறளுக்கு இலக்கியமாக இவர் இருந் தனர். பிறருடைய உதவியைப் பெற்றவுடன் நன்றியறிவி னால் மனங்கசிவதில் இவரை ஒப்பார் யாரும் இல்லையென்றே சொல்லலாம். அந்த உணர்ச்சி, அவ்வப்பொழுது உபகாரி களை இவர் பாராட்டிய செய்யுட்களில் வெளிப்பட்டிருத்தலைக் காணலாம். கொடுத்தாற் புகழ்தலும் கொடாவிடின் இகழ்தலு மாகிய புன்செயல்கள் இவர்பால் இல்லை. மனிதரைப் புகழ்வது பிழையென்று சிலர் கூறுவதுண்டு. ஒன்றை எதிர்பார்த்து ஒருவரைப் புகழ்தலும், எதிர்பார்த்தபடி கிடைக்காவிடின் வெறுத்தலும் பிழையெனவே இவர் கருதிவந்தார். "ஒவ் வொரு மனிதனும் பிறருடைய உதவிகளால் வாழ்க்கையை நடத்த வேண்டியவனாக இருக்கிறான். பிறருதவி யின்றி ஒருவன் தனது ஆற்றலொன்றனையே கொண்டு வாழ்வது உலகத்தில் இயலுவ தன்று. ஒருவருக்கொருவர் தம்மால் இயன்ற உதவி களைச் செய்து இன்புற்று வாழ்வதே அறம். அங்ஙனம் ஒருவர் ஒருவருக்கு உதவிபுரியும்பொழுது அதனை மறவாமல் நினைத் தலும் வாயாரப் புகழ்தலும் இயன்றவரையில் உதவிசெய்தவ

ருக்குத் தம்மால் ஆன உதவிகளைப் புரிதலும் வேண்டும். அந்த முறையில், புலமையுடையவர்கள் தமக்கு உதவி செய்தவர்களை மறவாமல் வாயாரப் புகழ்தல் ஒரு கடமையாகும். நாவன்மையை அவ்வகையில் உபயோகிப்பது செய்ந்நன்றி யறிவின் பயனாகுமே யன்றிப் பிழையாக எண்ணக்கூடியதன்று. சங்கப் புலவர்களும், கம்பர் ஒட்டக்கூத்தர் புகழேந்தி வில்லிபுத்தூரார் முதலிய புலவர் பெருமக்களும் செய்ந்நன்றியறிவு காரணமாகவே தம்மை ஆதரித்த உபகாரிகளின் புகழைப் பாராட்டி உரிய இடங்களில் பல செய்யுட்களில் அமைத்துள்ளார்கள்'' என்று இவர் கூறுவதுண்டு.

## சிவபக்தி

இவருக்கு இருந்த சிவபக்தி அளவிடற்கரியது. சிவ தீட்சைகளை முறையே இவர் பெற்றவர். இவர் நெற்றியில் எப்பொழுதும் திருநீறு விளங்கிக்கொண்டேயிருக்கும். இரவில் சயனித்துக்கொள்ளுமுன் திருநீறு தரித்துக்கொண்டு சிறிது நேரம் ஈசுவரத் தியானம் செய்துவிட்டு அப்பால்தான் சயனித்துக்கொள்வார். திருநீற்றுச் சம்புடம் தலையணையின் பக்கத்தில் வைக்கப்பட்டிருக்கும். துயிலெழுந்தவுடன் திருநீறு தரித்துக்கொண்டுதான் புறத்தே வருவார். நாள்தோறும் சிவபூசையை நெடுநேரம் செய்வார். பூசைக்கு வேண்டிய பத்திர புஷ்பங்களை அதிகமாகக் காணுமிடந்தோறும் எடுத்தும் எடுப்பித்துக்கொண்டும் வருவதுண்டு.

சிவஸ்தலங்களுக்குச் சென்று தரிசனம் செய்வதும், சிவஸ்தல வரலாறுகளை நன்றாகத் தெரிந்துகொள்வதும், சிவபெருமானுடைய புகழைப் பலவகையாகச் சொல்லியும் பாடியும் வரும் வழக்கமும் இவர்பாற் சிறந்து விளங்கின.

இப்புலவர் பெருமானுடைய சிவபக்தியின் முதிர்வை இவர் நூல்களே நன்கு தெளிவிக்கும். இவர் இறுதிநாள் காறும் சிவபிரானுடைய திருவடிக் கமலத்தையே எண்ணி உருகினார். உலக வாழ்வை நீப்பதற்கு இரண்டு தினங்களுக்கு முன்பு ஒரு சுலோகத்தை மொழிபெயர்த்து அதனுடைய ஈற்றடியில், "ஏகநாயகனே தில்லையி லாடும் இறைவனே எம்பெருமானே" என்று அமைத்த செய்தியால் சிவபிரானுடைய

திருவடி நினைவில் இவர் மனம் பதிந்திருமை நன்கு புலப்படு கின்றதல்லவா? இவர் பூத உடம்பை நீத்த அன்று திருவாவடு துறையில் ஸ்ரீ கோமுத்தீசுவரரது இடபவாகனக் காட்சி விழா அமைந்ததும், திருவாசகத்தில் அடைக்கலப்பத்தை வாசிக்கை யில் இவர் பூவுலகை நீத்தது மாகிய வாய்ப்புக்கள் இவரது சிவபக்தியின் பயனென்றே சொல்லவேண்டும். பிற மதங்க ளிடத்தில் இவர் அவமதிப்பில்லாதவராகவே இருந்தார்.

### மாணாக்கர்பாலிருந்த அன்பு

இவருடைய வாழ்க்கையில் இவர் நூலாசிரியராகவும் போதகாசிரியராகவும் இருந்து செய்த செயல்கள் தமிழறிவை வளப்படுத்தின. அவையே இவர் வாழ்க்கையாக அமைந்தன என்று கூறுதல் மிகையன்று. தமிழ் நூல்களை ஒய்வின்றி முறையாகப் பாடஞ் சொல்லும் திறத்தில் இவர் காலத்தில் இவரைப் போன்றவர் வேறு யாரும் இல்லை.

பலரிடம் பல சமயங்களில் அலைந்து முயன்று தாம் படித்துவந்த வருத்தத்தை இவர் நன்றாக அறிந்தவராதலின் தம்பால் வந்த மாணாக்கர்களுக்குக் கஷ்டத்தை உண்டாக்கக் கூடாதென்று கருதி அவர்கள்பால் அளவற்ற அன்பு பூண்டு பாடஞ் சொல்லிக் கொடுக்கும் இயல்புடையவரானார். மாணாக் கர்களிடம் இவர் தாயைப் போன்ற அன்புடையவராக இருந் தார். அவர்களோ, தந்தையாகவே எண்ணி இவரிடம் பயபக்தி யோடு ஒழுகினர். அவர்களுடைய குற்றங்களை இவர் மறந்து விடுவார். அவர்களுக்கு எந்த எந்த வகையில் குறைகள் உண்டோ அவற்றை நீக்குவதற்காக முயல்வார்; அவர்கள் தெரிந்துகொள்ளாதபடி அவர்களுக்கு வேண்டிய நன்மை களைச் செய்வார். மாணாக்கர்களேயன்றிப் பிறர் சுற்றத்தாரல்ல ரென்பது இவருடைய வாழ்வின் நோக்கமாக இருந்தது.

தமிழ் படித்தவர் யாரும் இவரிடத்திற் கவலையின்றிப் பழகலாம்; ஏதாவது கேள்வி கேட்பாரென்றேனும், தருக் குற்றிருப்பாரென்றேனும், தங்களுடைய பிழைப்பைக் கெடுத்து விடுவா ரென்றேனும் ஒருவருக்கும் இவர்பால் அச்சம் உண் டாவதில்லை.

தம்முடைய மாணாக்கர்களை நல்ல நிலையில் இருக்கச் செய்யவேண்டு மென்னும் நினைவு இவருக்கு எப்போதும் உண்டு. தம்மைப் பார்க்க வந்த செல்வர் முதலியோர் தம்முடைய பிரசங்கத்தைக் கேட்டு ஆனந்தித்துக் கொண்டிருக்கையில் தம்முடைய மாணாக்கர்களை அழைத்து இருக்கச் செய்து அவர்களுக்குத் தெரிந்த பாடல்களை இசையோடு சொல்லச் செய்வதும் பொருள் சொல்லிப் பிரசங்கிக்கச் செய்து கேட்பிப்பதும் இவருடைய வழக்கம். அவர்களுக்கு அனுகூலம் உண்டாகும் விஷயத்தில் எத்தகைய உழைப்பையும் மேற்கொள்வார்.

இவர்பாற் படித்த மாணாக்கர்கள் பல வகையினர். சாதி, சமயம், ஆச்சிரமம் முதலியவற்றில் வேறுபாடுடையவர்கள் பலர் படித்தனர். யாவருக்கும் இவர்பா லிருந்த அன்பு ஒரு படித்தானதே. இவரிடம் படித்தவர்கள் நல்லறிவையும் நன்மதிப்பையும் உயர் நிலையையும் அடைந்தார்கள்; சிலர் ஸம்ஸ்தான வித்துவான்களாகவும் கலாசாலைப் பண்டிதர்களாகவும் இருக்கும் பேறு பெற்றனர். தம்பிரான்களிற் சிலர் நல்ல அதிகாரத்தையும் உயர்ந்த நிலையையும் அடைந்தனர்; சிலர் ஆதீனத் தலைவர்களாகவும் ஆயினர். இவரிடம் ஒருவர் சில காலம் படித்தாலும் சிறந்த அறிவுடையவ ராகிவிடுவார். இவருடைய மாணாக்க ரென்றாலே அவர்களுக்குத் தனியாக ஒரு மதிப்பு உண்டு. இவருடைய கைராசியை யாவரும் புகழ்வார்கள். இவரிடம் புஸ்தகம் பெற்றவர்கள்கூடத் தமிழ்ப் பயிற்சி உடையவர்களாக விளங்கினார்கள்.

## பாடஞ் சொல்லுதல்

பாடஞ் சொல்வதில் இந்நாவலர் பெருந்தகைக்குச் சலிப்பே உண்டாவதில்லை. தமக்குத் தெரிந்தவற்றை யாவரும் அறிந்துகொள்ள வேண்டு மென்னும் உபகார சிந்தையுடையவர். மாணாக்கர்களுடைய தரமறிந்து பாடஞ் சொல்வார். பாடஞ் சொல்லும் காலத்தில் கையில் புஸ்தகம் வைத்துக்கொண்டு இவர் சொல்வதை நான் பார்த்ததேயில்லை. பாடஞ் சொல்லும் உரைநடை, செய்யுட்கள் எல்லாம் இவருக்கு மனப்பாடமாகவே இருக்கும். இவர் இன்ன சமயங்

களிலேதான் பாடஞ் சொல்லுவது என்ற நியமம் வைத்துக் கொள்ளவில்லை. சமயம் நேரும்பொழுதெல்லாம் பாடஞ் சொல்வதே இவருடைய வழக்கமாக இருந்தது. வண்டியிற் செல்லும் பொழுதும் உண்ணும் பொழுதும் உறங்கத் தொடங்கியபொழுதுங்கூட இவரிடம் பாடம் நடைபெறும்.

இவர் பாடம் சொல்லும்பொழுது கடின பதங்களுக்கு மட்டும் பொருள் சொல்வார். கற்பனைகளை இன்றியமையாத இடங்களில் விளக்கிக் காட்டுவார். இன்ன கருத்துக்களை ஒழுங்காக மனத்தில் வைத்திருக்க வேண்டு மென்று கூறுவார். தேவாரம், திருவாசகம், கல்லாடம், பெரிய புராணம், திருக்குறள், காஞ்சிப் புராணம், கம்ப ராமாயணம் என்பவற்றி லிருந்து மேற்கோள்களை எடுத்துச் சொல்லி மாணக்கர் மனத்தில் கருத்துக்கள் தெளிவாகப் பதியும்படி செய்வார். பெட்டி நிறையப் பணத்தை நிரப்பிவைத்துக் கொண்டிருக்கும் வண்மையாளன் தடையின்றி எடுத்து வாரி வாரி வழங்குவது போலத் தமது உள்ளக் களஞ்சியத்தில் பல நாட்களாகச் சேமித்து வைத்த பொருள்களை யெல்லாம் பாடம் சொல்லு கையில் மாணக்கர்களுக்கு வழங்கி வரும்பொழுது, ‘இவ்வளவு நூல்களையும் இவர் எப்படி மனத்திற் பதித்து வைத்துக் கொண்டாரோ!’ என்னும் ஆச்சரியம் அயலி லிருப்பவர் களுக்கு உண்டாகும். நடக்கும் புஸ்தகசாலையென்று இவரைக் கூறலாம். பாடஞ் சொல்லும் நூல்களின் உரைகளில் மேற் கோளாக வரும் செய்யுட்களுக்குப் பொருள் கூறுவார். புலவர் களைப் பற்றிய வரலாறுகளை அடிக்கடி சொல்லுவார். அருங் கருத்துக்களைச் சொல்லிவரும்பொழுது அவற்றைத் தாம் அறிந்த வரலாற்றையும் கூறுவதுண்டு. மாணக்கர்களுக்குச் செய்யுள் இயற்றும் பழக்கம் உண்டாகவேண்டு மென்னும் எண்ணத்தினுல் அடிக்கடி சமஸ்யைகளை அவர்களுக்குக் கொடுத்துச் செய்யுள் செய்யச் சொல்வார்.

பண்டைக் காலமுதல் நூல்களில் வழங்கிவந்த சொற் பிரயோகங்களை நாம் மாற்றுதல் பிழையென்று சொல்வார். வட மொழிச் சொற்களைத் திரித்து வழங்கும்பொழுது மனம்போன

வாறு திரித்தலை இவர் விரும்பார். எல்லாச் சொற்களையும் திரித்தே வழங்கவேண்டுமென்பது இவருக்கு உடன்பாடன்று; "என்பெயரைத் திரித்து மீனாக்கி சுந்தர மென்று வழங்கினால் நன்றாக இருக்குமா ?" என்று கேட்பார். கோகநகம், ஆதவன், மானிடன் என்ற சொற்பிரயோகங்கள் அடிப்பட்ட வழக்காக நூல்களில் அமைந்துவிட்டமையால் அவற்றை வடமொழிப் படியே இருக்க வேண்டுமென்று கருதித் திருத்துதல் நன்றன்று என்பார். சொல்லுக்கு மதிப்பு உண்டாவது புலவர் களுடைய ஆட்சியில் அது வழங்கி வருவதனால்தான்; ஆதலின் சொல்லின் உருவத்தையும் பிற தொடர்புகளையும் ஆராய்வதினும் ஆன்றோர் ஆட்சியில் உள்ளனவா என்பதை ஆராய்வதே சிறந்ததென்பது இவர் கருத்து. மனஸ் என்பதை 'மனது' என்று வழங்கக் கூடாதென்பது இவர் கொள்கை; "மனஸ் என்ற வடமொழிச்சொல் மனம் என்றுதான்வரும்; சிரஸ் என்பது சிரமென்று வருகிறதே யன்றிச் சிரது என்று வருவதில்லை" என்பார். இத்தகைய செய்திகளையெல்லாம் பாடஞ் சொல்லுகையில் மாணாக்கர்களுக்குக் கூறுவார். "இலக்கண அறிவு ஒருவனுக்கு இன்றியமையாததே; ஆயினும் இலக்கிய பாடங்களை வாசித்த பின்பே இலக்கண நூல்களைக் கற்றல் பயன்விளைக்கும்" என்று இவர் சொல்வதுண்டு. அயலிடம் சென்றபொழுது யாரேனும் இவரிடம் கடினமான பாடல்களுக்குப் பொருள் கேட்பின் அவர்களுக்கு அவற்றை விளக்கிவிட்டுப் பின்பு வீட்டுக்கு வந்து மாணாக்கர் களுக்கும் அவற்றைக் கூறி விளக்குவது இவரது வழக்கம்.

## கல்விப் பெருமை

இவருடைய கல்வி மிகவும் ஆழமும் அகலமும் உடையதாக இருந்தது; "அளக்க லாகா அளவும் பொருளும்" உடைய இவரது அறிவின் திறம் ஒவ்வொரு நாளும் புதியதாகவே தோற்றியது; இளமை தொடங்கியே தமிழ் நூல்களை முறையாகப் பயின்று பயின்று உரம்பெற்றதாக இருந்தது. படித்தவர்களாக எண்ணிய யாவரிடமும் பழகி அவரவர் களுக்குத் தெரிந்தவற்றை இவர் இளமை தொடங்கியே கற்றனர். தமிழ் நூலாக எது கிடைப்பினும் அதனை வாசித்து

மெய்ப்பொருள் அறிந்தனர். இங்ஙனம் துளிதுளியாகச் சேர்த்த அறிவு, பலதுளி பெருவெள்ள மென்பதுபோல ஒரு பெரிய கடலாகப் பெருகி நின்றது. பிற்காலத்தில் இவர் பாடஞ் சொல்லும்போது நன்ருகத் தெளிந்த அறிவோடு கருத்துக்களை எடுத்துக் கூறும் வன்மையும், பாடஞ் சொல்லும் நூல்களி லுள்ள பொருள்களைத் தம்முடையனவாகக் கொண்டு விட்ட நிலையும் இவர் இளமை தொடங்கிச் செய்துவந்த முயற்சிகளின் பயனென்றே கூறவேண்டும். சிலரைப் போலக் கல்வி விஷயத்தில் இவருக்குத் திருப்தி பிறக்கவில்லை. எந்த இடத்திற்குப் போனலும் அங்கே பழைய சுவடி ஏதாவது இருக்கின்றதா வென்று பார்ப்பார். இருந்தால் உடனே வாங்கி ஒருமுறை வாசித்துவிட்டுப் பொருள் சொல்வார்; சில சமயங்களிற் பிரதி செய்து வைத்துக்கொள்வது முண்டு; சந்தேகம் நேரிடின் அதனை மறவாது வைத்திருந்து தெரிந்த வாகளைச் சந்திக்கும்பொழுது விசாரித்துத் தீர்த்துக் கொள்ளுவார்.

இப்புலவர்பெருமான் பல இடங்களில் பல வகையில் சேகரித்து வைத்திருந்த தம் அறிவைத் தம் மாணவர்களுக்கு வரையாது வழங்கினமையால், பிரபந்தங்கள் உயிர் பெற்றன. அதுகாறும் தெரிவிப்பாரின்றிக் கிடந்த குமரகுருபரசுவாமிகள் பிரபந்தங்களிற் சில, சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தங்களிற் சில, சிவஞான முனிவர் பிரபந்தங்களிற் சில, இன்னும் வேறு சில வெளிப்பட்டுத் தமிழ்நாட்டாருடைய கைகளில் விளங்கின. இவர் பாடஞ் சொல்லியதனலேயே அப்பிரபந்தங்களின் நயங்களைத் தமிழ் மக்கள் உணரத் தலைப்படடனர். கம்பரந்தாதி, முல்லையந்தாதி முதலிய நூல்களுக்கு இவர் சொல்லி எழுதுவித்த உரைகளே பின்பு மதுரை இராமசாமிப் பிள்ளையால் பதிப்பிக்கப்பட்டன. காஞ்சிப்புராணம், தணிகைப் புராணம், திருவானைக்காப் புராணம் முதலியவற்றிற்கு இவர் பாடஞ் சொன்ன உரையே பிற்காலத்தில் தமிழ்நாட்டில் வழங்குவதாயிற்று.

பலருடைய வேண்டுகோளுக்கு இணங்கி இவர் செவ்வந்திப் புராணம், காஞ்சிப் புராணத்தின் முதற்பாகம், திரு

வானைக்காப் புராணம், கல்லாட மூலம் முதலியவற்றைப் பதிப்பித்தனர்.

## கையெழுத்து

நூல்களைத் தொகுத்து வைப்பதிலும் தாமே எழுதிச் சேர்ப்பதிலும் இவருக்கு அவா மிகுதி. இளமை தொடங்கியே ஏட்டில் எழுதும் வழக்கம் இவருக்கு இருந்தமையின் இவருடைய எழுத்து அழகாக முத்துக்கோத்தாற்போல இருக்கும். ஒவ்வொரு வரியும் கோணாமல் ஒழுங்காக இருக்கும்; எழுத்து ஒன்றுடன் ஒன்று சேராது. இவரால் எழுதப்பெற்ற சுவடிகளுக்குக் கணக்கே யில்லை. கம்பராமாயணத்தை மூன்றுமுறை எழுதியிருக்கிறார். மாணாக்கர்களுக்கும் ஏட்டில் எழுதும் பயிற்சியை உண்டாக்கினர்.

இவர் தம் கையினால் நூல்களைக் காகிதங்களில் எழுதியதில்லை. யாருக்கேனும் கடிதம் எழுத வேண்டுமாயின் காகிதத்தில் உடன் இருப்பவரைக்கொண்டு எழுதுவித்து இறுதியில் 'தி. மீனாட்சிசுந்தரம்' என்று கையெழுத்திடுவார்; 'தி' என்பது திரிசிரபுரம் என்பதன் முதற் குறிப்பாகும். ஒருவரும் அருகில் இல்லையானால் தாமே எழுதுவார். காகிதத்தில் எழுதும் எழுத்தின் அமைப்புக்கும் ஏட்டுச் சுவடியில் எழுதும் எழுத்தின் அமைப்புக்கும் சிறிது வேறுபாடுண்டு.

## தமிழன்பு

தமிழ் நூல்களிடத்தில் இவருக்கு இருந்த அன்பு அளவற்றது. ஒரு நூலைப் படித்து வருகையில் அதில் முழுதும் ஈடுபட்டு, உணவு உறக்கம் முதலியவற்றையும் மறந்துவிடுவார்; தமிழ்நூல் சில சமயங்களில் இவருடைய நோய்க்கு மருந்தாகவும் உதவியிருக்கிறது. நல்ல நூல்களி லுள்ள சிறந்த பகுதிகளைப் படிக்கும்பொழுதும் பாடஞ் சொல்லும்பொழுதும் மனமுருகிக் கண்ணீர் வீழ்த்துவார். தமிழ்ப் புலவர்களுள் கச்சியப்ப முனிவரை இவர் பக்தியோடு வழிபட்டுப் பாராட்டுவார். "செய்யுள் செய்துவரும்பொழுது தடைப்பட்டால் கச்சியப்ப முனிவரைத் தியானிப்பேன். உடனே விரைவாகக் கருத்துக்களும் சொற்களும் தடையின்றி எழும்" என்று இவர் சொல்லி

யதைக் கேட்டிருக்கிறேன். சேக்கிழார், கம்பர், நெற்குன்ற வாண முதலியார், அம்பிகாபதி, கவி வீரராகவ முதலியார், வரதுங்கராமபாண்டியர், அதிவீரராம பாண்டியர், திருவாரூர் இலக்கண விளக்கம் வைத்தியநாத தேசிகர், துறைமங்கலம் சிவப்பிரகாசர், சிவஞான முனிவர் என்பவர்களுடைய நூல்களில் இவருக்கு விருப்பம் அதிகம், கம்பருடைய செய்யுட்களைப் படித்து வருகையில் இடையிடையே அவற்றின் சுவையில் ஈடுபட்டு மனமுருகுவார். திருப்புகலூரந்தாதியிலுள்ள திரிபின் அமைப்பை வியப்பார். திருச்சிற்றம்பலக் கோவையாரிலுள்ள செய்யுட்களை அடிக்கடி சொல்லிக்கொண்டேயிருப்பார். கல்லாடப் பகுதிகள் இவருக்கு அடிக்கடி ஞாபகத்துக்கு வரும். தேவாரப் பகுதிகளின் கருத்தைச் சில சில சமயங்களில் எடுத்துக் காட்டுவதுண்டு, இலக்கண விளக்கத்தில் இவருக்கு மதிப்பு அதிகம். சைவரால் இயற்றப்பெற்ற நூலென்பதும் அந்நூல் அகத்திணையியலில், திருச்சிற்றம்பலக் கோவையாரிலுள்ள துறைகளை அமைத்துக்கொள்வதற்கு ஏற்ற இலக்கணங்களையும் பொருத்தி, அவற்றிற்கு அக்கோவையாரிலுள்ள செய்யுட்களை இடையிடையே உதாரணமாகக் காட்டியிருப்பதும் அதற்குரிய காரணங்களாம். அக்காரணங்களை அடிக்கடி கூறி வைத்தியநாத தேசிகரை இவர் பாராட்டுவதுண்டு. சிவஞான முனிவருடைய செய்யுள் நடையிலும் வசனநடையிலும் இவருக்கு உவப்பு அதிகம். கச்சியப்ப முனிவர் நூல்களில் உள்ள அரிய அமைப்புக்களையும் சங்க நூற் பிரயோகங்களையும் பற்றி இவர் அதிகமாகப் புகழ்வார். அவருடைய நூலமைப்பையே இவர் பெரும்பாலும் பின்பற்றிப் பாடுவார்.

### கவித்திறன்

இக் கவிஞர் பெருமானது கவித்திறன் இவருடைய வரலாற்றாலும் நூல்களாலும் அறியப்படும். நினைத்ததை நினைத்த வண்ணம் வார்த்தைகளாற் சொல்வதே மிகவும் அரிய செயல்; மனத்தில் தோன்றிய இனிய கருத்துக்களைச் செய்யுளுருவத்தில் அமைக்கும் கவித்துவம் அனைவரும் பாராட்டற்குரியதேயாம். கருத்துக்களை நினைக்கலாம்; நினைத்தவற்றைச் சொல்லலாம்; சொல்வதையே அழகு பெறப் பன்னலாம்; அதனையே கவியாக அமைக்கலாம்; ஆனால் நினைத்தவற்றை நினைத்த

போதெல்லாம் நினைத்த வழியே தமிழ்ச் சொற்கள் ஏவல் கேட்ப வருத்தமின்றி விளையாட்டாகக் கவிபாடும் திறமை எல்லாக் கவிஞர்களுக்கும் வாய்ப்பதன்று; அத்தகைய திறமையை யுடைய கவிஞரை மற்றப் புலவர்களோடு ஒருங்கு எண்ணுதல் தகாது. அவர்கள் பிறப்பிலேயே கவித்துவ சக்தியுடன் பிறந்தவர்களாவார்கள். அவ்வகைக் கவிஞர் வரிசையில் சேர்ந்தவரே இந்த மகா கவி. சொற்களை வருந்தித் தேடி அகராதியையும் நிகண்டுகளையும் அடுக்கி வைத்துக்கொண்டு கவி பாடுவதென்பது இவர்பால் ஒருபொழுதும் இல்லை. சுவையற்ற பாடல்களை உண்டாக்கும் உலைக்கூடமாக இவர் மனம் இராமல், வளம் பெற்ற செய்யுட்களின் விளைநிலமாகவே இருந்தது. செய்யுள் இயற்றுவது இவருக்குத் தண்ணீர் பட்டபாடு. எவ்வளவோ ஆயிரக்கணக்காக இவர் செய்யுட்களை இயற்றினாலும் இவருக்கு முழுத் திருப்தி உண்டாகவில்லை. இவருடைய நாத்தினவு முற்றும் தீரவே யில்லை. இவருடைய ஆற்றலை இயன்றவரையில் பயனுறச் செய்ய வேண்டுமென்னும் நோக்கத்தோடு தக்கவண்ணம் யாரேனும் இவரை ஆதரித்து ஊக்கத்தை அளித்து வந்திருந்தால் இவர் இன்னும் எவ்வளவோ நூல்களை இயற்றியிருப்பார். சிலசில காலங்களில் சிலர் சிலரால் தங்கள் தங்கள் கருத்துக்கு இயைய இன்ன இன்னவகையாகச் செய்யவேண்டுமென்று தூண்டப்பட்டுச் செய்த நூல்களே இப்பொழுது இருக்கின்றன. இவருடைய புலமைக் கடலிலிருந்து ஊற்றெடுத்த சிறிய ஊற்றுக்கள் என்றே அவற்றைச் சொல்ல வேண்டும். அக் கடல் முழுதும் மடைதிறந்திருந்தால் தமிழ்நாடு முழுவதும் இவருடைய பலதுறைப்பட்ட கவி வெள்ளத்தில் முழுகி இன்புற்றிருக்கும்.

செய்யுள் இயற்றுவதெனின் அதற்கென்று தனியிடம், தனிக்காலம், தனியான சௌகரியங்கள், ஓய்வு முதலியவற்றை இவர் எதிர்பார்ப்பதே இல்லை. இன்ன காலத்தில்தான் பாடுவது என்ற வரையறையும் இல்லை. பிரபுக்களும் அன்பர்களும் வந்து பேசிக்கொண்டிருக்கையிலேயே அருகிலிருக்கும் ஒரு மாணாக்கரிடம் இவர் ஒரு நூலுக்குரிய செய்யுட்களைச் சொல்லி எழுதுவித்துக் கொண்டே யிருப்பார்.

இவர் பெரும்பாலும் யோசித்துக்கொண்டே யிருக்கும் இயல்புடையவர். பாடவேண்டிய விஷயங்களை ஒருவகையாக மனத்தில் ஒழுங்குபடுத்திக்கொண்டு பின்பு பாட ஆரம்பித்தால் ஒரே மூச்சில் நூற்றுக்கணக்காகப் பாடுவார். செய்யுட்களைச் சொல்லிக்கொண்டே வருகையில் மனப்பாடமான நூல்களில் உள்ள செய்யுட்களைக் கூறுகின்றாரென்று தோற்றுமேயொழியப் புதிய செய்யுட்களை யோசித்து இயற்றிச் சொல்லி வருகிறாரென்று தோற்றாது. மிகவும் அரிய கற்பனைகளை மனத்திலே ஒழுங்கு பண்ணிச் சில நிமிஷ நேரங்களிற் சொல்லிவிடுவார். நூல்களுக்கு இடையிடையே அமைந்த எதுகைக் கட்டுள்ள பாடல்களை இளைப்பாற்று பாடல்களென்பார்.

இவர் இயற்றியவற்றைப் புராணங்கள், பிரபந்தங்கள், தனிப்பாடல்கள், சிறப்புப்பாயிரங்களென நான்கு வகையாகப் பிரிக்கலாம். புராணங்களைக் காப்பிய இலக்கணப்படி அமைக்கும் முறையை மேற்கொண்ட புலவர்களுள் இவரைப்போல அளவிற் பலவாகவுள்ள நூல்களைச் செய்தவர்கள் வேறெவரும் இல்லை. இவருக்கு முன்பிருந்த தமிழ்ப்புலவர்களிற் சிலர் சில புராணங்களை மொழிபெயர்த்துக் காப்பியங்களாகச் செய்திருக்கின்றனர். அவர்களுடைய நூல்களிற் காணப்படும் அமைப்புக்கள் அனைத்தையும் இவருடைய நூல்களிற் காணலாம்.

## நூல்களின் இயல்பு

இவருடைய நூல்களிற் பெரும்பான்மையானவை புராணங்களே. இவருடைய வாக்கால் தங்கள் தங்கள் ஊருக்கு ஒரு புராணமேனும் ஒரு பிரபந்தமேனும் பெறவேண்டுமென்று அக்காலத்தில் சிவஸ்தலங்களில் இருந்தவர்கள் விரும்பினார்கள். பழைய புராணம் இருந்தாலும், நாட்டுச் சிறப்பு முதலிய காப்பிய இலக்கண அமைதியுடன் செய்யவேண்டுமென்னும் கருத்தால் பலர் இவரை மீண்டும் ஒரு புராணம் இயற்றித் தரும்படி வற்புறுத்தி வேண்டுவதுண்டு. இவர் புராணங்கள் இயற்றிய தலங்களிற் பெரும்பான்மையானவற்றிற்குப் பழைய புராணங்கள் உண்டு. ஆனாலும் இவருடைய புராணத்திற்கு மதிப்பு அதிகம். இவராற் புராணம் முதலியவை பாடப்பெற்ற தலங்கள் பல, சொற்பணிகளும், கற்பணிகளும், பொற்பணி

களும் இயற்றப்பெற்றுப் பலவகையாலும் வளர்ச்சியுற்று விளங்குகின்றன என்பர்.

இவர் இயற்றும் புராணக்காப்பியங்களில் கடவுள் வாழ்த்திலும் அவையடக்கத்திலும், "நூனுதல் பொருளைத் தன்னகத் தடக்கி" என்னும் இலக்கணப்படி நூலில் வரும் செய்திகளை உரிய இடங்களிற் பலவகையாக அமைப்பார். அவையடக்கங்கள் பலவற்றில் இலக்கணச் செய்திகளையும் சாஸ்திரக் கருத்துக்களையும் காணலாம். பெரும்பான்மையான புராணங்களில் கடவுள் வாழ்த்தில் சிவபெருமான் வணக்கத்தில் மடக்கு அமைந்திருக்கும். நாட்டுச் சிறப்பில் இன்ன நாடு என்று சொல்லும்பொழுது செய்யுட்களின் இறுதியில் மடக்கை அமைப்பதும் ஐந்திணைகளை வருணிக்கும்பொழுது அவ்வத் திணைகளில் அமைந்துள்ள சிவஸ்தலங்களைக் கூறுவதும் இவர் இயல்பு. இவை பெரிய புராணத்தால் அறிந்தவை. சித்திர கவிகளைத் திருநாகைக்காரோணப் புராணம் அம்பர்ப் புராணம் என்பவற்றில் இவர் அமைத்திருக்கிறார். காஞ்சிப் புராணத்தின் முதற் காண்டதில் இத்தகைய அமைப்பு இருக்கிறது. தோத்திரம் வருமிடங்களில் ஒத்தாழிசைக் கலிப்பா முதலியவற்றையும் அமைப்பர்; இது சீகாளத்திப் புராணம் முதலியவற்றி லிருந்து அறிந்துகொண்டது. வரலாறுகளைச் சொல்லும்பொழுது வஞ்சி விருத்தம், வஞ்சித்துறை முதலிய சிறு செய்யுட்களாற் கூறுவர்; சில சமயங்களிற் கட்டளைக் கலித்துறையாலும் பாடுவர். தேவாரச் சந்தம் இவருடைய நூற் செய்யுட்களில் அமைந்து விளங்குதலை அங்கங்கே காணலாம். சைவசித்தாந்த சாஸ்திரங்களி லுள்ள கருத்துக்களைப் பல வேறு உருவங்களில் இவர் நூல்களில் அமைத்துள்ளார். இவருடைய நூல்களிற் பெரும்பாலனவற்றின் இறுதிச் செய்யுளில் ஸ்ரீ நடராஜப் பெருமான் குஞ்சிதபாதத்தைப்பற்றிய வாழ்த்தைக் காணலாம். எந்த நூலிலேனும் ஒரு புதுக் கருத்தை அறிந்தாராயின் அதனைப் பின்னும் அழகுபடுத்தித் தாம் இயற்றும் நூலில் பொருத்தி விடுவார். தாம் கண்டும் கேட்டும் அநுபவித்தும் அறிந்தவற்றைச் செய்யுட்களில் அங்கங்கே அமைத்துப் பாடுவார். தம்முடைய ஞானாசாரிய ஸ்தானமாகிய திருவாவடுதுறையி லுள்ள

மடாலயத்தையும் குருமூர்த்திகளையும் உரிய இடங்களிற் பாராட்டிக் கொண்டே செல்வது இவருடைய வழக்கம்.

இவருடைய பிரபந்தங்களில் அவ்வப் பிரபந்தங்களின் இலக்கணம் நன்றாக அமைந்திருக்கும். பிள்ளைத் தமிழ்களில் இவர் பகழிக்கூத்தரையும் குமரகுருபரரையும் ஒப்பர். கோவை களில் அரிய கற்பனைகளையும் நீதிகளையும் பண்டைப் புலவர் சொற்பொருள்களையும் காணலாம். இவர் இயற்றிய திருவிடை மருதூருலாவுக்கு இணையாக உள்ள ஒருலாவைக் காண்ட லரிது. யமகம் திரிபு வகைகளில் வேறெவரும் இயற்றியிராத விசித்திரமான அமைப்புக்களை இவர் வாக்கிற் காணலாம்.

இவர் இயற்றிய தனிப்பாடல்கள் பலவகையாகும். சந்தர்ப் பங்களுக்கு ஏற்றவண்ணம் சாதுரியமாகப் பாடிய பாடல்கள் அளவிறந்தன. ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வொரு வரலாறு உண்டு. அவற்றை யன்றி நன்றியறிவின் மிகுதியால் தமக்கு உபகாரம் செய்தவர்களை அவ்வப்போது பாடிய செய்யுட்கள் பல. அவை அன்பு மிகுதியால் பாடப்பட்டன வாதலின் சில செய்யுட்கள் உயர்வு நவிற்சியாகத் தோற்றும். யாருக்கேனும் கடித மெழுதுகையில் தலைப்பில் ஒரு பாடலை எழுதுவிப்பது இவருடைய வழக்கம். அங்ஙனம் இவர் எழுதிய பாடல்கள் நூற்றுக்கணக்காக இருக்கும். வடமொழி வித்துவான்கள் அவ் வப்பொழுது கூறும் சுலோகங்களை உடனே மொழிபெயர்த்துச் சொல்லிக் காட்டுவார். அவ்வாறு இயற்றிய செய்யுட்கள் பல; பிறருக்காகப் பாடிக்கொடுத்தவை எத்தனையோ பல.

இவரால் இயற்றப்பெற்ற சிறப்புப்பாயிரங்கள் நூலாசிரிய ருடைய தகுதிக்கேற்ப அமைந்திருக்கும். இவரிடமிருந்து சிறப் புப்பாயிரம் பெறுவதனால் நூலியற்றுபவர்களுக்கு உயர்ந்த மதிப்பு உண்டாயிற்று. அதனால் நூலியற்றுபவர்கள் பலர் இவருடைய சிறப்புப்பாயிரம் பெறப் பலவகையில் முயல் வார்கள். அகவலாகவும் விருத்தங்களாகவும் தரவு கொச்சக மாகவும் இவர் சிறப்புப்பாயிரங்கள் இயற்றி யளிப்பதுண்டு. சிறந்த நூலாயின் அகவலாலும் பல விருத்தங்களாலும் சிறப் புப்பாயிரத்தை அமைப்பார். இல்லையெனின் ஒரு செய்யுளா லேனும், இரண்டுசெய்யுளாலேனும் இன்ன நூல் இன்னார்

செய்தார் என்னும் பொருள்மட்டும் அமையச் செய்து அளித்து விடுவார். நூல்களுக்குச் சிறப்புப்பாயிரங்கள் அளிக்கும் முறை இவர் காலத்திலேதான் மிகுதியாக வழங்கலுற்றது.

இவர் இயற்றிய நூல்கள் பலவற்றுள் தெரியாதவை சில; தெரிந்தவற்றுள் புராணங்கள் 22 ; பிற காப்பியங்கள் 6 ; பிரபந்தங்கள் 45 ; தனிப்பாடல்கள் அளவிறந்தன.

## 1. தலபுராணங்கள்

(1) ‡ அம்பர்ப் புராணம்
(2) ஆற்றூர்ப் புராணம்
(3) ¶ உறையூர்ப் புராணம்
(4) ¶ கண்டதேவிப் புராணம்
(5) ¶ ஸ்ரீ காசிரகசியம்
(6) ¶ குறுக்கைப் புராணம்
(7) ¶ கோயிலூர்ப் புராணம்
(8) ¶ சூரைமாநகர்ப் புராணம்
(9) தனியூர்ப் புராணம்
(10) * தியாகராச லீலை
(11) ¶ திருக்குடந்தைப் புராணம்
(12) ‡ திருத்துருத்திப் புராணம்
(13) ¶ திருநாகைக் காரோணப் புராணம்.
(14) ¶ திருப்பெருந்துறைப் புராணம்
(15) *† திருமயிலைப் புராணம்
(16) * திருவரன்குளப் புராணம்
(17) * பட்டீச்சுரப் புராணம்
(18) மண்ணிப்படிக்கரைப் புராணம்
(19) ¶ மாயூரப் புராணம்
(20) ¶ வாளொளி புற்றூர்ப் புராணம்
(21) ¶ விளத்தொட்டிப் புராணம்
(22) ¶ வீரவனப் புராணம்

## 2. சரித்திரம்

(1) ஆதி குமரகுருபரஸ்வாமிகள் சரித்திரம்
(2) ஸ்ரீ சிவஞான யோகிகள் சரித்திரம்
(3) † மயில்ராவணன் சரித்திரம்

## 3. மான்மியம்

குருபூசை மான்மியம்

## 4. பிற காப்பியங்கள்

(1) குசேலோபாக்கியானம்
(2) சூத சங்கிதை

## 5. பதிகம்

(1) கச்சி விநாயகர் பதிகம்
(2) சுப்பிரமணியசுவாமி பதிகம்
(3) † திட்டகுடிப் பதிகம்
(4) மருதவாணர் பதிகம்

* இக் குறியிடப்பட்டவை பூர்த்தியாகாத நூல்கள்.
† இக் குறியிடப்பட்டவை இப்பொழுது கிடைக்கப் பெறாதவை.
‡ அச்சிடப்படாத நூல்கள்.
¶ அச்சிடப்பெற்றும் இப்பொழுது கிடைத்தற்கரியன.

## 6. பதிற்றுப்பத்தந்தாதி

(1) † தண்டபாணி பதிற்றுப்பத் தந்தாதி
(2) திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் பதிற்றுப்பத் தந்தாதி
(3) திருவூறைப் பதிற்றுப்பத் தந்தாதி
(4) பழசைப் பதிற்றுப்பத்தந்தாதி
(5) பாலைவனப் பதிற்றுப்பத் தந்தாதி
(6) பூவாளூர்ப் பதிற்றுப்பத் தந்தாதி

## 7. திரிபந்தாதி

(1) குடந்தைத் திரிபந்தாதி
(2) திருப்பைஞ்ஞீலித் திரிபந் தாதி
(3) † திருவானைக்காத் திரிபந் தாதி
(4) திருவிடை மருதூர்த் திரி பந்தாதி

## 8, யமக அந்தாதி

(1) திருச்சிராமலை யமக அந் தாதி
(2) திருவாவடுதுறை யமக அந் தாதி
(3) தில்லை யமக அந்தாதி

## 9. வெண்பா அந்தாதி

† எறும்பீச்சரம் வெண்பா அந்தாதி

## 10. மாலை

(1) அகிலாண்டநாயகி மாலை
(2) கற்குடி மாலை
(3) சிதம்பரேசர் மாலை
(4) சுப்பிரமணியதேசிகர் மாலை
(5) சச்சிதானந்ததேசிகர்மாலை
(6) சவராயலு நாயகர் மாலை
(7) சித்திரச் சத்திரப் புகழ்ச்சி மாலை.

## 11. பிள்ளைத்தமிழ்

(1) அகிலாண்டநாயகி பிள்ளைத் தமிழ்
(2) காந்திமதியம்மை பிள்ளைத் தமிழ்
3 ) சேக்கிழார் பிள்ளைத் தமிழ்
(4) திருவிடைக்கழி முருகர் பிள்ளைத் தமிழ்
(5) திருவெண்ணீற்றுமை பிள் ளைத் தமிழ்
(6) † பாகம்பிரியாள் பிள்ளைத் தமிழ்
(7) † பிரம்ம வித்தியா நாயகி பிள்ளைத் தமிழ்
(8) பெருந்திருப் பிராட்டியார் பிள்ளைத் தமிழ்
(9) மங்களாம்பிகை பிள்ளைத் தமிழ்
(10) அம்பலவாண தேசிகர் பிள்ளைத் தமிழ்

## 12. கலம்பகம்

(1) வாட்போக்கிக் கலம்பகம்
(2) அம்பலவாண தேசிகர் கலம்பகம்

## 13. கோவை

(1) சீகாழிக் கோவை
(2) குளத்தூர்க் கோவை
(3) வியாசைக் கோவை

## 14. உலா

திருவிடைமருதூருலா

## 15. தூது

(1) சுப்பிரமணிய தேசிகர் நெஞ்சுவிடு தூது
(2) † தானப்பாசாரியார் தச விடு தூது

## 16. குறவஞ்சி

† திருவிடைக்கழிக் குறவஞ்சி.

## 17. சிலேடை வெண்பா

* † திருவாவடுதுறைச் சிலேடை வெண்பா

## 18. வேறு வகை

(1) கப்பற் பாட்டு
(2) குருபரம்பரை அகவல்
(3) திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் ஆனந்தக் களிப்பு
(4) பொன்னூசல்
(5) மங்களம்
(6) லாலி
(7) வாழ்த்து

இவற்றை யன்றி இவர் வேறு பல நூல்களை இயற்ற வேண்டுமென்று எண்ணியிருந்ததுண்டு. குறிஞ்சித்திணை வளங்கள் நிறைந்து விளங்கும் குற்றுலத்திற்கு ஒரு கோவை பாடவேண்டுமென்று எண்ணியிருந்தனர். அவ்வெண்ணம் என்ன காரணத்தாலோ நிறைவேறவில்லை.

வசனம் எழுதுவதைக்காட்டிலும் செய்யுள் இயற்றுவதிலே தான் இவருக்கு விருப்பம் அதிகம். இவர் எழுதும் கடிதங்கள் எளிய வசன நடையில் சுருக்கமாக அமைந்திருக்கும்.

### பேச்சு

இவருடைய பேச்சு யாவருக்கும் விளங்கும்படி இருக்கும். பேச்சிலேயே இவருடைய சாந்த இயல்பு வெளியாகும். புராணப் பிரசங்கம் செய்யும் பொழுது ஒவ்வொரு கருத்தையும் விரிவாக எடுத்துக் கூறிச் செல்வார். விரைவின்றியும் தெளிவாகவும் இடையிடையே மேற்கோள்கள் காட்டியும் பதசாரங்கள் சொல்லியும் பிரசங்கம் செய்வார்.

## புகழ்

அருங்குணமும் நிறைந்த புலமையும் தளராத நாவன்மையும் அமைந்த இப்பெரியாருடைய கீர்த்தி இவருடைய காலத்திலேயே தமிழ் நாட்டிலும் பிற இடங்களிலும் பரவியிருந்தது. திருவாவடுதுறை மடத்தில் ஆதீன வித்துவானாக அமர்ந்த பின்னர்த் திருக்கூட்டத்தாருடைய பழக்கமும் ஆசிரியர்களின் திருவருளும் சிவ பூசையும் மாணாக்கர்களுக்கு அதிகமாகப் பாடஞ் சொல்லுதலும் அவ்வப்போது நூல் இயற்றுதலு மாகிய இவற்றோடு இவர் மனம் அமைதியுற் றிருந்தது. வேறு எவ்வகையான நிலையையும் இவர் விரும்பவில்லை. ஆயினும் இவருடைய புகழ் நாளுக்குநாள் பரவிக்கொண்டே யிருந்தது. சைவ மடாதிபதிகள் எல்லோருடைய நன்மதிப்பையும் இவர் நன்கு பெற்றிருந்தனர். சைவர்கள் இவரை, "சைவப் பயிர் தழையத் தழையும் புயல்" என்றே கருதிவந்தனர். அன்னம் அளித்துப் புஸ்தகம் வாங்கிக் கொடுத்து அன்போடு படிப்பிப்பவர் இவரென்ற பெரும் புகழ் எங்கும் பரவியது. கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி என்ற பெயரை யுடையோர்கள் பண்டைக் காலத்தில் ஒவ்வொருவரே இருந்தனர்; ஆதலின் அவர்களுடைய பெயர்கள் மற்றவர்களைச் சாராமலே தனிச் சிறப்புற்றார்கள். இவருடைய பெயரை உடையவர்கள் பலர் இருந்தும் 'மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் என்று கூறின் இவரையே குறிக்கும் பெருமையை இவர் அடைந்திருந்தனர். தமிழ் வித்துவான்களில், "பிள்ளையவர்கள்" என்றே வழங்கும் பெரிய கௌரவம் இவருக்குத்தான் அக்காலத்தில் அமைந்திருந்தது. சமீபகாலத்தில் இத்தகையோர் இருந்ததில்லை.

ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் இவருடைய புகழைப்பற்றிச் சொல்லும்பொழுது, "நம்மிடம் வரும் தமிழ்வித்துவான்கள் யாவராயினும் பிள்ளையவர்களிடம் பாடங்கேட்டவரென்றெனும் அவர்களுக்குப் பாடஞ் சொன்னவரென்றேனும் அவர்களுக்கு ஐயம் தீர்த்தவரென்றேனும் அவர்களை ஜயித்தவரென்றேனும் தம்மைச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். வருபவர்கள் தங்கள் தங்கள் புகழை வெளியிட எண்ணி அங்ஙனம் கூறுகிறார்கள். நமக்கோ அவர்கள் கூறக்கூறப் பிள்ளையவர்களுடைய புகழ்தான் உரம்பெற்று மிகுதியாகத் தோற்றிக்கொண்டே இருக்கிறது" என்று கூறுவார்.

## இவரால் தமிழ்நாட்டிற்கு உண்டான பயன்

இப்புலவர் பிரானால் தமிழ்மக்கள் பெற்றபயன் மிகப் பெரிதாகும். புதிய புதிய நூல்களை இயற்றித் தமிழ் நயங்களை அமைத்துக் காட்டிய இவருடைய செய்யுளால் பலவகைச் சுவைகளை அறியும் பயனைத் தமிழ்மக்கள் பெறுகின்றனர். புது நூல்களை இயற்றியதோடு நில்லாமல் தாம் வருந்தித் தேடிய பழைய நூல்களை விளக்கிவைத்த இவருடைய செயல் தமிழ்நாட்டாரால் என்றைக்கும் நினைக்கத்தக்கதாகும். தமிழ்ப் பாடஞ் சொல்லிச் சொல்லி மாணக்கர் கூட்டத்தை வளர்த்து அவர்கள் மூலமாகத் தமிழறிவைத் தமிழ் மக்களுக்குப் பயன் படச்செய்த வள்ளல் இவர். எங்கெங்கே தமிழ் நூல்களை முறையாகப் படித்தறியும் உணர்வும் பழைய புராணங்கள் பிரபந்தங்கள் முதலியவற்றைப் பயின்று இன்புறும் இயல்பும் திகழ்கின்றனவோ அங்கெல்லாம் இவருடைய தொடர்பேனும் இவர்பாற் பாடங் கேட்டவர்களுடைய தொடர்பேனும் பெரும் பாலும் இருக்கும். இன்றளவும் ஓரளவில் புலவர்களுடைய நூல்களின்பால் உள்ள மதிப்புக்கு மூலகாரணம் இவரென்றே சொல்லலாம். தமிழ்த் தெய்வத்தின் திருத்தொண்டர்களாகித் தமிழகத்தைத் தமிழன்பில் ஈடுபடுத்திய பெரியார்களுடைய வரிசையில் இவரும் நிற்பர். தமிழ் நூற்கோவைகளில் இவ ருடைய நூல்களும் முத்துக்களைப்போல விளங்குகின்றன. இனியும் அவை தமிழ்மக்கள் உள்ளத்தில் இன்பத்தை உண் டாக்கிக்கொண்டே என்றும் குன்றா இளமையோடு விளங்கும். அவற்றை ஊன்றிப் படிப்பவர்கள் பிள்ளையவர்களின் புலமை உருவத்தை உணர்ந்து மகிழலாம். தமிழ் உள்ளளவும் இவ ருடைய பெரும்புகழ் நின்று நிலவுமென்பது திண்ணம்.

(ஆசிரிய விருத்தம்)

சுத்தமலி துறைசையிற்சுப் பிரமணிய தேசிகமெய்த்
தூயோன் றன்பால்
வைத்தமலி தருமன்பின் வாழ்ந்தினிய செந்தமிழை
வளர்த்தென் போல்வார்க்
கத்தமலி நூல்கணவின் மீனாட்சி சுந்தரப்பேர்
அண்ண லேதின்
புத்தமுத வாக்கினையு மன்பினையு மறவேனெப்
போது மன்றே.

———

# சிறப்புப் பெயர் முதலியவற்றின் அகராதி

[ எண் - பக்க எண் ]


அகத்தியத் திரட்டு 80.
அகத்திய முனிவர் 65.
அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழ் 107.
அகிலாண்டநாயகி மாலை 107
அசுவாருட மூர்த்தி 64
அடைக்கலப்பத்து 82, 95.
அதிவீரராம பாண்டியர் 101.
அப்பாப் பிள்ளை 68.
அப்பைய தீக்ஷிதர் 22.
அம்பர் 72-3.
அம்பர்ப் புராணம் 36 - 7, 74, 104, 106.
அம்பலவாண தேசிகர் 83.
அம்பலவாண தேசிகர் கலம்பகம் 107.
அம்பலவாண தேசிகர் பிள்ளைத் தமிழ் 107.
அம்பிகாபதி 101.
அம்பிகை 67.
அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் 14, 24, 107.
அரிபிரமாதியர் 51.
அரியிலூர் 1, 4.
அரியிலூர் ஜமீன் 4.
அருணாசல கவிராயர் 78.
அருணாசல செட்டியார் (சத்திரம்) 69.
அலங்காரம் (சங்கீதம்) 5.
அறத்தனிச் செல்வி 65.
அறந்தாங்கி 63.
அறுபத்து மூவர் குருபூசை மடம் 69.
அன்னமாம் பொய்கை 73.
அஷ்ட நாகபந்தம் 24.
அஷ்டப் பிரபந்தம் 14.
ஆதி குமர குருபர ஸ்வாமிகள் சரித்திரம் 106.
ஆத்மநாதஸ்வாமி 61, 64.
ஆலவாயடிகள் 63.
ஆற்றூர்ப் புராணம் 106.
ஆறுமுக தேசிகர் 68.
ஆறுமுகத்தா பிள்ளை 20, 25, 27, 31, 33, 58, 60, 71.
ஆறுமுக நாவலர் 42.

இரத்தின சபாபதி மாலை 4.
இராகவையர் 4.
இராமச்சந்திரத் தொண்டைமான் 69.
இராமசாமி ஐயர் 48.
இராமசாமிப்பிள்ளை (மதுரை) 99.
இராமாயணக் கீர்த்தனம் 78.
இலக்கண விளக்கம் 101.
இலக்குமி 67.

ஈமப் பள்ளி 84.

உடையார்பாளையம் ஸம்ஸ்தானம் 5.
உத்தமதானபுரம் 3.
உறையூர்ப் புராணம் 106.

ஊற்றத்தூர் (ஊட்டத்தூர்) 81.

எதிராஜ பிள்ளை 33.
எறிபத்த நாயனார் 19.
எறும்பீச்சரம் வெண்பா அந்தாதி 107.

ஐயாசாமி பிள்ளை 40.

ஒட்டக்கூத்தர் 109.
ஒட்டங்காடு 61.
ஔவை 73.

கச்சியப்ப முனிவர் 77, 100-1.
கச்சிவிநாயகர் பதிகம் 106.
கண்டதேவிப் புராணம் 106.
கண்ணப்ப நாயனார் 48.
கணபதி கவிராயர் 69.
கந்த புராணம் 30.
கப்பற்பாட்டு 108.
கம்பர் 101, 109.
கம்பரந்தாதி 24, 99.
கம்பராமாயணம் 4,75,97,100.
கரந்தை 60.
கல்யாணி ராகம் 6.
கல்லாடம் 53, 97, 99, 101.
கலைசைச் சிலேடை வெண்பா 24.
கற்குடி மாலை 107.
கனக சபை ஐயர் 18.
கனம் கிருஷ்ணையர் 5.
கவி வீரராகவ முதலியார் 101.
கஸ்தூரி ஐயங்கார் 4.
காசிக்கலம்பகம் 35.
காசிச் சாமி 35.
காஞ்சிப்புராணம் 97, 99, 104.
காஞ்சீபுரம் 54.
காதல் (பிரபந்தம்) 62.
காந்திமதியம்மை பிள்ளைத் தமிழ் 107.
கார்குடி 4.
காரிகை 4, 5.
காரை (ஓர் ஊர்) 72, 73, 75.
காரைக்குடி 69.
காலகம் (ஓர் ஊர்) 61.
காலாக்கினியுருத்திரர் 61.
காவிரி 73, 84.
காளிதாசன் 82.

கிருஷ்ணசாமி செட்டியார் 72, 73.

கீதம் (சங்கீதம்) 5.
கீழைச் சிந்தாமணி 58.

குசேலோபாக்கியானம் 106.
குடந்தைத் திரிபந்தாதி 33, 106.
குதிரை ஸ்வாமி 64.
கும்பகோணம் 26, 27, 33, 44, 46-7, 56-8, 61, 70.
கும்பகோணபுராணம் 33.
குமரகுருபர சுவாமிகள் பிரபந்தங்கள் 99.
குமரகுருபரர் 105.
குமாரசாமித் தம்பிரான் 35, 38-9, 54-5, 71, 76, 78-9.
குருசாமி பிள்ளை 41.
குருபரம்பரை அகவல் 108.
குரு பூசை மான்மியம் 69, 106.
குழந்தைவேற் பிள்ளை 73.
குளத்தூர்க்கோவை 107.
குற்றாலச்சிலேடை வெண்பா 50.
குற்றாலம் 50, 108.
குறுக்கைப் புராணம் 106.
குன்றக்குடி 68.
குன்றம் (குன்னம்) 4.

கூறை நாடு 12, 31.

கொன்னிடம் 56.

கோடக நல்லூர் 40.
கோச்செங்கட் சோழ நாயனார் 73, 74.
கோட்டுமாங்குளம் 46.
கோட்டூர் 34.
கோபாலகிருஷ்ண பாரதியார் 5, 11, 16-7.
கோமுத்தீசுவரர் 82, 95.
கோயிலூர்ப் புராணம் 106.

கௌரி சங்கரம் 89.

சக்கரபாணிப் பெருமாள் 26.
சங்கர நமச்சிவாயர் 53.
சச்சிதானந்ததேசிகர்மாலை 107
சடகோபையங்கார் 1, 4.
சண்டிகேசுவரர் 51.
சண்பகக் குற்றாலக் கவிராயர் 36, 51.
சத்தி முற்றம் 27.
சபாபதி முதலியார் (அஷ்டாவதானம்) 53.

சாளி வரிசை 5.
சவராயலு நாயகர் மாலே 107.
சவுனகாதியர் 68.
சவேரிநாத பிள்ளை 18, 81, 82,
சாமா 16.
சாமிநாத முனிவர் 78.
சாமிநாதன் 16.
சிங்கைச்சிலேடை வெண்பா 50.
சித்திரச்சத்திரப் புகழ்ச்சி மாலே 107.
சிதம்பரம் பிள்ளை(குமார்) 4, 41, 79, 84, 87.
சிதம்பரேசர்மாலே 107.
சிலம்பி 73.
சிவகங்கை ஸம்ஸ்தானம் 62.
சிவஞான முனிவர் 85, 101.
சிவஞான முனிவர் பிரபந்தங்கள் 99.
சிவஞான யோகிகள் 76-8.
சிவஞான யோகிகள் சரித்திரம் 106.
சிவப்பிரகாச சுவாமிகள் 36.
சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தங்கள் 36, 99.
சிவப்பிரகாசர் 101.
சிவபிரான் 94.
சிவபெருமான் 64, 67, 94, 104.
சீகாழி 41 – 2.
சீகாழிக் கோவை 107.
சீகாளத்திப் புராணம் 39, 104.
சுத்தரத்தினேசுவரர் 81.
சுதர்மன் 67.
சுந்தரஸ்வாமிகள் 40, 41.
சுப்பிரமணிய சுவாமி பதிகம் 106.
சுப்பிரமணியத் தம்பிரான் 43, 61-2, 66, 68.
சுப்பிரமணிய தேசிகர் 20-1, 23-4, 36, 39, 41, 43, 46-9, 53, 55, 71, 76-9, 81-4, 86 - 7.
சுப்பிரமணிய தேசிகர் நெஞ்சுவிடு தூது 107.
சுப்பிரமணிய தேசிகர் மாலே 107.
சுப்பிரமணிய தேசிகர் (வேளூர்) 26.
சுப்பிரமணியர் 52.
சூடாமணி நிகண்டு 4.
சூதசங்கிதை 22, 106.
சூத முனிவர் 68.
சூரிய மூலே 48, 49.
சூரை மாநகர்ப் புராணம் 106.
செங்கணம் 4, 24.
செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ் 14, 24.
செவ்வந்திப் புராணம் 99.
சேக்கிழார் 65-6, 101.
சேக்கிழார் பிள்ளைத் தமிழ் 65-6, 71, 107.
சேந்தன் 73.
சைவ சித்தாந்த சாஸ்திரங்கள் 104.
சொர்க்கபுர மடம் 58, 72.
சோமாசிமாற நாயனுர் 21, 74.
சோழமண்டலம் 73.
சோழராசன் 67, 73.
தஞ்சாவூர் 60-1,
தஞ்சை 70.
தஞ்சைவாணன் கோவை 42-3.
தண்டியலங்காரம் 5, 23.
தண்டபாணி பதிற்றுப்பத்தந்தாதி 107.
தணிகைப் புராணம் 99.
தமிழ்க் காளிதாசன் 83.
தனியூர்ப் புராணம் 106.
தாண்டவராயத் தம்பிரான் 86
தாராசுரம் 27.
தானப்பாசாரியார் தசவிடு தூது 107.
திட்டகுடிப் பதிகம் 106.
தியாகராச செட்டியார் 26-8, 46-8, 57, 70, 90.
தியாகராச லீலே 104, 106.
திரிசிரபுரம் 2, 100.
திருக்கருகாவூர் 27.

திருக்குடந்தைத்திரிபந்தாதி 14.
திருக்குடந்தைப் புராணம் 106.
திருக்குற்றாலப் புராணம் 51.
திருக்குற்றால யமகவந்தாதி 16.
திருக்குறள் 53, 97.
திருக்கோகர்ணம் 69.
திருக்கோடிகா 83.
திருக்கோத்தும்பி 81.
திருச்சிராப்பள்ளி 56, 58, 60, 90.
திருச்சிராமலை யமக அந்தாதி 107.
திருச்சிற்றம்பலக் கோவையார் 50, 53, 89, 101.
திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பதிற்றுப்பத்தந்தாதி 107.
திருத்துருத்தி 83.
திருத்துருத்திப் புராணம் 106.
திருத்தொண்டத் தொகை 65
திருநாகைக்காரோணப்புராணம் 9, 29, 53, 104, 106.
திருப்புகலூர்த்திரிபந்தாதி 14.
திருப்புகலூரந்தாதி 101.
திருப்பெருந்துறை 43-4, 60, 61, 68, 70-2.
திருப்பெருந்துறைப் புராணம் 43, 45-6, 54-5, 58-60, 64, 66-7, 106.
திருப்பைஞ்ஞீலித் திரிபந்தாதி 107.
திருமயிலைப்புராணம் 106.
திருமலைராயனாறு 27-8, 30.
திருமழபாடி 40.
திருமால் 67.
திருவண்ணாமலை ஆதீனம் 68.
திருவம்பர் 37
திருவரன்குளப் புராணம் 70, 106.
திருவரன்குளம் 70.
திருவாசகம் 79, 81-2, 84, 95, 97.
திருவாதவூரடிகள் 55,62,64,68.
திருவாதவூரடிகள் புராணம் 64.
திருவாரூர் 84, 101.
திருவாரூர்க் கோவை 80.
திருவாவடுதுறை 8, 20-1, 34,37-8,41, 43,45,49,54,67, 69-72, 75-6,79-81, 86, 89, 91, 104.
திருவாவடுதுறை ஆதீனம் 86.
திருவாவடுதுறைச் சிலேடை வெண்பா 107.
திருவாவடுதுறைப் புராணம் 78.
திருவாவடுதுறை மடம் 60, 109
திருவாவடுதுறை யமக அந்தாதி 107.
திருவிடைக்கழிக் குறவஞ்சி 108.
திருவானைக்காத்திரிபந்தாதி 107.
திருவானைக்காப் புராணம் 39,40, 99.
திருவிடைக்கழி முருகர் பிள்ளைத் தமிழ் 107.
திருவிடைமருதூர் 26, 60, 71, 76-9, 83.
திருவிடைமருதூர்த் திரிபந்தாதி 76, 107.
திருவிடைமருதூருலா 52, 73, 105, 107.
திருவூறைப் பதிற்றுப்பத்தந்தாதி 107.
திருவெண்ணீற்றுமை பிள்ளைத் தமிழ் 107.
திருவேங்கடமலை 3.
திருவேங்கடமாலை 4, 45.
திருவேரகத்து யமகவந்தாதி 14.
திருவையாறு 40-1.
தில்லையமகவந்தாதி 14 107.
தில்லைவிடங்கன் 53, 87.
திவாகரம் 75.

துவடுகநாத துரை 62.
துறைசை 49.
துறைசையந்தாதி 24.
துறைசை யமகவந்தாதி 14.

துறைமகங்லம் 36, 101.

தேவகோட்டை 69.
தேவார திருவாசகங்கள் 22.
தேவாரம் 69, 73, 79, 97, 101, 104.

நகரம் (ஓர் ஊர்) 66.
நடராசப் பெருமான் 104.
நடராஜமூர்த்தி 82.
நடுநாடு 77.
நந்தன் (அரசன்) 37, 73.
நந்தன் சரித்திரக் கீர்த்தனம் 78.
நம்பியார் (கோவில் அருச்சகர்) 64.
நவநீதப் பாட்டியல் 5.
நன்னூல் 4.
நன்னூல் விருத்தியுரை 49.
நன்னூற்காண்டிகையுரை 4, 49.

நாகேசுவர ஸ்வாமி கோயில் (கும்பகோணம்) 56.
நாயன்மார்கள் 66.
நால்வர் நான்மணி மாலை 36.

நிகண்டு 6.
நிரோட்டகயமகவந்தாதி 63.

நீடாமங்கலம் 58.
நெல்லையப்பத்தம்பிரான் 60.
நெற்குன்ற வாண முதலியார் 101.

நைடதம் 4, 5, 10, 11, 14, 32.
நைமிச முனிவர் 68.

பகழிக்கூத்தர் 105.
பட்டீச்சுரப்புராணம் 106.
பட்டீச்சுரம் 8, 25-7, 32-3, 54-5, 57-8. 60, 71.
பட்டுக்கோட்டை 61.
பட்டுக்கோட்டைத் தாலூகா 66
படிக்காசுப் பிள்ளையார் 73.
பரமசிவத்தம்பிரான் 35.
பழமலைப்பதிற்றுப்பத்தந்தாதி107.
பழமலைத்திரிபந்தாதி 14.
பழனிக்குமாரத் தம்பிரான் 61, 63.

பாகம் பிரியாள் பிள்ளைத் தமிழ் 107.
பாண்டியன் 64.
பாபதாசம் 3, 4, 61.
பாலசுந்தரபுரம் 56.
பாலசுந்தர முதலியார் 56.
பாலசுப்பிரமணியத் தம்பிரான் 19.
பாலைவனப் பதிற்றுப்பத்தந்தாதி 107.
பாலைவனம் (ஓர் ஊர்) 66.
பாவநாச முதலியார் 78.

பிச்சுவையர் 61-3.
பிரகதம்பா பாய் சாகேப் 69.
பிரம்மவித்தியாநாயகி பிள்ளைத் தமிழ் 107.
பிரம தேவர் 67, 73.
பிள்ளையவர்களியற்றிய நூல்கள் 106-8.

புகலூரந்தாதி 89.
புகழேந்தி 109.
புதுக்கோட்டை 62, 66, 69, 70.

பூவாளூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி 107.

பெரியநாயகியம்மை 70.
பெருந்திருப் பிராட்டியார் பிள்ளைத் தமிழ் 107.
பெருந்துறை (திருப்பெருந்துறை) 68.
பெரும்புலியூர் (பெரம்பலூர்) 4.
பெரும்புலியூர்த் தாலூகா 72
பொருத்த இலக்கணம் 5.
பொன்னியாறு 56.
பொன்னூசல் 108.
போஜன் 83

மகாலிங்க மூர்த்தி 71.
மகாலிங்கையரிலக்கணம் 4.

மகாவைத்தியநாதையர் 21, 40, 48, 51-2.
மங்களம் 108.
மங்களாம்பிகை பிள்ளைத் தமிழ் 107.
மண்ணிப் படிக்கரைப் புராணம் 106.
மணவாள நாராயண சதகம் 4.
மணிவசன மாகாத்மியம் 64.
மயில்ராவணன் சரித்திரம் 106.
மருதவாணர் பதிகம் 71, 106.
மருதூர் யமக வந்தாதி 14.
மறைசையந்தாதி 14.
மாசிலாமணியீசர் 76.
மாணிக்க வாசகர் 64-5, 67.
மாதவிவனம் பிள்ளை 27.
மாயூரப் புராணம் 29, 106.
மாயூரம் 2, 8, 11, 19, 20, 25, 32, 34, 42-5, 79, 81.
மாரிமுத்தா பிள்ளை 53, 78.
மீனவன் (பாண்டியன்) 64.
மீனாட்சிசுந்தரேசர் 3.
மீனாட்சியம்மை 41.
மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் 14.
முடிகொண்டான் 5, 16.
முத்தாம்பாள்புரம் (ஒரத்த நாடு) 61.
முத்துக் குமாரசாமி பிள்ளைத் தமிழ் 14, 19.
முத்துத் தாண்டவர் 78.
முத்து வடுகநாத துரை 62.
முத்து வீரப்ப பிள்ளை 62.
முருகக் கடவுள் 3, 4, 19, 43.
முருகப் பிரான் 31.
முல்லையந்தாதி 99.
மெய்யப்ப செட்டியார் 69.
மேலகரம் 36, 51.
மேலைப் பழையாறை 28.
யாப்பிலக்கணம் 9.
ரதபந்தம் 24.
ரிஷப தேவர் 27.
லாலி 108.
வர்ணம் (சங்கீதம்) 5.
வரதுங்கராம பாண்டியர் 101.
வல்லநாட்டுப் பெருங்குடி வணிகர் 70.
வன்றொண்டச் செட்டியார் 50, 61, 65, 69.
வன்றொண்டர் 61.
வன்றொண்டர் (சுந்தரமூர்த்தி நாயனார்) 65.
வாட்போக்கிக் கலம்பகம் 22, 107.
வாழ்த்து 108.
வாளொளி புற்றூர்ப் புராணம் 106.
விநாயகர் 6, 39, 52.
வியாசைக் கோவை 108.
விருத்தாசல ரெட்டியார் 1, 4, 24
விருத்தியுரை (நன்னூல்) 53.
விளத்தொட்டிப் புராணம் 106.
வீரவனப் புராணம் 106.
வெங்கைக் கோவை 60.
வெயிலுவந்த பிள்ளையார் 44-5.
வேங்கடஸுப்பன் 3.
வேங்கடராமன் 16.
வேதநாயகம் பிள்ளை 42, 87.
வேலாயுதம் பிள்ளை (வேலுப் பிள்ளை) 72, 74-5.
வேலுச்சாமி பிள்ளை (வெண்பாப் புலி) 53, 87.
வைத்தியநாத தேசிகர் 44, 109.
வைரவ ஐயா (வெளி முத்தி) 61.
ஸ்ரீ காசி ரகசியம் 106.
ஸ்வாமி மலை 1.
ஸாமி ஐயங்கார் 4.
ஸாவேரி ராகம் 6.
ஹரதத்த சிவாசாரியார் 22
ஹரதீர்த்த ஸ்தலேசர் 70.

The Hind Press Private Ltd.